பூவை ஆறுமுகம்

எழுதிய

# அன்னக்கிளி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

"அயித்தை" மகன் மீது காதல் கொண்ட ஒரு கிராமப் பெண்ணை பற்றிய கதை, அன்னக்கிளி! வரிக்கு வரி கிராமப்புற மணங்கமழும் காதல் கதை.

ஆசிரியர்.

# 1 ஆத்தா, அன்னக்கிளி!

"ஆத்தா! ..." என்று விளித்த வண்ணம் வாசல் திட்டில் கூண்டு வண்டியை நிறுத்தினர், ஆதியப்ப அம்பலம். சந்தைப்பேட்டைப் பூரணிக் காளைகள் இரண்டும் தலைகளை உலுக்கிக் கழுத்து மணிகளைக் குலுக்கிக் கொண்டன. அம்பலம் வண்டி நுகத்தடி வழியாக 'வாகு' பார்த்துத் தாண்டி, பதினறு வயசு இளசுபோல் தரையில் குதித்தார். கட்டுக் குடுமி கட்டவிழ்த்துக் கொண்டது. அதைத் தட்டிவிட்டு முடிந்து கொண்டார்.

"ஆத்தா! ... அன்னக்கிளி! ..."

அருமை மகளை மறுதரமும் அழைத்தார். பூவரசம் மரத்தடியில் இருந்த தண்ணீர்த் தொட்டியைக் குறி வைத்துக்கொண்டிருந்த செவலைகள் இரண்டையும், முளைக்கழிகளைக் கழற்றி அவிழ்த்து ஓட்டிச் சென்று தண்ணீர்த் தொட்டியடியில் கட்டுக் கம்பிலே கட்டிப் போட்டார். அவர் கண்கள் நிலைப்படியை நோக்கிப் பாய்ந்தன.

"அப்பன்காரன் கூப்பிட்ட குரலுக்கு எம் பொண்ணு வீட்டுக்குள்ளாற இருந்திருந்தாக்க, இம்மாம் பொழுதுக்குப் பூஞ்சிட்டாட்டம் பறந்தோடி வந்திருக்குமே! அந்தியாலப் பொழுதுக்கு அது கேணிப் பக்கம்கூடப் போயிருக்காதே! ... ஒரு வேளை, அதோட சிநேகிதி பொன்னுத்தா வீட்டை நாடிப்

பரிஞ்சிருக்குமோ?... ஊம், அப்பிடித்தான் எனக்கு ரோசனை தாவுது!"

மனம் நாரானுல், எண்ணங்கள் பூக்களாகி மலர்ச்சரம் உருவாகக் கேட்கவா வேண்டும்?

அம்பலத்தின் அடி நெஞ்சில் இருந்து நெடுமூச்சு வெளியே றிக் கொண்டிருந்தது. உருமாலே சுற்றிக் கிடந்த துவாலேயை எடுத்து மேனியைத் துடைத்துக் கொண்டார்; இடுப்பு வேட்டி யின் மடிப்பில் சிந்திக் கிடந்த நரை முடிகளைத் தள்ளிவிட்டார். முதுகுப் பக்கத்தில் அரிப்பு ஏற்பட்டது. துண்டை முதுகு வச மாகக் கொடுத்து வழித்துவிட்டுக் கொண்டார். கொஞ்சம் உணக்கையாக இருந்தது. துண்டை உதறி முண்டாசு கட்டிக் கொண்டார். பசி வயிற்றைக் கிள்ளியது. கோழி கூப்பிட்ட நேரத்தில் பழஞ்சோறு ஒரு வட்டி சாப்பிட்டுவிட்டு, ஒரு வாய்க்கு வெற்றிலேச் சருகு போட்டுக்கொண்டு, அறந்தாங்கிச் செவ்வாய்ச் சந்தைக்குச் 'சத்தம்' பேசிக்கொண்டு வண்டி ஓட் டிச் சென்ற மனிதர், சந்தைப்பேட்டையில் ஒரு லோட்டா சாயாத் தண்ணீர் சாப்பிட்டதுதான், அப்புறம் பச்சைத் தண் ணீரைக்கூட நாடவில்லே.

சாயாவுக்கு அந்தச் செட்டியார் காசு கொடுப்பதாக எவ்வ ளவோ மன்றாடினார். ஏழு காசு விஷயம்! —ஆனல் அம்பலம் மறுத்துவிட்டார். "உங்க பொண்ணு கண்ணுலத்துக்கு சாமான் சட்டு வாங்கிக்கிட்டுப் போறதுக்கு வாடகை பேசி வண்டி அமர்த்திக்கிட்டிருக்கீங்க. அதுக்குண்டான வாடகையையும் எங்கிட்டே நீட்டிப்புடப் போறீங்க. அப்பாலே, ஓசியிலே நீங்க எனக்குத் தேத்தண்ணி வாங்கித் தந்து, நானும் அதைக் குடிக் கிறது அவ்வளவு லாயக்காகத் தோணலீங்க, எம்மட்டுக்கு!..." என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார், அம்பலகாரர்.

திருவம்பலச் செட்டியாருக்கு அவர்மீது புதிய பற்று விழுந் தது. ஆனல், தமது கணக்கில் பற்று ஆகவிருந்த தொகையை

ஏழு காசு மிச்சம் ஆகிவிட்டது! —செட்டியாருக்கு!

வீட்டின் முகப்பை அடைந்தார், ஆதியப்ப அம்பலம். இடதுபுறம் இருந்த வேப்பமரம் அற்புதமான காற்றை வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தது. அம்பலத்தின் மேனி அயர்வுக்கு அக்காற்று எவ்வளவோ இதமாக இருந்தது. 'முத்தாயி இருந்திருந்தாக்க, இம்மா நேரத்துக்கு சுடுதண்ணி ஒரு முட்டி கொதிக்கவச்சுக் கொடுப்பா. மொண்டு ஊத்திக்கிட்டால், உடம்பு அலுக்கு போன இடம் தெரியமாட்டாது! கொண்டவ என்னோட சொகத்தையும் கொண்டுக்கிட்டுப் போயிட்டா! ... என்னமோ இந்த மனசு இப்ப இப்பிடி நெனைக்குது! ... என்னோட சுகம் இப்பவும் யாதொரு விக்கினமும் இல்லாமத்தான் இருக்குது. என்னோட தங்கப் பொண்ணு அதுக்கு ஆனமட்டுக்கும் எம்புட்டோ சவரணை பண்ணித்தான் தருது. இதுக்கே நான் எவ்வளவோ சந்தோசப்பட்டுக்கிட்டு இருக்கேனே! பின்னே என்னவாம்? சந்தைப்பேட்டையிலே எட்டின சேதி மெய்யாயிருந்து, அதுப்படி வீரமணி அக்கரைச் சீமையிலேயிருந்து வந்திட்டால், நாளைக்கே அது எங்க அக்கா மவன் வீரமணிக்கு வாக்கப்பட்டுக்கிட்டு வேறே வீடு போற தங்கம் தானே? எப்பவுமே என் சொகத்தையே கருதிக்கிட்டு இருக்க ஏலுமா? ஊகூம்! ...' இன்னும் என்னென்னவெல்லாமோ எண்ணங்கள் ஓடின.

ஆனால் அதற்குள், அவரது உள்ளத்தின் ஓட்டம் தடைப்பட்டது.

"அக்கா பொண்ணே, அன்னக்கிளியே!" என்று கூப்பாடு போட்டவாறு புள்ளி மானைக ஓடிவந்தாள், பொன்னுத்தாய். மகிழ்வின் துள்ளலோடு கைவீசி வந்தவள், வாசலில் நின்று கொண்டிருந்த அன்னக்கிளியின் தந்தையைக் கண்டதும், அப்படியே ஒதுங்கி நின்றாள். விலகியிருந்த மாரகச் சேலையைச் சீர் செய்துகொண்டபின், "அக்கா உள்ளே இருக்குதுங்களா, பெரி

யப்பா?" என்று வினவினுள்.

இக் கேள்வியைக் கேட்டதும் அம்பலத்துக்குத் திகில் மூண்டது.

"என்ன தங்கச்சி இப்பிடி கேக்கிறே, நீ? மகள் உன் வீட்டுக்கு வந்திருக்கும்னு நான் நெனேச்சுக்கிட்டு, அங்கிட்டாலே வரவேணும்னு நின்னுக்கிட்டிருக்கேன்" என்று பதட்டம் மூளக் கூறினர், அவர்.

மாட்டின் மணிச் சத்தம் கேட்ட சடுதியில் ஓடிவந்து 'அப்பா' என்று அன்புடன் அழைக்கும் அன்னக்கிளி இப்போது வராததைக் கண்டபோதே, அவர் மனத்தில் என்னவோ, ஒரு சலனம் உள்ளுக்குள் ஏற்படத்தான் செய்தது. ஆனுல், இப்போது அந்தச் சலனம் நன்கு புலனுகி, குழப்பம் என்ற புதிய நிலையையும் கொடுத்துவிட்டது. ஏதேதோ பயங்கர நினைவுகள் அவருள் பாய்ந்தன. மறுகணம், "ஆத்தா மூத்தவளே! எம் பொண்ணு உன் குஞ்சு என்கிறதை மட்டும் எப்பவும் மறந்துப் புடாதே! ... வளமையா நான் ஓங்கிட்டே நினைப்பூட்டுகிற தாக்கல்தானுக்கும் இது! ... இல்லையா பின்னே?" என்று சுவாதீன உணர்ச்சியுடன் அவர் பிரார்த்தனை செய்தார். கண்கள் கலங்கி விட்டன.

அடியெடுத்து வைத்த திகிலுடன் முகப்பு வாசலில் அடியெடுத்து வைக்கத் தலைப்பட்ட அம்பலத்தின் செவிகளில், காளைகள் முரண்டு பண்ணிய சத்தம் கேட்கவே, பின்வாங்கினுர். தண்ணீர்த் தொட்டியில் கழுநீர் குறைந்துவிட்டிருந்தது. 'களவடை' யில் இருந்த பாலைவனத் தாளியில் இருந்த வடிதண்ணீரை எடுத்துத் தொட்டியில் ஊற்றினுர்; கூடையில் இருந்த தவிட்டில் பதக்கு எடுத்துத் தூவினுர். அடியில் கரையாமல் பிசிறு தட்டிக் கிடந்த பிண்ணுக்குத் துண்டங்களை உடைத்துக் கலக்கிவிட்டார்.

மாடுகள் 'மூசு மூசு' வென்று குடிக்கத் தொடங்கின. பூவ

ரசம் பூக்கள் மஞ்சளும் சிவப்புமாக உதிர்ந்தன.

முகப்பு வாசலில் கால்பாவி நடந்து நிலைப்படியைத் தொட்டு நடையை அடைந்தபொழுது, நடையின் மேலத் தொங்கல் கதவு அடைக்கப்பட்டு இருந்தது. "ஆத்தா! ..." என்று ஆதியப்ப அம்பலம் அலட்டினார். பொட்டுப் பொழுது தாண்டியது; ஆனால், அமைதியை அரவணைக்கத்தான் 'அப்பா!,' என்னும் குரல் ஓடிவரவில்லை.

"ஆத்தாடி... அன்னப் பொண்ணு!" என்று அடுத்த முறையும் கூப்பிட்டார். குரலில் இழை பின்னியிருந்த நடுக்கம் இப்போது அவர் மேனியையும் பற்றியது. அடிவயிற்றில் பதட்டம் மூண்டது. களைப்பும் கலக்கமும் அவர் முகத்தின் சுருக்கங்களைக் கூடுதலாக்கிக் காட்டின. இம்முறையும் யாதொரு பதில் குரலும் வராமல் போகவே, கதவடிக்கு நகர்ந்து வெளி நாதாங்கியைப் பிடித்துக்கொண்டு "பட பட"வென்று ஓசைப்படுத்தித் தட்டினார்.

பின்புறத்தில் பொன்னுத்தா வந்து நின்றாள்.

"பெரியப்பா, நீங்க கொஞ்சப் பொழுதுக்கு சும்மா நில்லுங்க. வயசு காலத்திலே இம்மாந்தூரத்துக்கு அலட்டிக்கிடப்புடாதுங்க. நானே கதவைத் தட்டிப் பார்க்கிறேனுங்க!" என்றாள் பொன்னுத்தா.

அவளைப் பார்த்து விநயமாகச் சிரித்தார், அம்பலம். "இந்த மாம்பலகைக் கதவைத் தட்டுறதுக்குக்கூடவா எனக்கு சத்துக் கெட்டுப் போயிட்டுது? நல்ல பொண்ணுதான் போ! ..." என்று சொல்லி, ஒருமுறை தம்மைக் குனிந்து பார்த்துக் கொண்டார்.

காலத்தின் தேய்வுடன் உடல் வளப்பம் தேய்ந்திருந்தாலும், அந்த உடல் வளப்பத்தின் கம்பீரத்தையும் கட்டுக்கோப்பையும் தம் மேனியில் அங்கங்கே அவரால் காண முடிந்தது.

பொன்னுத்தா கதவை இடிக்க ஆயத்தப்பட்டதை வெகு

நயமாகத் தடுத்தார், அவர். "சின்னப் பொண்ணு நீ...! ஒனக்கு எங்க கதவோட நெளிவு சுளிவு தெரியாது. இந்தாப் பாரு, ஒரு நொடியிலே நான் கதவைத் தொறந்து காட்டுறேன்" என்று கூறினார். சமைந்த பெண்ணுக்குக் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் பேசியதில் அவருக்கு ஓர் அமைதி கனிந்திருந்தது.

மீண்டும் கதவைத் தட்டினார், அம்பலம்.

அவசரமாகக் கதவின் தாழ் விலக்கப்படும் அரவம் மெல்லக் கேட்டது.

அதுவரை இதயத்தில் அரவமாக நெளிந்து கொண்டிருந்த கவலை, மெள்ள மெள்ள விடை பெற்றுக் கொண்டிருப்பதாக அவருக்குப் பட்டது. அதே நேரத்தில் கதவைச் சத்தமிட்டுத் திறந்தவளாக, முகம் காட்டி வந்து நின்றாள், அன்னக்கிளி.

"ஆத்தா அன்னக்கிளி!" என்று ஆனந்தப் பரவசத்துடன் அழைத்தார், ஆதியப்ப அம்பலம். இந்த அரைநாழிகைப் பொழுதிற்குள் அவரது உள்மனம் அடைந்த வேதனைக்கு ஒரு பரிகாரமாக அவரது அழைப்பில் ஆனந்தப் பரவசம் துள்ளியது.

"அப்பா, நீங்க வந்து ஊர்ப்பட்ட நேரமாயிடுச்சா?" என்று கலவரமும் பதட்டமும் கலந்த குரலில் கேட்ட அன்னக்கிளி, கலைந்து கிடந்த முடிச் சுருள்களை ஒதுக்கிவிட்டுக் கொண்டு, தந்தையை உற்றுப் பார்த்தாள்.

"ஊம்...!" சிறுபொழுது அருமை மகளைக் காணவில்லை என்றவுடன் தான் பட்ட பாட்டை அவர் எண்ணிப் பார்த்தார். அளவுக்கு மீறியதொரு பதட்டமாக அவருக்குத் தோன்றியது. என்றாலும், அந்த மனைவாவனையின் மறுபுறம் திருப்பப்பட்ட போது, அவரது துடிப்பும் சஞ்சலமும் இயல்பாகவே அவருக்குத் தோன்றின. 'பின்னே என்னவாம்?... சமைஞ்ச பொண்ணைக் கட்டிக்குடுக்கிற பரியந்தம் அதைப் பற்றின கவலையெல்லாம் அதோட அப்பன் ஆத்தாளைத்தானே சாரும்?—அன்னத்



கதவைத் திறந்த அன்னக்கிளி, வெளியே தன் தந்தை நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

தைப் பெத்தவ மூணும் மகம் சமயத்திலே கண்ணை மூடிக் கிட்டா. இப்போ நான் கண்ணை மூடாமல் என்னோட செல்லத் தைக் காபந்து செஞ்சுக்கிட்டு வாரேன்! ... என்னோட அந்தத் திட்டப்படியும் எங்க அன்னத்தோட ஆசைப்படியும் வீரமணி பொறந்த மண்ணை மிதிச்சு, வார ஆவணியிலே அதுக கண்ணு லத்தை ஆத்தா அங்காளம்மை நடத்தி வச்சுப்புட்டாக்க, அவ ளுக்கு மேலேக்கு வெல்லச் சோறு பொங்கல் வச்சு பள்ளயம் படைச்சுப்புடணும்! ... ஊம்..."

"அப்பா!"

"என்ன அன்னம்?"

"போயி கைகால் கழுவிக்கிணு வாங்க. சுடுசோறு உண்ண லாம்."

"ஆமா ஆத்தா! ... நீ ஏதுக்கு இப்பிடி கதவைச் சாத்திக் கிட்டு உள்ளே இருந்தே?"

அன்னக்கிளி விடை சொல்லவில்லை. தந்தையை ஆதரவு கூழித்திட ஒருபயணம் பார்த்தாள். "அப்பாலே சொல்லு றேன், அப்பா! ... சுருக்கா வாங்க சாப்பிட!" என்று துரிதப் படுத்தினுள் மகள்.

அம்பலம் புதிய தெம்புடன் புதல்வியைப் பார்த்து அமைதி யுடன் சிரித்தவாறு; முண்டாசுத் துவலியை அவிழ்த்து உதறிய படி வாசல் வெளிக்கு விரைந்தார்.

விரைந்தவர் திரும்பவும் அன்னக்கிளியை நோக்கி திரும்பி ஞர். "ஆத்தா, ஒனக்கு மேலுக்கு ஒண்ணும் இல்லியே?" என்று கேட்டு, அதற்கு விடையாக, "அதெல்லாம் ஏதுமில்லீங்களே" என்று அவள் பதிலை வாங்கிக் கொண்டு, அதன் காரணமாய் அமைதி கண்ட நெஞ்சத்துடன் தண்ணீர்ப் பானையைத் தஞ்சு மடைந்தார்.

"வெக்கை தாளலேயே? ... வருற ஆடிக்கு வயக்காட்டிலே நாள் முச்சூடும் கைவேலை செஞ்சுக்கிட்டிருக்கையிலே உடம்பு

எரியுமே, அது கணக்கிலேதான் இப்பவும் எரியுது!... ரத்தப் பசை மாற மாற, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாத் தானே தோணும்?...' என்று தனக்குத் தானே கருதியவராக, நாலு செம்பு தண்ணீர் எடுத்துத் தலையில் ஊற்றிக் கொண் டார். வேட்டியின் முனையில் முடிந்திருந்த பணத்தைத் தொட் டுப் பார்த்துக்கொண்டார்.

விபூதிப் பையில் இருந்து துளி விபூதியை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, மறு துளியை எடுத்து நெற்றி மேட்டில் இட்டுக்கொண்டு, குடுமியை ஒரு தட்டுத் தட்டிவிட்டவராக, தம் மகளின் வாழ்வை எண்ணித் தியானம் செய்தபின், ஞாபக மாக வண்டியை அடைந்து வண்டியின் உட்புறத்தில் இருந்த மூங்கில் கழி ஒன்றில் தொங்கவிடப்பட்டிருந்த பையை எடுத் துக்கொண்டு வீட்டிற்குள், நுழைந்தார்.

அப்போது, "ஆமா, தங்கச்சி. நான் கொண்டிருக்கிற நெனைப்பு இது. இதுப்படி நடக்கிறதுக்கு ஆத்தா மூத்தவளும் அக்கரைச் சீமையிலேயிருந்து வரப்போற எங்க சொந்த அயித்தை மகன்காரவுகளும் அனுசரணையாயிருந்தாத்தான் என் னோட கனு பலிக்க முடியும்!..." என்று தீர்மானமான குரலு டன் தம் மகள் செப்பி முடித்ததை, ஒண்டலில் ஒதுங்கி நின்று கேட்கவும் அவர் தவறவில்லை.

"மெய்தான் அக்கா!" என்றாள் பொன்னுத்தா!

மகளின் வாய் வார்த்தைகளை அடித்தளமாக்கி மறுபடியும் அவள் பேச்சை வைத்துச் சிந்தித்துப் பார்த்த அம்பலத்துக்கு, ஏதோ ஒரு சம்பவம் சூடுபிடித்திருக்க வேண்டும் என்கிறவரை யில் அவருள் ஓர் அனுமானம் கருக்கொண்டிருந்தது. பசிக் கிறக் கம் அவரைத் தள்ளாடச் செய்தது. ஆகவே, அவர் உள்ளே விரைந்தார். முற்றத்தை ஒட்டித் தணிந்திருந்த தென்னங் கீற்று கள் சில தாறுமாறாகப் பிரிந்திருந்தன. மூன்றாம்நாள் விடிசாமத் தில் பெய்த கோடை மழை அற்பசொற்பமல்லவே!. 'இந்த

மழை மட்டும் ஆடிப்பட்டம் சமயத்திலே கொட்டியிருந்தா, நாம அல்லாரும் சாமியைத் தலையிலே தூக்கிவச்சுக் கூத்தாடுவோமே!... வார மகர் நோம்புத் திருநாளைக்கு தேர் ஊர்வலத்தைத் தடபுடலாய்க் கொண்டாடி நடத்திப்பிடுவோமே!...' என்று அக்கம் பக்கத்தில் சிலாகித்துக் கொண்டார்கள்.

பிரிந்திருந்த கீற்றுகளை வசம் பார்த்து எடுத்து ஒதுக்கி வைத்து, பாளைக் கிழிசலைக் கொண்டு அவற்றுக்கு ஒரு முடி போட்டுக் கட்டியபின், கையை உதறி மண்ணைப் போக்கிக் கொண்டு உட்புறத்தில் நுழைந்தார்.

தந்தையைக் கண்டவுடன் மகள் எழுந்தாள். "வாங்கப்பா!," என்று உபசரித்தாள். கழுவி வைத்திருந்த குறிஞ்சிப்பாடி வட்டியை எடுத்து, அதில் ஒட்டியிருந்த தண்ணீரைக் கவிழ்த்து விட்டு, வசம் பார்த்து வைத்தாள். பிறகு தகப்பனை நோக்கி, "குந்துங்க; துண்ணறு தரவா அப்பா?" என்றாள். அதே தருணத்தில், தன் அப்பாவின் நெற்றியில் இலங்கிய திருநீற்றின் கம்பீர ஒளியை அந்தி வெளிச்சத்தில் கண்டதும், "துண்ணறு பூசிக்கிட்டீங்களாக்கும்! சரி, சரி, குந்துங்க!" என்று ஒரே மூச்சில் பேசலானாள், அன்னக்கிளி.

நிதானமான போக்குடன் அம்பலகாரர் சுற்றும் பார்வையை வீசினார். "எங்கே, பொன்னாத்தாளைக் காணலே? கொஞ்சம் முந்தி அது குரல் கேட்டுச்சே?" என்று மிகவும் பதனமாக விசாரித்தார்.

"அது அடுப்படியிலே இருக்குங்க அப்பா!" என்று அவள் பதில் சொல்லிக் கொண்டிருக்கையில், உள்ளேயிருந்து நேர்த்தி மிக்க வாசனை மிதந்து வந்தது.

வாசனையை அனுபவித்த அவர், கைகளை ஊன்றித் தரையில் உட்கார்ந்து கொண்டு, "ரொம்பப் பிரமாதமா இருக்குதே, சுறுக் கருவாடு வாசனை!... ஒரு கடுத்தம் நம்ம வீரமணி

அக்கரைச் சீமையிலேயிருந்து குடுத்துவிட்ட அதே கருவாட்டு நெடி கணக்குக்கு இருக்குதே!... ஆத்தா, எங்கிட்டிருந்து இந்த வாசனே ஓடிவருது?" என்று ஆவல் பொங்கக் கேட்டார். அவர்.

அதற்கு அன்னக்கிளி வெறும் நாணச் சிரிப்பை மட்டுமே உதிர்த்தாள். பச்சைச் சுங்கடியின் முகதலேவு இதழ்களேத் துடைத்தது.

ஆனல் விடை கொடுக்க ஓடிவந்தாள், பொன்னுத்தா. வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளாகத் துடித்த கண்களே உருட்டி விழித்தவாறு, "பெரியப்பா!... ஓங்களுக்குச் சேதி தெரியாது. ஓங்க மாப்பிள்ளேகாரக இல்லே... அதான் ஓங்க அக்கா மகன்... அவுகதான் அக்கரைச் சீமையிலேயிருந்து இந்தக் கடுத்தமும் இந்தக் கருவாட்டைக் கொடுத்து விட்டிருக்காங்க!... பதம் பார்த்து எங்கையிலுலே சுட்டுக் கொண்டாந்திருக்கேன். ருசி பாருங்க!" என்று விளக்கம் கொடுத்தாள், அந்தக் கன்னி.

வெஞ்சனத் தட்டிற்கு வந்திருந்த அந்தத் துண்டங்களேப் புதிய மனவுணர்வுடன் பார்த்த வண்ணம் இருந்த ஆதியப்ப அம்பலம், இப்போதே அதே வகைப்பட்ட புதிய மனவுணர்வுடன் தன்னுடைய அருமைத் திருச் செல்வியை நோக்கிய நேரத்தில், தன் மகளின் சிரிப்பில், மகளின் பார்வையில் அதே புதிய மன வுணர்வின் புதிய கோலமும் புதிய கதையும் இழையோடிக் கிடப்பதாக அறிந்து கொண்டார். அவர் மனதில் களிப்பு ஊற்றெடுத்தது. இதழ்க் கடைவரை ஒதுங்கிக் கிடந்த கருக்கரிவாள் மீசையை ஒதுக்கிவிட்டவாறு, உந்திக்கமலத்தை விட்டுப் புறப்பட்ட சிரிப்பை வாழ்த்தி, இதழ்க் கரையில் ஒதுங்கியிருக்க ஏற்பாடு செய்தார்.

"அக்கா, பெரியப்பாவுக்கு சோறு போடுங்க அக்கா. அப்பாலே மிச்சக் கதையைக் கண்டுக்கிடலாம்!" என்று பொன்னுத்தா 'நைத்தியம்' செய்யவே, அவள்பேரில் பொய்க் கோபம்

காட்டிவிட்டு, சோற்றுக் குண்டானை எடுத்து வந்தாள், அன்னக்கிளி. முன்றானையைக் கொய்து தோளில் வாகவமாகப் போட்ட வண்ணம் சோறு போடலானாள், அவள்.

சோற்றைக் கையில் எடுத்துக் கும்பிட்டவராக, முதற் பிடியை அள்ளி வாயில் போட்டுக் கொண்டார், அம்பலம். அப்புறம் குழம்பைப் பிசைந்து கொண்டார். கருவாட்டுத் துணுக்கின் சுவை அடிவயிற்றில் மணக்கத் தொடங்கியது. ஆக்கின குழம்பின் வாசம் நாவடியில் ஊறத் தொடங்கியது.

"கருவாடுன்னு அது ருசி தனிதான்!" என்றார் பெரியவர். வேர்வை கழுத்தடியிலும் மார்பின் மயிர்க்கால்களிலும் படர்ந்தது. விசிறி மட்டையை எடுத்தார்.

"பெரியவுக பேச்சு நூத்திலே ஒரு சேதிதான்!... மாப்பிள்ளைக்காரரு அக்கறையோட அக்கரைச் சீமையிலேயிருந்து குடுத்தனுப்பினது சாமான்யமா இருக்குங்களா?..." என்று குறுக்கிட்டாள், பொன்னுத்தா.

அம்பலத்திற்கு சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வாய்விட்டு, பல்லெல்லாம் தெரியச் சிரித்தார். எழுபது கல்லைத் தாண்டிய மனிதர் ஒரு பல்லைச் சோடையாக்கிக் கொள்ள வேண்டுமே!—ஊகூம், அதுதான் கிடையாது!

"வள்ளியம்மை மகளுக்குச் சொல்லுறேன், மாப்பிள்ளைக்காரர் அனுப்பிச்ச கருவாடு ஒசத்திதான். அருப்பு ருவந்தான்!... அதுக்கு அட்டிசொல்ல வாய்க்காது! ஆனாலும், சின்னப் பொண்ணு வாய்க்கு உணக்கையாய்ச் சுட்ட திணுசுதான், இதிலே ஒசத்தியாக்கும்!" என்று சாதுர்யமாகப் பேசினார், அம்பலக்காரர்.

"பெரியப்பா பேச்சைப் பத்தித்தான் இந்த சுற்றுவட்டாரம் பதினாறு நாட்டுக்கும் அத்துபடியாச்சே! அவுககிட்டே வாயைக் கொடுத்துட்டுத் தப்பிக்க முடியுமா?... சரி, அக்கா!

'நீங்க வட்டியைப் பார்த்துச் சாதங் கொட்டுங்க!" என்ருள், பொன்னுத்தா.

வழக்கம்போல பொன்னுத்தாவை வெறுங் கோபத்துடன் ஏறிட்டுப் பார்த்தபடி, சோறு பரிமாறினுள் அன்னக்கிளி. கை வளைகள் குலுங்கின. மூக்குத்தியின் வெண் கற்கள் வெண்ணிலவு ஆயினவோ? மாநிறம் பூண்ட கழுத்தில் இழைந்த இரட்டை வடச் சங்கிலி பளபளப்புக் காட்டியது.

நேரம் வரவே, கைவிளக்கைப் பொருத்தினுள்; கைதொழுதாள்; அதைக் கொண்டு வந்து வைத்தாள் அவள்.

சில்வண்டுகள் ஒளியைச் சுற்றின!

"இன்னம் ஒரே ஒரு ஆப்பை வாங்கிக்கிடுங்க!" என்று வேண்டினுள், அவள்.

"ஆத்தாடியோ! இனிமே தாங்காது!..." என்று எழுந்தார் முதியவர். ஏப்பம் பறிந்தது. மாந்தளேப் பெட்டகத்தைக் கோரி நடந்தார். "பர்மாச் சீமையிலே நான் கொண்டுவித்த கதைக்கு இது ஒண்ணுதான் சாட்சி!"

கையலம்பிவிட்டு ஒட்டுத் திண்ணையில் வந்து தன் அந்தத்தை குந்தியதும், அன்னக்கிளி தாம்பூலக் குண்டானை எடுத்து வந்து வைத்தாள்.

"ஆத்தா, மேய்ச்சலிலேயிருந்து பசுவும் கன்னுக்குட்டியும் திரும்பிடுச்சா? சீக்கு வந்து கிடந்த பசு வசப்பட்டுப் போச்சில்ல?"

"ஆமாங்க!"

"கன்னுக்குட்டி காலைக் கிந்தி நடந்துச்சே! மஞ்சள் பத்து போட்டையில்ல?"

"ஓ!"

அவர் வெட்டுப் பாக்கு ஒன்றை வெட்டி வாயில் போட்டு மென்று குதப்பலானுர்.

# 2 வந்தது, கண்டாங்கி!

ஹரி விளக்கைத் தூண்டி விட்டவண்ணம், சோற்று வட்டில் முன்னே அமர்ந்த அன்னக்கிளி, அன்னத்தைப் பிசைந்து கவளம் கவளமாக உருட்டி வாயில் போட்டுக் கொண்டிருந்தாள். அடிப் பகுதியில் குழம்பு பற்றாமல் இருந்தது. ஓர் அகப்பை குழம்பு மொண்டு ஊற்றிக் கொண்டாள். கீரைத் துண்டுகளை மென்றாள்; சக்கையைத் துப்பினாள்; பாதி மீதியிருந்த கருவாட்டுத் துணுக்கில் துளி கிள்ளி அடி நாக்கில் வைத்து சப்புக் கொட்டினாள்; மாங்கொட்டையை எடுத்துச் சப்பினாள். ஒரு வாய் தண்ணீர் குடித்துவிட்டுச் சோறு உண்ணலானாள்.

நடந்த நிகழ்ச்சி ஒன்றில் நடந்தாள்!

கஞ்சிப் பொழுது இருக்கும்; மேலத் தொங்கலில் இருந்த அரச மரத்திலிருந்து ஆடுகளுக்குத் தழைகள் ஒடித்துப் போட்டுவிட்டு, வாங்கரிவாள் கம்போடு தென்வசமாக வீட்டுக்கு நடந்த அன்னக்கிளியை, பூவைமாநகர் மேல வளவுச் சுப்பையாச் செட்டியார், பெயர் சொல்லிக் கூப்பிட்டார். காதுக் கடுக்கன்கள் கீழே தொய்ந்தன; கழுத்துக் 'கெவுரு' இறுக்கமாக இருந்தது.

அவள் அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள்.

"தங்கச்சி, அம்பலக்காரரு வீட்டிலேயா?" என்று வினவினார், அவர்.

"இன்னிக்குச் சந்தைக்கெடு ஆச்சுதுங்களே! அப்பன்காரவுக அறந்தாங்கிப் பக்கம் வண்டிச் சவாரி போயிருக்கிறாங்க," என்றாள், அவள். நெற்றி வேர்வையைத் தடவிக்கொண்ட போது, கை வளைகள் குலுங்கின.

"ஒரு முக்கியமான தகவல் இருக்கு. வளவுப் பக்கம் வந்

திட்டுத் திரும்புறீயா?"

"ஓ!"

அவள் வளைவை அடைந்தாள்.

உள்ளே மடங்கி மடங்கிச் சென்ற செட்டியார் திரும்பி வந்தபோது, அவர் கையில் பெரிய முடிச்சொன்று இருந்தது. "எங்க மூத்தவன் சிங்கப்பூரிலேயிருந்து ராத்திரி வந்தான். உன் அயித்தை மகன் வீரமணி உங்க அப்பாக்கிட்டே தரச் சொல்லி இந்தச் சாமான் முடிச்சை அனுப்பியிருக்குது!..." என்று அறிவித்து, அம்முடிச்சை அவள் வசம் ஒப்படைத்தார். பிறகு தொடர்ந்து, "இந்தக் கடுதாசியையும் உங்க அப்பாரு கையிலே குடுத்துப்பிடம்மா," என்றார்.

அன்னக்கிளி கம்பீரமான மகிழ்வுடன் அந்த மூட்டையைப் பெற்றுக்கொண்டாள். "நான் போய் வருகிறேனுங்க." என்று பயணம் சொல்லிவிட்டுப் புறப்பட்டபோது, வெளியில் சென்றிருந்த செட்டியார் மகன் டெர்லின் சட்டை பளபளக்க உள்ளே நுழைந்தான்.

அவனிடம், "தம்பி, இந்தப் பொண்ணுதான் வீரமணிக்கு முறைப் பொண்ணு. அன்னக்கிளின்னு பேர். ரொம்ப திரவிசான பொண்ணு. நம்ம ஊர் குடியானவப் பொண்ணுகளிலே நாலு எழுத்து ஒழுங்காகப் படிச்சது. அதிகப்படியான அடக்கம். கால் பெருவிரலைப் பார்த்துத்தான் நடக்கும். நம்ம கேணிக்கு எவ்வளவோ கன்னிப் பொண்ணுக தண்ணி மெர்ள்ள வருமே, அதுகளிலே இது ஒரு தனி. பதவிசுக்குத் தக்கனே கோபம் கொண்டதாக்கும்!" என்று ஒரு விளக்கம் கொடுத்தார்.

குனிந்த தலை நிமிராமல் நின்ற அன்னக்கிளியை ஏறிட்டுப் பார்க்காமல், "ஓகோ!" என்ற அளவில் தன் ஆமோதிப்பை நிறுத்திக்கொண்டான், சுப்பையாச் செட்டியாரின் மகன் சுந்த

ரம். "வீரமணி அண்ணன் இந்த ஆனி கோடியிலே வந்திடு வாங்க!" என்றான்.

"சரிங்க; போயிட்டு வரட்டுங்களா?" என்று கன்னங் குழியச் சொல்லிக்கொண்டு புறப்பட்டாள், அவள்; முடிச்சைத் தூக்கி இடுப்பில் குடத்தைத் தாங்கிக் கொள்வது மாதிரி வைத்துக்கொண்டாள். வலது கையில் வாங்கரிவாள் கழி இருந்தது. முடிச்சு அவள் எதிர்பார்த்ததற்கு மிஞ்சிக் கனத்தது. சுங்கடிச் சேலையின் முக தலைப்பைக் கொண்டு மூடிக்கொண்டு தொப்பையப்பன் சாமி கோவில் புதுக்குளத்தின் தென்கரை வழியே நடந்து, காத்தாயி அம்மன் பொட்டல் வழியே மறுகி, வடக்குப் பக்கமிருந்த ஒற்றையடிப் பாதையில் மடங்கி தன் வீட்டை அடைந்தாள். அதற்குள் "என்னடி அன்னம் அது?" என்று கேட்டாள், அவளுடைய அத்தாச்சி மகள் அங்கையற்கண்ணி. அதேபோல மளிகைக் கடைக் காத்தாயி வினவினாள்; ஒன்று விட்ட சித்தப்பன் மகள் விசாரித்தாள். அவள் வீட்டின் சரணையிலிருந்த குப்பாயிக்கு இதைப் பற்றி ஒரு கவலையா வரவேண்டும்? அவள் 'குடுகுடு' கிழவி. குடுகுடுவென்று ஓடோடி வந்து, "பேத்திப் பொண்ணே, என்னடி அது இடுப்பு முடிச்சு?... அம்மான் மவளுக்கு அயித்தை மவன் சாமான் சட்டுக் கொடுத்து அனுப்பியிருக்குதா? அதானு அம்புட்டுக் கமுக்கமாக் கொண்டுக்கினு போறே?" என்று பிட்டுவைத்துக் கேட்டாள். அன்னக்கிளி மையமாகப் புன்னகை செய்துவிட்டுத் தன் மனைக்கு வந்து சேர்ந்து பெருமூச்செறிந்தாள். 'அப்பத்தாளுக்கு மோப்பம் உண்டனத்தான் இருக்குது' என்று உள்வட்டத்தில் நகைத்துக் கொண்டாள்.

வாசலைக் கடந்து, நிலைப்படியைத் தாண்டி, நடைக்குறட்டில் அடிவைத்தாள் அன்னக்கிளி. பின்புறமாகத் திரும்பினாள். பிறகு மூட்டையை வெளியே எடுத்து அதை முன்னும் பின்னுமாகப் புரட்டினாள்; குப்பாயிக் கிழத்துக்கு வாய்த்து விட்டிருந்த

தாகக் கனித்த அந்த மோப்ப சக்தியுடன் அவள் அம்முடிச்சை நுகர்ந்து பார்த்தாள். அவளால் அந்த மூட்டையின் உள்ளடக்கத்தை அனுமானம் செய்ய இயலவில்லையென்றாலும், அந்த முடிச்சின் கனத்தைப் போலவே தன்னுடைய அத்தை மகனின் அன்பும் கனமாக இருப்பதை வழக்கம்போல உணரலானாள். அவ்வுணர்வின் தன்மயமான லயிப்பில் மிதந்தவளாக, ஆலவீட்டுப் பகுதியை அடைந்து கதவை நாதாங்கி போட்டுக்கொண்டு, கடிதத்தைப் புரட்டிப் பார்த்துவிட்டு ஏதோ சிந்தனைக்கு இலக்கானாள். பிறகு அந்தப் பொட்டணத்தைப் பார்த்தாள். மறுபடியும் அவளது பார்வை முடங்கலில் முடங்கியது. உறையின் மேலிருந்த முகவரியைப் பார்த்தாள். 'உயர்திரு ஆதியப்ப அம்பலகாரர் அவர்களுக்கு—ஜவத்தகுடி,' என்று விலாசம் எழுதப் பட்டிருந்தது.

கடிதத்தை உடைத்துப் பார்ப்பதா, வேண்டாமா என்ற போராட்டத்தில் கணங்கள் சில ஊர்ந்தன. பின்னர் "ஊகூம், அப்பாவுக்கு 'அவுக' எழுதியிருக்கிற கடுதாசியை அத்துமீறி நான் பிரிக்கிறது லாயக்கில்லே" என்று தீர்மானம் செய்தவளாக, அக்கடிதத்தை சுவர் மாடப்பிறையில் பத்திரமாக வைத்தாள். இப்போது அந்த முடிச்சு அவளுள் இருந்த தயக்கத்தின் முடிச்சை அவிழ்த்தது; அதே தெளிவின் சுகத்துடன் முடிச்சைப் பிரிக்கலானாள். எடுத்த எடுப்பில் தென்பட்டது ஒரு நீண்ட துணிப்பை. அதை முதலில் அவிழ்த்தபோது, சுறாக் கருவாடு தரிசனம் தந்தது. கருவாட்டின் செதில் ஓரத்தில் துளி கிள்ளி வாயில் சுவைத்தாள். "ஆத்தாடி, எம்மாம் ருசி; எம்மாம் ருசி!" என்று நாக்கில் நீர் ஊறச் செப்பிக் கொண்டாள். 'மச்சான்காரர் அனுப்பிச்சதின்னு அதோட மகிமை ஒசத்திதானுக்கும்' என்றும் தன்னுள் வியந்தாள்.

அப்போது கதவை இழுத்துக் கொண்டு குரல் கொடுத்தாள் பொன்னுத்தா. சிதறிய ஆவலுடன் ஏனைய சாமான்களைத்

தட்டுப் பலகையில் இருந்த இலங்கைச் சீமைப் பேழையில் வைத்துப் பூட்டிவிட்டு, கருவாட்டை மாத்திரம் தரையில் போட்டவாறு, கதவைத் திறந்தாள், அன்னக்கிளி.

உள்ளே நுழைந்த பொன்னுத்தா, "என்ன அக்கா செஞ்சே கதவை அடைச்சுக்கிட்டு?" என்று வினு விடுத்தாள்.

"இந்தா பாரு, இதோட வாசனையிலே சொக்கிப் போயிருந்தேனுக்கும்" என்று சொல்லி, கருவாட்டைக் காட்டினுள் அன்னக்கிளி; "இது எங்க அயித்தை மகன் அனுப்பிச்சதாக்கும்" என்றும் நினைவுபடுத்தினுள். பெருமை பிடிபட மறுத்தது.

"நீங்க யோகம் செஞ்ச பொண்ணுச்சே! அதான் இப்பிடி வாய்ச்சிருக்குது. எங்களை ஒத்தவுகளுக்குக் கேட்டுமாவடிக் கருவாடுதான் சாப்பிட வாய்க்கும்; ஒங்களுக்கோ அக்கரைச் சீமைச் சரக்கே தேடி வந்திருக்குது. ஒங்க அதிர்ஷ்டத்துக்கு அட்டி ஏது?" என்று புகழ்ந்தாள், பொன்னுத்தா.

இப்போது அன்னக்கிளி நயம் மலிந்த நவின நகை உதிர்த்தாள். "ம், நீ செப்புறதும் ஒரு விதத்துக்கு மெய்யானதுதான். ஏன்னு, இந்தச் சின்னக் கருவாட்டிலே ஒரு பெரிய கதையே அடங்கியிருக்குதாங்காட்டியும்!" என்று நிறுத்தினுள்.

நையம்பாடி நெருங்கிய பொன்னுத்தா, "அதை உங்க தங்கச்சிக்கும் இத்தி புட்டுக் காட்டப்புடாதா?" என்று கெஞ்சினுள்.

"எதை? கருவாட்டையா?"

"போங்க அக்கா!" என்று சிணுங்கினுள் பொன்னுத்தா.

"நல்லாப் போறேன். எங்க அப்பன்காரக வந்தவுடனே சோறு வடிச்சுப் போடு. இந்தக் கருவாட்டிலே ஒரு துணுக்கு நறுக்கிச் சுட்டுவை. எனக்கு ஒரு பொழுதுக்கு சோலி மிச்சம்," என்று கூறிய அன்னக்கிளி, அங்கிருந்து புறப்படப் போவதாகப் 'பாச்சா' காட்டினுள்.

பொன்னுத்தாள் சிரித்தாள். "அக்கான்னு அக்கா அழகான

அக்காவாச்சே?—ஒங்ககிட்டே பேசி ஒங்க அயித்தை மகனே மிச்சம் எடுக்க ஏலலேன்னு, நான் எந்த மூலையாம்? ஐயையோ, நீங்க உங்க வூட்டை ஒப்புக்கிடுங்க. எங்க சின்னுயி சோறு ஆக்கிறதுக்கு நல்ல தண்ணி மொண்டாரச் சொன்னுச்சு. நான் பறியிறேன்!" என்று எடுத்துரைத்துத் திரும்பிவிட்டாள், பொன்னுத்தா.

அப்பால், அன்னக்கிளியின் சித்தம் தடுமாறியது. மேனி நிழல் நீள நீள, அவள் கருத்து அவளுடைய சொந்த ஆசாபாசத்தின் நினைவு சிறுகச் சிறுகக் குறைந்தது. 'அப்பன்காரர் சந்தையிலேயிருந்து திரும்புற நேரம் வந்திடப்போவுது. அதுக்குள்ளே அல்லாத்தையும் செஞ்சுப்புட வேணும். இந்தக் கடுத்தம் மாங்கொட்டை நச்சுப் போட்டுக் குழம்பு வைக்கவேணும். இருக்கிற கீரைத்தண்டைச் சீவிப் போட்டு வெஞ்சனம் சமைக்கணும், செட்டிய வீட்டு மேலவளவுக் கேணிக்குப் போய் ஒரு முட்டி நல்ல தண்ணி கொண்டாந்துட்டா, ஒரு வேலை முடிஞ்சாப்பிலேதான். பள்ளிக்கூடம் விட்டடியும் உலை வச்சாப் போதும். அப்பாவுக்கு சோறு ஒவ்வொண்ணிலயும் சூடு பறக்கோணுமே!'—நினைவுகளின் கூட்டுறவில், வீட்டின் பின்புறமிருந்த கொல்லைத் தோட்டத்தைக் குறித்த சிந்தனையும் அடங்கியது.

திட்டங்களுக்கு உகந்த அளவில் செயல்களும் நடந்தேறின. 'அப்பாவுக்கு அயித்தை மகன் அனுப்பின கருவாட்டைச் சுட்டு வச்சுப்பிடணும்' என்ற ஞாபகத்தோடு தோட்டத்தை அடைந்தாள், அன்னம். பிடுங்கப்பட்டு அம்பாரமாகக் குவிக்கப்பட்டு, கொட்டகையில் போடப்பட்டிருந்த நிலக்கடலையை நோட்டமிட்டபடி, ஒரு சுற்றுச் சுற்றி வந்தாள். மஞ்சள் வெய்யிலின் மாண்புமிக்க ஒயிலை அனுபவித்தவாறு அடி வைத்து அடி பிரித்தாள். 'காடாட்டம் மண்டிக் கிடந்த கடலைக் கொடி இல்லாத இந்த மண் எப்பிடி களையிழந்துபோய்க் கிடக்குது?...'

என்ற எண்ணத்தில் பிறந்த ஆதங்கத்தை மாற்றிக் கொள்ள அவள் அந்தக் கடலைக் கொடிகளை ஆழ்ந்து பார்த்து, அமை தியை வாங்கிக் கொண்டாள். எண்பத்தி நாலு குழி புஞ்சைத் தாக்கிலே 'படல்' பிரித்து, எள் விதைத்திருந்த கீழ்க் கோடி யில் சிதறியிருந்த கடலை நான்கை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

வேலிக் கருவேலாவை மேய்ந்து கொண்டிருந்த ஆட்டுக் கிடாவை "ட்ரியோ" போட்டு விரட்டிவிட்டுத் திரும்பினள் அன்னக்கிளி. மடியிலிருந்த கடலையை ஓடுடைத்து, கடலை மணி களை வாயில் போட்டு மென்றாள். 'ஊர்லே பேச்சு அடி படுகிறதைப் பார்த்தால், என்னோட மச்சான் இந்த ஆனிக் கடோசிக்குள்ளாற வீடு திரும்பிடத்தான் வேணும்போல தோணுது. அவுக வந்து, எங்க வீட்டிலே விருந்து சாப்பிட றப்போ, அவுகளுக்குக் கடலை சுட்டுக் கொடுக்க வேணும். அப் பன்காரரர் நினைப்போட கருப்பட்டித் துண்டு வாங்கியாரு வாங்க. அதை எடுத்து தாய்வீட்டுப் பொட்டியிலே போட்டு வச்சிருக்க வேணும். கடலை தின்ன கையோட அயித்தை மவ னுக்கு ஒரு கடிக்கு கருப்பட்டி கொடுக்க வேணுமில்லே! இல் லாட்டி, அவுகளுக்கு வயித்தைப் புரட்டாதா?... மச்சான் இந்த நாலு வருசத்திலே எப்படி உருமாறிப் போயிருக்காக ளோ?... ஆளு மாறினலும் அவுக மனசு மாறவே மாறுதாக் கும்!...' மன ஆழியில் எண்ண அலைகளுக்கு ஓய்வேது? ஒழி வேது?

அன்னம் கொல்லை வழியே அடைப்பை விலக்கி நடந்து, பிறகு, அடைப்பின் கொக்கியை மாட்டிவிட்டு வீட்டின் புறக் கடைக் கதவைத் தள்ளிக் கொண்டு பிரவேசித்தாள். நடையை அடைந்து தட்டுப் பலகையைக் கூர்ந்து நோக்கினள். அப் போது அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. ஆனல் அவள் நெஞ்சமோ, இனம்புரியாத இன்பத்

தில் அமிழ்ந்திருந்தது. எட்டி நடந்தாள்; சோற்றுப் பானையின் வாயில் படிந்திருந்த நுரையை ஒதுக்கினாள்; சாதம் மகிழ்ந்து கொண்டிருந்தது; வெளிப்புறத்தில் எட்டிப் பார்த்த சோற்றை உள்ளே தள்ளினாள்; அகப்பையை எடுத்து, ஒரு சோற்றைப் பதம் பார்த்தாள். பிறகு 'வடிமார்' எடுத்து வடித்து, இறக்கி, கலவடையில் வைத்தாள். மீண்டும் நடையை நாடினாள். பரிசுப் பொட்டணத்தைத் தூக்கித் தரையில் போட்டாள். யானை அடிக்கல் தரையில் பொருள்கள் சிதறின. என்ன ஓடியதோ, ஓடிப்போய்க் கதவைத் தாழிட்டுத் திரும்பினாள் அவள்.

சிதறிக் கிடந்தன சாமான்கள்.

சிதறாமல் கிடந்தது மனம்.

ஒவ்வொன்றாகப் பார்த்தாள்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதை சொல்லியிருக்க வேண்டும்!

ஒவ்வொரு கதையிலும் அவள் ஒவ்வொரு கனிவைக் கற்பித்துக் கொண்டிருக்க வேண்டும்!

அவளுக்கென்று ஒரு புடவை; பட்டுக் கண்டாங்கி அது!! விளாகாய்ப்பழ நிறத்துக்கு ரவிக்கை வேறு! ஒரு கொண்டைப் பின்னல் வலையும் இருந்தது. 'வலையைத்தான் எப்பவோ எம் பக்கம் வீசிப்புட்டாகளே அயித்தை மகன்? இப்ப வேறே எதுக்காம்?'. என்று ஒரு கேலி தோன்றியது. தனக்குத் தானே சிரித்துக் கொள்ளாமல் இருக்க இயலவில்லை அவளால்.

அவளுடைய தந்தைக்கென்று ஒரு துப்பட்டாவும் ஓர் எட்டு முழ வேட்டியும் இருந்தன.

அதற்குப் பின்னால், இன்னோர் எட்டு முழ வேட்டியும், அழகான அரைக்கை டெர்லின் சட்டையும் தனி நாடாவால் கட்டப்பட்டு இருந்தன.

இந்த இரு உருப்படிகளையும் கண்டபோது அன்னக்கிளி வியப்புற்றாள். 'இது ரெண்டும் அப்பன்காரருக்கு கத்தமாய்

ஏற்றுக்கிடாது. இளவட்டத்துக்கு உண்டான இந்தத் துணிகளை எதுக்கு 'அவுக' இத்தோடே வச்சு அனுப்பிக் குடுத்திருக்காக? ஒரு சங்கதியும் விளங்கலையே?' என்ற சந்தேகம் அவளை அரித்தது. அப்போது, 'ஆமா, மெய்தான். எல்லாத்தைப் பத்தியும் முக்கால்வாசி இந்தக் கடுதாசியிலே கண்டிருப்பாகளே!,' என்ற உணர்வு தோன்றியது. 'பொழுது கூட சாஞ்சிருச்சு, அப்பாரு வார நேரம் அண்டுது. அதற்குள்ளாற அந்தத் தபாலைக் கிழிச்சுப் படிச்சா என்ன? அப்பன்காரவுகளுக்குத்தானே பேர் போட்டிருக்குது? ஆமா, ஆமா! அதிலே 'அவுக' இந்த அன்னத்தைப் பத்தி அங்கிட்டு இங்கிட்டு எதாச்சும் எழுதி வச்சிருக்காம இருக்கமாட்டாகளே! ...' என்ற மறு நினைவும் எழுந்தது.

நடைக் கதவின் சன்னலும் அடைப்பட்டிருப்பதை உணர்ந்து, அதே உணர்வில் இருந்து வெளியேறிய ஒரு கனவுக் கிறக்கத்தின் கள்ளத்தோடு தரையில் குந்திக் கொண்டு, மேற்படி கடிதத்தைத் தலைப்புப் பார்த்துப் பிரிக்க எண்ணி, கடிதத்தின் பின்பகுதி ஒட்டப்பட்டிருந்த கரைக்கட்டில் துளி எச்சிலை அப்பி ஊறச் செய்து நலியாமல் பிரித்துவிட்டாள்.

அக்கணத்தில்தானா அவளுடைய தந்தை வந்து பதட்டத்துடன் கதவை இடிக்க வேண்டும்? ...

கடந்த நிகழ்ச்சி கடந்தது! ...

கைவிளக்குப் படல் விரித்து எரிந்தது!

ஒய்யார அலம்பிக் கொண்டு அன்னக்கிளி திண்ணையின் பக்கமாக வருவதற்கும், அரிக்கன் விளக்கும் கையுமாக தோட்டத்தைப் பார்த்துவிட்டு ஆதியப்ப அம்பலம் வாசலை மிதிப்பதற்கும் கணக்காக இருந்தது.

"ஆத்தா, சோறு உண்ணிட்டியா?" என்று பாசம் குழையக் கேட்டார் அவர்.

"சாப்பிட்டாச்சுங்க, அப்பா!," என்று பாசம் குழையச்

சொன்னாள் அவள். திண்ணைச் சுவரின் மேல்புறத்தில் இருந்த சுவர் விளக்கைத் தூண்டிவிட்ட பின், "அப்பா, ரவைக்கு நான் கடலைக் கொல்லைக்குக் காவல் இருக்கேன். நீங்கபாட்டுக்கு மேலு அசதி தீர நல்லாத் தூங்கி எழும்புங்க. விடிஞ்சாத் தான் தலைக்கு மேலே வெள்ளாமை வேலை உண்டனக் கிடக்குதே?" என்றாள்.

அம்பலத்துக்கு மேனியில் ஒரு பதட்டம் கண்டது. அவிழ்ந்த குடுமியைத் தட்டி முடிக்கக்கூட நினைவில்லை. "நல்லாச் சொன்னியே, ஆத்தா! ஒரு வயசுப் பொண்ணு ராத்திரி முச்சூடும் ஒண்டியாவா காவல் காக்க ஏலும்?... ஊஹும், வேண்டவே வேண்டாம்! காலம் கெட்டுக் கெடக்குது!" என்று மூச்சு வாங்கச் சொல்லி நிறுத்தினார்.

"பொண்ணாய்ப் பொறந்த ஜென்மத்துக்கு என்ன பயம் வந்திடுச்சி. நெஞ்சிலே வலுவான உரமும் துணிச்சலான வைராக்கியமும் இருந்திட்டா, அப்பாலே அவளை எந்த ராவணனும் யாரு என்ன செஞ்சுப்பிட முடியும்? அவுக அவுகளுக்கு அவுக அவுகளோட மனசுதான் காப்பு!..." என்று 'உருவேறிய' பாவனையில் பேசினாள் அன்னக்கிளி.

"ஆத்தா, நீ சொல்லுறது முழுக்க முழுக்க அசலான பேச்சுத்தான். ஆனாலும், ஒன்னைக் கட்டிக் கொடுக்கிற வரைக்கும் உன்னைக் காத்துக்கிட வேண்டிய பொறுப்பு என்னோடதாச்சே? நீ படுத்துத் தூங்கு வீட்டிலே! நான் போய் கொல்லையிலே படுத்துக்கிடுறேன். வளமையா பாடுபட்ட மேனி இது. எனக்கு இன்னமும் செகல் தப்பல்லே!..." என்றார் அவர். தொடர்ந்து எதையோ சொல்ல விழைந்தவராகத் தோன்றினார். குடுமியை முடிந்தபடி பாக்குக் கடிக்கும் நாழிகை ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார்.

"ஒரு சேதி சந்தைப்பேட்டையிலே என் காதுக்கு எட்டிச்சுது!"

"என்னுங்க அது?"

"அதைச் சொல்லத்தானே அப்பவே பிடிச்சு வாயைத் தூக்கிக்கிட்டு இருக்கேன்!... என்னோட ஒடப்பொறந்தா மகன் வீரமணி மாப்பிள்ளே இந்த ஆனி கடோசியிலே ஊரைத் தேடி வருதாம். வார வேளை நல்லபடியா அமையணும். லேஞ்சை உதறிப் போட்டுக்கிட்டு வீசின கையும் வெறுங்கையாப் போன புள்ளே... எப்பிடித் திரும்புதோ?... ஆத்தா தயவிலே இந்த மட்டுக்கும் அங்கிட்டு அதுக்கு ஒரு கெடுபிடியும் வராமத் தப்பியிருக்குது. இல்லாங்காட்டி எப்பவோ அல்லாரும் தாய்மண்ணைத் தொட்டுக் கும்பிட்டிருக்க வேண்டிய காலம் வாச்சிருக்குமே?... பர்மா நாட்டுக் கதையும் இலங்கைச் சீமைச் சரித்திரமும் அம்மாங்கொத்த அளவிலேதானே நடந்திடுச்சுது?... மறுகாவும் அக்கரைச் சீமைக்குப் போக வாய்க்காட்டிக் குத்தமில்லே. பொறந்த மண்ணை நம்பிறு, பூமி ஆத்தா, உண்டான படியை அளந்து கொட்டாமயா இருக்கப் போறு? கட்டாயம் படி அளப்பா!... வந்தடியும் அல்லாத்தையும் கலந்து பேசிக்கிடலாம். சாமிதான் அந்தச் சிறிசை அலாக்காத் தூக்கியாந்து நிறுத்திப்புடணும், இந்த பூவாத்தகுடி மண்ணிலே!..."

ஆர்வத்தின் கவலையில் அவரது பேச்சு இளகியது. பேசி முடிந்ததும் அவர் அன்னத்தைப் பார்த்தார்.

அன்னக்கிளி கனாக் கண்டு கொண்டிருந்தாள். கருவண்டுக் கண்களிலும் கனி இதழ்ச் சேர்க்கையிலும் கனவு விளையாடிக் கொண்டிருந்தது.

"ஆத்தா!"

"........."

"ஆத்தாடி அன்னப்பொண்ணு!"

"என்னுங்க அப்பா?"

"நான் இந்நேரம் சொன்னதெல்லாம் காதுக்கு ஏறிச்சா?"

"ஓ!" என்று அவள் சிரித்தாள். "அந்த இனிப்புச் சங்கதி எனக்கும் தெரியுமுங்க அப்பா!" என்றாள்.

"நல்ல வேளை!" என்று அவர் சிரித்தார். "ஆத்தாளோட கைச்சமையல் இன்னம் கொஞ்ச காலத்துக்குத்தான் இந்தக் கிழவனுக்கு லவிக்கும். அதாலே பரவாயில்லே! எப்படியும் எங் கனு பலிதமடைஞ்சிட்டாப் போதும்!" என்று பேச்சுச் சேர்த்தார்.

"அப்பா, ஒங்க நல்ல கனு நல்லதனமாப் பலிக்கட்டும். ஆனக்க, எங்க கைச்சமையல் மட்டும் எப்பவுமே ஒங்களுக்குக் கிட்டத்தான் கிட்டும்!... 'அவுக' உங்க பேரிலே உசிரையே வச்சிருக்கிறவங்களாச்சே?... 'அவுகளை' நீங்க தோளிலே போட்டு வளர்த்தவங்களாச்சே? எதொண்ணையும் மறந்துபுட மாட்டாங்க, அயித்தை பெத்த மகன்!... அவுக உடம்பு உங்க அன்புக்கும் பாசத்துக்கும் சொந்தமாக்கும்!..." என்றாள் அவள், கயல் விழிகள் படபடவென்று மூடித் திறந்தவண்ணம்.

"அப்படின்னு மாப்பிள்ளையோட நேசமும் மனசும் ஒனக்குப் பாத்தியம்னு குடிக்காணியாட்சிச் சொந்தம் கொண்டாடுறியா, ஆத்தா!... அதான் சரி!... மாப்பிள்ளை ஒஞ் சொத்துத் தான் என்கிறது ஊர் நாடு பூராவுக்கும் அத்துபடியான விவரமாச்சே!"

பொட்டலத்தில் இருந்து விரல்பிடி புகையிலையை அள்ளி வாயில் போட்டு 'கொடும்பில்' அடக்கிக் கொண்டார், அம்பலம். வேட்டி தலைப்பில் முடிச்சுப் போட்டு வைத்திருந்த பணத்தை அவிழ்த்து மகளிடம் நீட்டினார். "வண்டிச் சத்தம் ரூவா நாலு இருக்குது. கை ஞாபகத்தோட உண்டிக் கலயத்திலே வச்சுப்பிடு. நடை விட்டத்திலே தொங்கப் போட்டிருக்கிற பையிலே கருப்பட்டியும் வெத்திலை அரைக் கவுளியும் இருக்குது. எடுத்து வை. பத்துக் காசுச் சோள முறுக்கும் வாங்கியாந்தேன். முறுகல் மாளறதுக்குள்ளே அதையும் புட்டுப்

போட்டுக்க" என்றார்.

'ஊம்' கொட்டிக் கொண்டிருந்தாள் அன்னக்கிளி. "நாளைக்குக் கண்ணாலம் கட்டிக்கிடப் போற பொண்ணுக்கு இன்னமுமா அப்பா, சோள முறுக்குத் தின்பண்டம் வாங்கியார ரணும்?" என்றாள்.

"ஒனக்குச் சோள முறுக்கின்னு அடிநாள் தொட்டு ஒரு வாஞ்சை. வளமையா வாங்குறது போல வாங்கியாரேன். இந்த அலுவலே உன் புருசன்காரர் ஏத்துக்கிட்ற அரிதி நான் என்னோட ஆசைக் கடமையைச் செஞ்சுக்கிறுதான் இருப் பேன்!" என்றார் அம்பலம்.

"நீங்க சொன்னுச் சொன்னதுதான். அப்பாலே உங்க பிரி யம்!" என்று நிறுத்தினாள் அவள். எதையோ கூறத் துடித்தவள் போன்று தோன்றினாள். பிறகு, எதையோ சிந்தித்தவளாகவும் தோற்றம் கொடுத்தாள். அடுத்த கணத்தில், பணத்துடன் எழுந்தாள். உள்ளே சென்றாள். திரும்புகாலில், அவளுடன், வீர மணி கொடுத்தனுப்பிய மூட்டையும் லிகிதமும் வந்தன. "இந் தாங்க!..." என்று கூறி, தந்தை முன் அவற்றை வைத்தாள். "அல்லாம் ஒங்க அக்கா மகன் கொடுத்தனுப்பிச்சது. மேல வளவு கூனு பானு மகன் துவாராவிலே அனுப்பிச்சிருக்காரு!," என்று விளக்கினாள், அன்னக்கிளி.

பற்களைத் துலாம்பரமாகக் காட்டினார் ஆதியப்ப அம்ப லம். மூட்டையையும் கடிதத்தையும் மாறி மாறிப் பார்வையிட் டார். முடிச்சைப் பிரிக்க முனைந்தார். "நீ இதைப் பிரிச்சுப் பார்த்துட்டியாக்கும்?" என்று கேட்டார்.

"பார்க்கப்புடாதா, அப்பா?"

"நீ என்ன ஆத்தா, இப்பிடி எதிர்க் கேள்வி கேட்கிறே?... அல்லாச் சாமான்களும் ஒனக்கின்னுதானே வீரமணி மாப் பிள்ளே அனுப்பியிருக்கும்?"

"அப்பிடியில்லே. ஒங்களுக்கும் இருக்குது!,"

"அப்புடீன்னு எனக்கும் சேர்த்து அனுப்புதாங்காட்டி?"

"நீங்க என்னுங்கப்பா, இப்படி நையாண்டி பேசுறீங்க?"

அவர் சிரிக்க, அவள் சிரித்தாள்.

மூட்டை பிரிந்தது.

"கருவாடை மட்டும் எடுத்து பானைக்குள்ளே திணிச்சிருக்கேனுங்க."

"அது சரி, ஆத்தா!"

துணிமணிகளை அலசிய தருணத்தில், டெர்லின் அரைக்கைச் சட்டையும் ஓர் எட்டு முழ வேட்டியும் தனிப்படக் கட்டப்பட்டிருந்தது, அவர் நோக்கில் தட்டுப்படவே, "இதென்ன, இது மட்டும் தனிப்பட இருக்குது?" என்று கேட்டார்.

"அதுதான் புரியலே!"

அப்போதுதான் அவருக்குத் தபாலின் நினைவு எழுந்தது. அவசரமாக அதைக் கிழித்தார். உள்ளே இருந்த தாளை எடுத்து வசம் பார்த்து வைத்தார். "அன்னப் பொண்ணே, கைவிளக்கைக் கிட்டணியிலே தள்ளி வையேன்," என்று சொன்னார்.

அதன்படியே விளக்கு வைக்கப்பட்டது. அடக்கமான ஒளிச் சிதறல்கள், பூவரச இலைச் சருகை நிகர்த்திருந்த கடிதத் தாள்மீது ஊர்ந்தன. உடுக்கு அடிக்கும் பூசாரி உச்சாடனத்தை வரவழைப்பதற்கென்று வாய்க்குள்ளாகவே முனகிக் கொள்வதைப் போல, அம்பலகாரர் அந்தக் கடிதத்தை வாய்க்குள் முனகலுடன் படிக்கலானார். அன்னக்கிளியைப் பற்றி எழுதப்பட்டிருந்த கட்டத்தில் ஒரு தரம் அருமை மகளைத் தலை நிமிர்த்திப் பார்த்தார். பிறகு கழுத்தை சோற்றுக் கையால் ஒருதரம் நீவி விட்டவராக, கடிதத்தைப் படிப்பதில் ஆழ்ந்தார். சுருக்கம் விழுந்து கன்றியிருந்த கன்னங்களில் முறுவலின் இழைகள் கூடின. "மற்றத் தாக்கல்கள் நேரில் கண்டு" என்று படித்து, "இப்படிக்குத் தங்களின் அன்பான வீரமணி" என்று முடித்

தார். உமிழ் இறக்கிச் சவத்துப் போயிருந்த புகையிலையை இடது கை நுனி விரல்களைக் குவித்து எட்டித் துப்பினார்.

காலை மாற்றிப் போட்டுக் கொண்டு, "ஆத்தா, இந்த வேட்டியும் சட்டையும் யாருக்குத் தெரியுமா?" என்று வினாப் போட்டார் அவர். தனியாகக் கட்டப்பட்டிருந்த இரு உருப்படிகளையும் சுட்டியவாறு அவளை ஜாடையாகப் பார்த்துச் சிரித்தார்.

"சொன்னாத்தானே தெரியுமுங்க" என்றாள் அவள்.

"இது ரெண்டும் உன் அயித்தை மகனுக்காம். அது வந்ததும் இதுகளை உன் கையாலே வாங்கிக்கிட வேணும்னு ஆசையாம் அதுக்கு! ..."

அதைக்கேட்டதும் மகிழ்வின் எல்லையில் திளைத்து, நாணத்தின் பதுமையானாள் அன்னக்கிளி.

வலது முக்கத்துச் சோளக் கொல்லையில் குருவிகள் சத்தமிட்டுக் கொண்டிருந்தன.

"பாவம், சோளக் கொண்டை வந்திருக்குமின்னு பறவைங்க சுத்திக்கிட்டிருக்குதுங்க!" என்று கொட்டாவி விட்டார், ஆதியப்ப அம்பலம்.

"நீங்க போயித் தூங்குங்க, கொல்லைக் காட்டிலே!" என்று சொல்லி, அரிக்கன் விளக்கைக் கொளுத்திக் கொடுத்தாள் அன்னக்கிளி. சுவரொட்டி விளக்கு உள்ளே எரிந்தது.

"கெட்டியமா படுத்துக்க, ஆத்தா!"

"ஊம்!"

"துணிமணிகளை மாந்தளைப் பெட்டகத்திலே போட்டுப் பூட்டிப்பிடு."

"சரிங்க."

தாழ் இடப்பட்ட ஒலி கேட்டதும், விளக்கைப் பிடித்துக் கொண்டு கவ்வல் கழியுடன் நகர்ந்த அம்பலகாரர் கிழவர், மாடுகளுக்கு இரை போட்டுவிட்டு, சிந்திக் கிடந்த ஒரு நிலக் கடலையை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு, கொல்லைக்கு மடங்கினார்!

# 3 குளமங்கலம் மாணிக்கம்

கோழி கூப்பிட எழுந்த அன்னக்கிளி, செல்லத்தேவன் ஊருணியில் குளித்து முழுகித் திரும்பிய நேரத்தில் அவளுக்குத் துணையாக இருந்தது விடிவெள்ளி. ஈரச் சுங்கடி சலசலக்க வந்துகொண்டிருந்தவள், அரச மரத்து நாகம்மாள் சிலையை மூன்று முறை வலம் சுற்றி வந்து, கல்குழியில் சேமித்திருந்த திருநீறு குங்குமத்தில் கடுகத்தனை எடுத்து பொட்டிட்டுக் கொண்டு மீண்டாள். வடகிழக்கில் இருந்த பிரமர் சுவாமியை யும் அதற்கும் தென்மேற்கில் இருந்த தாராடியையும் நெஞ்சில் இருத்தி 'நேந்து' கொண்டபின், வீடு நோக்கி நடை தொடர்ந் தாள்.

காரைப் பத்தைகளை கடந்து வடபுலத்தின் சுருக்குப் பாதை யில் மறுகி நடந்த அவள், ஒருமுறை தும்மினாள்; மூக்கை லேசாக உறிஞ்சிக் கொண்டாள். நெஞ்சகப் புள்ளிகளின் அணைப்பில் இருந்து நழுவிய சின்னாளபட்டிச் சேலையை சரிக் கட்டிக் கொண்டு விரைவு பாய்ச்சி நடந்தாள். ஈரம் படிந்த குறுமணலில் அடிச்சுவடுகள் பதிந்தன.

மனை மிதித்ததும், கால் மண்ணைத் தட்டிக் கொண்டு திண்ணையில் இருந்த மூங்கில் தட்டியில் உலர்ந்து கிடந்த புடவை, ரவிக்கையை எடுத்துக் கொண்டு நடைக்குப் போனாள், அன்னக்கிளி. உறையூர் கொட்டடியும் தட்டுமறித்த புது ரவிக் கையும் பொலிய மீண்டாள், அவள். உள் பாவாடையை இழுத்துவிட்டவாறு, கொசுவத்தை இறக்கிவிட்டு முன்றானைத் தலைப்பை இழுத்துவிட்டுக் கொண்டாள். ரவிக்கையின் அடி முடிச்சை இறுக்கினாள். முதல்தரம் முடிச்சு விழ மறுத்தது. சுவ ரில் பதிந்திருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டே

ஈரத் துணிகளை வாசலில் காயப்போட்டாள். முடியை 'ஆற்றி' க் கோதினாள்.

உடல் அலுப்பின் தளர்ச்சி மாறிய சுறுசுறுப்புடன் அவள் இயங்கலானாள். 'விளாரிமார்' கூட்டுமாறு துரிதம் அடைந்தது. மாட்டுத் தொழுவம், செம்மறி அடைப்பு ஆகியவற்றைக் கூட்டிப் பெருக்கினாள். கிடைத்த வைக்கோல் பிசிறுகள், எரு ஆகியவற்றைச் சாணக் கிடங்கில் வீசினாள். வைக்கோல் வேய்ந்திருந்த கொட்டகைக்கு அடியில் கட்டப்பட்டிருந்த வெள்ளைப் பசுவையும் சிவப்புக் கன்றையும் தென்பக்கத் 'தொண்டில்' கட்டிவிட்டு, வைக்கோல் ஒரு 'குடங்கை' பிய்த்துத் தூவினாள். சேலையை மடக்கிக் கட்டிக் கொண்டு, வார்கோல் எடுத்து வாசலுக்கு வந்தாள்.

வெய்யில் புறப்பட்டது.

ஒருபுறம் வேப்பம் பழங்கள் சிதறிக் கிடந்தன.

இன்னொரு பகுதியில் முருங்கைப் பூக்கள் வெண்ணிறம் காட்டிச் சிந்தியிருந்தன.

மற்றொருபுறத்தில் கொன்றைப் பூக்கள் ரோஜாச் சிவப்புடன் பாய் விரித்திருந்தன.

இயற்கையின் சீதனத்தை அலுங்காமல் குலுங்காமல் கூட்டிக் குவித்து ஒதுக்கினாள், அவள். 'அப்பன்காரர் வெள்ளனவே கருக்கலுக்கு முந்தியே வெளியிலே புறப்பட்டிட்டாங்க போலே. அமாவாசை விரதம் பிடிச்சானதும் அலஞ்சிரான் காட்டுக்குப் பறிஞ்சி முதன் முதலாய் 'தாளடிச் செய்' யைத் தரிசு உழுது போட்டுப்புட்டு வந்தாங்க. ஒரு மா பரப்புள்ள நஞ்சைத் துண்டு அப்பாவுக்கு செமந்த அலுவல் வச்சுப்பிடுச்சாம். அடுத்த 'சாம்பான் தாக்கு' வேலையை இன்னிக்குச் செய்வாங்க, அறந்தாங்கிச் சந்தைக் கெடு ஆனதாலே ஆளு பேருங்க கொஞ்சம் கட்டையா இருக்கும்னு, போன வியாழச் சந்தையிலே கண்டு குளமங்கலத்து அயித்தை மகன்காரர்கிட்டேகூட

வரச் சொல்லியிருந்தாக. அந்த ஆம்பளையையும் இன்னம் காணலே!'—இந் நினைவுகளுடன் அவள் 'கடகாலே' எடுத்துக் கொண்டு மடத்துக் குளத்தை அடைந்தாள். மேலக் கரையில் இருந்த அங்காளம்மன் சந்நிதியின் முன்பாக பயந்து நின்று கும்பிட்டாள். உருப்பெற்றுத் திகழ்ந்த சின்னச்சாமி அம்பலத் தின் சித்தட்க்கமான புது மனை அவள் கண்களில் நின்றது! தண் ணீர் வாளியுடன் திரும்பினாள்; எருவைக் கரைத்து வாசலில் தெளித்தாள்.

அப்போது, 'மளமள' வென்று கிளைகள் சில ஒன்றன் பின் ஒன்றாகக் கொன்றை மரத்திலிருந்து கீழே விழலாயின. ஒரு கணம் நிதானமடைந்தாள், அன்னக்கிளி. பிற்பாடு, "யாரு மரத் திலே இருக்கிறது?" என்று அதிகாரத்துடன் குரலில் வேகம் பாய்ச்சிக் கேட்டாள்.

அவள் பேச்சினூடே அடுத்த சில கொம்புகள் விழுந்தன.

"யாருங்கிறேன் அது மரத்து மேலே?" என்று கேட்டு விட்டு, அண்ணாந்து பார்த்த அவளுக்கு ஆள் யார் என்று சரி யாக விளங்கவில்லை.

"நான்தான் ஒன்னோட அயித்தை மகன்!" என்ற பதில், உச்சாணிக் கொப்பில் இருந்து ஓடோடி வந்தது.

அக் குரல் கேட்டதுதான் தாமதம், அவள் ஓர் அரைக் கணம் அப்படியே அசந்து போனாள். 'யாரது?—எங்க வீராயி அயித்தை மவன்காரவுகளா? என்ன அது அதிசயக் கூத்தாயிருக் குதே?... அக்கரைச் சீஷமயிலேயிருந்து ஆகாசக் கப்பலிலே வந்து இந்தக் கொன்னை மரத்திலேயா ஒண்டியிருக்காக அவுக?... என்னடி புதுக் கதையாய் இருக்கு?' என்று எண்ணமிட்டவள், கண்களைத் தீட்டிக் கொண்டு மீண்டும் அண்ணாந்து பார்த்தாள். காலை இளம் பரிதியின் பொற்கிரணங்கள் அவள் பார்வைக்குத் தெளிவையூட்டின.

அப்பொழுது அவள் ஓர் உண்மையை அறியலானாள்.

"ஓகோ!... குளமங்கலத்துக்காரவுகளா? எங்க ஒன்றுவிட்ட அயித்தை மகன்காரரா? அப்பாரு வயல் வேலேக்கு கைக்கு ஒத்தாசையா வரும்படி சொல்லியிருந்த ஆம்பிளே வந்து கொழை சரட்டுறுங்க!... நல்ல கதைதான்!..." என்று சொல்லிக் கொண்டே அவள் நகர்ந்தாள்.

"புரிஞ்சுதா அன்னம்?" என்று கேட்டான் குளமங்கலத்து இளவட்டம் மாணிக்கம்.

"புரிஞ்சுது, புரிஞ்சுது!" என்றாள் அன்னக்கிளி, வெட்கம் பூக்க.


"பேய் பிசாசின்னு பயந்திட்டியோ?"

"நான் எதுக்குப் பயப்படப் போறேன்? நீங்க என்னோட தங்கமான அயித்தை மகன்னு புரிஞ்சுக்கிட்டதும், எனக்குப் பேய் பிசாசு ஞாபகம் வருமா, என்ன?"

"பலே, பலே!" என்று சிரித்தவனாக, "எட்டிக்க அன்னம். கொழை சீவப்போறேன். அம்மான்காரக மொட்டை வண்டியிலே செட்டியார்வூட்டு மரங்களோட தழைகளைக் கட்டுக் கட்டிப் போட்டுக்கிட்டுப் போயிருக்காங்க. கஞ்சிக்கு வந்திடுவாங்கன்னு சொல்லச் சொன்னுங்க!" என்று தெரிவித்தான், மாணிக்கம்.

"நல்லதுங்க!" என்றாள் அன்னம். "நானு கேலி பேசினதை இவுக மனசிலே வச்சுக்காம இருக்க வேணும். சொல் தாங்கா ரோசக்காரவுகளாச்சே!"

கொத்துக் கொத்தாக மலர்ந்திருந்த மல்லிகைப் பூங்கொத்தில் ஒரு பூவை எடுத்து தனது அள்ளிச் செருகிய கொண்டையிலே செருகிக் கொண்டாள், அவள். பிரித்து வைக்கப்பட்டிருந்த வண்டிக் கூண்டின் அடியில் கூட்டுமாறுகளைப் போட்டுவிட்டு, உள்ளே நடைக்கு நடையைக் கட்டினுள். பூவையுடன் பூ மணமும் தொடர்ந்தது.



"யாரது? அயித்தை மவன்காரவுகளா?" என்று மரத்தின் மீது இருந்த மாணிக்கத்திடம் வினவினாள் அன்னம்.

ஆறு நாழிகைப் பொழுது இருக்கும்.

கும்பாவை எடுத்து வைத்துக் கொண்டு கஞ்சி குடிக்கலாமென்று நினைத்த அன்னக்கிளிக்கு, அலமாரியில் இருந்த வீரமணியின் கடிதத்தைப் படிக்க வேண்டும் என்னும் துடிப்பு ஏற்படவே, கும்பாவை அடுப்பங்கரையிலே வைத்துவிட்டு, உள்ளே வந்து கடிதத்தை எடுத்தாள். அன்பைத் தொடுவது போன்ற உணர்வுடன் அதைத் தொட்டாள்.

தொட்ட விரல் மணத்தது.

படிக்கத் தொடங்கினாள்.

சொற்கள் கூட்டிய உதடுகள் மணத்தன.

"மகாஸ்ரீ ஸ்ரீ அம்மான் அவர்கள் சமூகத்துக்கு, வீரமணி தண்டனிட்டு எழுதிக் கொண்டது.

இப்பவும் இவ்விடம் சேமம். அவ்விடம் சேமத்துக்கு—தாங்கள், அன்னக்கிளி சேமத்துக்கு—நம் குல தெய்வமான அங்காளம்மையைப் பிரார்த்திக்கிறேன்.

மேல வளவுச் சுப்பையாச் செட்டியார் மகன் சுந்தரம் வசம் உங்களுக்கும் அன்னக்கிளிக்கும் துணிமணிகள் குடுத்து அனுப்பியிருக்கிறேன். இத்துடன் ஒரு வேட்டியும் சட்டையும் தனியாகக் கட்டி அனுப்பியிருக்கிறேன். அதை அன்னக்கிளி கையால் நான் அவ்விடம் வரும்போது வாங்கிக் கொள்ளுகிறேன். இந்த ஆசையைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படலாம். என்னமோ, எனக்கு இப்படி ஓர் ஆசை தோன்றிற்று. அது மாதிரியாகச் செய்திருக்கிறேன். உரிமை கொண்டாடச் செய்த காரியம் இது.

அம்மான் மகளுக்குக் கருவாடு என்றால் கொள்ளை ஆசை. ஆகவே, இந்த நாட்டுச் சுறுக் கருவாடு ஒன்றையும் வாங்கி முழுப் பிரியத்தோடே அனுப்பியுள்ளேன்.

ஒருவாட்டி, அது சின்னப் பெண்ணாக இருந்த காலத்தில், நீங்கள் அறந்தாங்கிச் சந்தையில் கருவாடு வாங்கிவர மறந்த

துக்காக, 'அது' ராத்திரிப் பூராவும் சாப்பிடாது, வம்பு பண்ணியதை என்னால் மறக்கவே முடியவில்லை. அந்த ஒரு காரணத்தை முன்னிட்டுத்தான், இந்தக் கருவாட்டை இவ்வளவு தூரத்திலிருந்து காபந்து செய்து அனுப்பி வைத்திருக்கிறேன். இந்த நடப்புங்கூட உங்களுக்கு விநோதமாகப் படலாம். ஆனால், அன்னத்துக்கு இக் காரியம் மகா ஆறுதல் கொடுக்கும் கட்டாயம். எனக்கும் அப்பிடித்தான், அதனாலேயே இந்தமாதிரிப்பட்ட பகிரங்க ஏற்பாடு.

இது இப்படி நிற்க, நானும் புத்திசத்தியாகப் பிழைத்து வருகிறேன். வக்கற்றுப் புறப்பட்ட நான், இங்கு எவ்வளவோ கெட்டிக்காரத்தனமாகத்தான் இருந்து வருகிறேன். பூவாத்த குடியில் நானும் ஒரு மனிதனாக விளங்கிவிட வேண்டும் என்கிற ஒரு வைராக்கிய சித்தத்துடனேயே நான் இவ்விடம் நடந்து வருகிறேன். "பணம் இல்லையென்றால் பிணம்" என்ற பாடம் ஓயாமல் எனக்கு ஞாபகத்தில் இருந்து வருகிறது.

உங்களுடைய பாசத்தை நான் இந்த சென்மத்தில் மறக்கவே முடியாது. அப்படி மறந்தால் நான் பாவியாயிடுவேன்!

இந்த நேரத்தில் என்னைப் பெற்ற மாதா இருந்தால் எவ்வளவோ சிலாக்கியம் ஆக இருந்திருக்கலாம்! எனக்கு பொசிப்பு இல்லே!

உங்கள் அனைவரையும் நேரில் காண ஒவ்வொரு நிமிசமும் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த மாசக் கடைசியில் புறப்பட உத்தேசம். மற்ற தாக்கல்கள் நேரில் கண்டு......

மற்றவை பின்பு வேணும்.<br>
ஸ்ரீ அங்காளம்மன் துணை.<br>
இப்படிக்கு<br>
தங்களுடைய அன்பான<br>
மு. வீரமணி.

கண்களில் மண்டியிருந்த பனித் திரள்களுடன் அவள் எழுந்து சம்பிரமாகச் சிரித்தாள். அந்த சிரிப்பே அவளுக்குரிய பசுமை மிகுந்த எதிர்காலத்துக்கு ஓர் ஆதார சுருதியாக அமைந்துவிட்டதைப்போல அவளுடைய உள் மனத்தில் தோன்றியது.

"அயித்தை மவன் போட்ட தபாலை எத்தனை கடுத்தம் வேணுமின்னாலும் படிக்கலாம்; அலுக்காது; சலிக்காது. முதமுதல்லே கதவை அடைச்சுக்கிட்டு கமுக்கமாகப் பிரிச்சு கமுக்கமாகப் படிச்சிக்கிட்டு அப்படியே கமுக்கமாக ஒட்டிப்புட்டதுப்பு இன்னமும் அப்பாருக்குத் தெரியாது!... ஒரு நாளைக்கு பேச்சு வந்தாக்க, கதவைப் பலக்கத் தட்டுற பரியந்தம் நான் உள்ளாற குந்தியிருந்ததுக்கு உண்டான இந்த முகாந்தரத்தை விசாரிச்சால், அப்ப இதைப்பத்தி பையக் கோடி காட்டிக்கிடலாமே!..."

அன்னக்கிளிக்கு இப்போதுதான் கஞ்சியின் நினைவு எழும்பிற்று. 'விருந்தாடி விசயம் தெரிஞ்சுதான் நானு கஞ்சி குடிக்கோணும்' என்ற சிந்தனையில் அவள் ஒதுங்க வேண்டியவளானாள். அக் கணத்தில், அந்த விருந்தாடியின் நினைவையும் அவள் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அந்நிலை தவிர்க்க முடியாததொரு விளைவாகத் தோன்றியது. "குளமங்கலத்துக்காரரு நல்ல குணசாலி!... நாலு எழுத்தை நாகரீகமாகக் கத்துக்கிட்டவுக. காந்திக் கட்சிக்கு கச்சை கட்டிக்கிட்டு நிக்கிறவுக. நேரு மவராசன் சிவலோகபதவி அடைஞ்சதும் ஒருநாள் மூச்சூடும் பட்டினி இருந்தவுக. நம்ப நாட்டு மண்ணை எதிரிங்க வசப்படுத்தச் செஞ்ச சூதுங்களைப் படிச்சு கேள்விப்பட்டு, உடனேயே கூட்டங் கூட்டிக் கதர்க் கொடி ஏந்தி ஊர்வலம் வச்ச திரராச்சே அவுக!... அவுக நெருப்புப் பறக்க அப்பப் பேசினதை மறக்கவே ஏலாதே!... போன பொங்கல் கெடுவிலே சிரகச்சம்பா கண்டுமுதல் நடந்துக்கிட்டிருக்கப்ப, களத்துமேட்

டுப் பக்கம் சேதித்தான் படிச்சாங்க; அந்நிய நாட்டிலே திடீர்னு மாண்டுபோன அந்த மவராசனுக்காகக் கேவிக்கேவி அழுது துடிச்சவுக அவுக!... அக்கம் பக்கம் பதினாறு தலைக்கட்டுலே யும் இவுகளைத் தெரியும். அன்புதான் வாழ்க்கைன்னு கூட்டம் நாட்டம் போட்டுப் பேசுவாங்க! அன்புக்காக எம்புட்டோ உழைச்சு வாரவுக!... பேச்சும் நடப்பும் ஒண்ணுக் கொண்ட வுக!... எம்பேரிலே ரொம்பவும் பாசங்கொண்ட அயித்தை மவன் அது!... துளிவிட்ட சொந்தம்!... என்னைக் கொண்டுக் கிடுறதுக்கு ஆசைப்பட்டவுக! 'எங்க முறை மச்சானுக்குத் தான் நான்' அப்பிடியின்னு எங்க அப்பன்காரக, நானு சடங் கான சமயத்திலே அவுககிட்டே அடிச்சுச் சொல்லிப்புட்டாக ளாம்!... என்ன விதியோ, அவுக இன்னமும் ஒண்டிக்கட்டை யாத்தான் இருந்துக்கிட்டு வாராங்க!..."

இத்தகைய சிந்தையின் ஏக்கம் அவளுள் மனப் புழுக் கத்தை அளித்தது. உள்ளத்தின் நெகிழ்ச்சியின் விளைவாக அவள் கடை விழிகளில் ஈரக் கசிவு படர்ந்தது. அந்த ஈரத்தில் மாணிக் கம் நிழலாடினான்; மாணிக்கத்தின் அழகிய அன்பு முகம் நிழ லாடியது.

## 4 தந்தி வந்தது!

சிங்காணித் தோட்டத்தை நோக்கி நடந்தாள், அன்னக் கிளி.

மேற்குத் திக்கில் அவள் அடிச்சுவடுகள் பதிந்து விலகின. நெல் அரைக்கும் மில், செல்லப்பச் செட்டி பனந்தோப்பு, தாவூ கண்ட் சாயாக்கடை ஆகிய பகுதிகளைக் கடந்து 'குத்துக் கட்டலை'க் கொல்லைக்குக் குறுக்கே வைத்திருந்த காரை முள் பத் தையை லாகவமாகத் தாண்டி நடக்கலானாள். மஞ்சள் நிறக்

கடலைப் பூக்களை ரசித்த உணர்வு உள்ளத்தில் தேங்கிய சுகத்துடன் அவள் தோட்டக் கிணற்றை அடைந்த சடுதியில், ஆவணத்தாங் கோட்டைச் சாலையில் தஞ்சாவூர்—மீமிசல் பஸ் போய்க் கொண்டிருந்ததைக் கண்டாள்.

வழியில் ஒரு கும்பல் கடலை சுட்டுத் தின்று கொண்டிருந்தது.

வெய்யில் சுள்ளாப்புடன் அடித்தது.

செப்புக் குடத்தை இறக்கி வைத்து, வாளியில் கயிற்றைக் கட்டித் தண்ணீர் இழுத்து, இரண்டு கை தண்ணீரை முகத்தில் வீசிக்கொண்டு, 'என்னமாக் காயுது பாளத்த வெயில்!' என்று அலுத்துக் கொண்டாள், அன்னம். 'பதினைஞ்சு நாழிகை வந்திடுச்சுல்லே. அதோட குணத்தைக் காட்டாம இருக்கும் பின்னே?'

குடத்தைக் கழுவி ஊற்றிவிட்டு, அடுத்த தடவை தண்ணீர் இறைத்தபோது, கிணற்றின் வாய் பிட்டுக் கொண்டு சரிந்து விழத் தொடங்கியது. நல்லவேளை, அவள் சுதாரித்துக்கொண்டு தப்பினாள். 'ஊர்ப் பஞ்சாயத்துக் கிணத்திலே தண்ணீர் வத்திப் போச்சு. அதாலேதான் இவ்வளவு தொல்லே! ...'

அவள் இப்போது வெகு நிதானமாகத் தண்ணீர் வாளியை இழுத்தாள். 'முந்தி ஒருவாட்டி இதுமாதிரித் தண்ணி இறைக்கையிலே, கிணத்து உள்வாய் புட்டுக்கிட்டுச் சரிஞ்சப்ப, ஆத்தா கிருபையாலே எங்க சொந்த அயித்தை மகன் வந்து என்னோட கையைப் பிடிச்சு பின்னுக்கு இழுத்திடுச்சு. நான் தப்பிச்சுக் கிட்டேன். மௌத்திக் கண்டத்திலேயிருந்து தப்பிட்டதாச் சொன்னிச்சு 'அது'! ...' என்ற பழைய ஞாபகம் அவளை ஆட்கொள்ளவே, ஓர் அரைக்கணம் அப்படியே சிலையானாள். 'இந்த நடப்பை பொன்னுத்தா ஒளிஞ்சிருந்து கண்டு, அப்பாலே என்னை நைத்தியம் செஞ்சிது. அப்ப அவ சடங்காகலே. சின்னப் பொண்ணு இருந்திச்சு. எம்புட்டு மனச் சந்தோஷத்தை அவ என்னத்தைக் கண்டுக்கிட்டாள்? ... முறைமைக்கார மச்சான்

என் கையைத் தொட்டிழுத்துக் காப்பாத்தினதாலே, தப்பிச் சேன். இல்லாங்காட்டி ஊர்வாய் கண்டவாகிலே முணுமுணுக் காதா?...'—தனக்குக் கிட்டிய ஒரே உரிமையாக—ஒரே உற வாக நிலவி வரும் அந்த நேசத்தின் பிம்பமான வீரமணியின் இன்ப நினைவுடன்—அந்த இனிய நினைவின் ஆனந்தத்துடன், அவள் நீர்க்குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு, வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தாள். 'எனக்கு உடைய —எனக்கு மட்டுமே உடைய என் மச்சானை நாளைக்கு நேருக்கு நேர் நான் கண்டுக்கிடப் போறேனே!...'

மஞ்சிவிரட்டு வெளியில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந் தன.

மாடு மேய்த்த சேரிச் செல்வங்கள் கல்லெறிந்து மாம்பிஞ்சு கள் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

குப்பை வண்டி ஓட்டி வந்த சுப்பன் சேர்வை, "டேலே, மாட்டாரங்காரப் பயலுகளா! மாங்காய் அடிக்காதீங்கடா!... ஓடுங்கடா!... வந்தேன், அடிச்சுப் போட்டுப்புடுவேன்!," என்று அதட்டிக் கொண்டே, மாடுகளை அடித்து விரட்டினார்.

சவுக்கைத் தோப்பில் நுழைந்தபோது, அவளுள் ஒரு வகைத் திகில் மூண்டது. வேகம் பாய்ச்சிக் கடந்தபோதுதான் அவளுக்கு நல்ல மூச்சு வந்தது. 'போன பெருங்காறை மூண்டர் திருநாள் சமயத்திலே பொன்னுத்தா இந்தத் தோப்பிலே புல் லுச் செதுக்கிக்கிட்டு இருக்கையிலே, யாரோ ஒரு போகுடிப் பயமவன்—அக்கா தங்கச்சியோட பொறக்காத பாவிப் பயல்— அதைக் கெடுத்துப்புட முனைய, அந்தப் பயமவனைப் பல்லாலே கடிச்சுக் குதறிப் போட்டுப்புட்டு, மானத்தைக் கட்டிக் காத்துக் கிட்டு, அது கடலே கதியின்னு ஓடியாந்திருச்சு! நெஞ்சு ஊக் கக்காரி அவ! இப்பிடி நாலு பொண்ணுங்க பாடம் படிச்சுக் கொடுத்துப்புட்டாக்க, அப்பறம் அதுமாதிரியான அடாபுடி மோசங்க நடக்கவே நடக்காதாக்கும்! பொன்னுத்தா மெய்யா

ஆமே நல்ல பொண்ணு!' நிறை காத்த அந்தத் திண்மையை நெஞ்சாரப் போற்றி நடந்தாள், அன்னம். பொன்னுத்தாவை ஏசிப் பேசிய குடியிருப்பின் நடப்பையும் அவளால் மறந்துவிட முடியாது.

அப்போது, சொல்லி வைத்த பாங்கிலே அதே பொன்னுத்தா எதிர்ப்பட்டாள்.

அவளைக் கண்டதும் அன்னக்கிளியின் கலங்கிய நயனங்கள் மேலும் கலங்கின.

"அன்னக்கிளி, சொகமா?" என்று சேமலாபம் கேட்டாள் தோழி பொன்னுத்தா.

"சேமந்தான்."

"என்னு, உங் கண்ணு கலக்கமா இருக்குதே?"

அவள் என்ன பதில் உரைப்பாள்?

"ஒண்ணுமில்லையே? வேனலாலே கண்ணு எரியுது!" அம்புட்டுத்தான்!" என்று புனைந்துரைத்தாள், அன்னம்.

"இல்லே, நீ இட்டுக்காட்டிச் சொல்லுறே!" என்று துருவினாள் பொன்னுத்தா. வாளிப்பான மேனியில் இருந்து அடிக்கடி சேலை நழுவியது.

"உங்க சின்னுயி உன்னை எங்கவூட்டுப் பக்கம் வரப்பிடாதின்னு 'முறி' வச்சுப்பிடுச்சா?" அன்னத்தின் பேச்சு அவள் இதயத்தைத் தொட்டிருக்க வேண்டும்.

"அது சட்டம் ஊரறிஞ்சதுதான். வீட்டு வேலை நெட்டி வாங்கிடுச்சு. இல்லாங்காட்டி சுத்தி வளைச்சானும் ஒன்னைக் கண்டு தண்டிக்கிட மாட்டேனு? சத்தியமாச் சொல்லுறேன், இந்தப் பொன்னுத்தா ஒன்னைக் கூடப் பொறக்காத அக்காண்ணுதான் வச்சிருக்கேனுக்கும்! ..."

"நூத்திலே ஒரு சேதிதான்!... நானும் ஒன்னை உடன் பிறக்காத தங்கச்சியாகவேதான் மதிச்சிருக்கேன், பொன்னுத்தா!..." என்று அவளைப் போலவே 'உணர்ந்து' பேசி



"நான் ஒன்னைக் கூடப் பொறக்காத அக்காண்ணுதான்
மதிச்சிட்டிருக்கேன், அன்னம்!" என்றாள் பொன்னுத்தாயி.

அவள் பேச்சை ஒப்புக்கொண்டாள்!

"அன்னம்! ..."

"என்ன? ..."

"வந்து...? ..."

"என்ன சேதி?" என்று குடத்தை இடுப்பில் குலுக்கிவிட்டவளாகத் தூண்டினாள் அன்னம்.

"நாளேக்கு ஒங்க அயித்தை மவன் வருதாமே?"

"ஆமாம்...ஆமாம்!" குதூகலத்தின் பிடியில் திக்கு முக்காடிப் போனாள் அன்னம்.

"வந்து..." என்று திரும்பவும் மென்று விழுங்கினாள் சிநேகிதி.

"வந்தது போதும். விஷயத்துக்கு வா, புள்ளே!" என்று பொய்க் கோபம் காட்டினாள் அன்னம்.

"உம் மச்சாங்காரரு அக்கரை நாட்டிலே யாரோ ஒருத்தியோட சேர்க்கையாம்; அந்தக் குட்டியையும் இழுத்துக்கினு தான் வருதாமே! ... ஒனக்குச் சங்கதி தெரியும்னு இருந்தேனே? காலம்பறக் கிணத்தடியிலே இதான் பேச்சாயிருந்திச்சு! ..." என்று தாழ்ந்த குரலெடுத்தாள், பொன்னுத்தா.

அணைந்த அதிர்வு அவளுடைய அமைதியை அணைத்துவிட்டது. அடங்கிய போக்கில், "இந்தப் புதுக் கதையெல்லாம் எனக்கு ஆத்தா ஆனேயாய் நீ சொல்லத்தான் தெரியுது! ... நான் பழைய கதையிலேயே சுத்திக்கிட்டு இருக்குறேனே!" என்று மட்டும் வேதனை முட்ட, வெக்கை மூச்சு முட்டச் சொன்னாள் அன்னம்.

"எங்க அயித்தை மவனே நம்பியிருக்கிறவ நான். அப்பறம் அவுகளும் ஆத்தாளும் விட்ட வழி! ... விடிஞ்சால் பொய்யும் நெசமும் புரிஞ்சிட்டுப் போகுது!" என்று ஒரு பக்குவக் குறிப்புடன் முடித்தாள், கிளி. ஒத்த வயசுக்காரியிடம் சொல்லிக்கொண்டு நடை தொடரலானாள்.

'கஞ்சிக் கலயம்' ஒன்று குறுக்கு மறித்து நடந்தது.

தெற்குச் சீமைக் கேதாரி "கிடை" போட்டிருந்த வேலி யில் அகப்பட்டுக்கொண்ட செம்மறிக் குட்டி ஒன்று அலறிக் கொண்டிருந்தது, அவள் காதுகளிலே தேய்ந்து விழுந்து கொண்டேயிருந்தது!

**ப**லாப் பழத்தைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து திண்ணைத் தாழ்வாரத்தில் வைத்ததற்குப் பிந்திதான் ஆதியப்ப அம்பலத்திற்கு சுமை கழிந்த நிலை ஏற்படலாயிற்று. இத்தனை வயசில் கணக்கன் ஒன்றரை மைல் தொலைவிற்கு காடு கரம்பை, திட்டுத் திடல் எல்லாவற்றையும் கடந்தது, உச்சிப் பொழுதில் அலஞ்சிரான் காட்டு மயானத்தைத் தாண்டி, தலைச் சுமையுடன் வருவதென்றால், லேசுப்பட்ட காரியமல்லதான். தலைச் சிம்மாட்டுத் துணியை எடுத்து மேனியையும் முகத்தையும் துடைத்துக் கொண்டு, மகனைக் கூப்பிட்டார். பதில் வராமல் போகவே, பேசாமல் வந்து திண்ணையில் தஞ்சமடைந்தார்; கதவு சாத்திப் பூட்டியிருந்ததையும் கண்டு கொண்டார்.

ஆனி மாதத்தின் முதல் செவ்வாய்ச் சந்தையில்தான் தன் தமக்கை மகன் வீரமணி ஊர் வரப்போவதாக முதல் சேதியை அவர் கேள்விப்பட்டார். அந்த மகிழ்ச்சியின் நினைவில் அந்திக்கு வண்டியோட்டிக் கொண்டு வீடு திரும்பினவுடன், இளவட்டம் போல நுகத்தடி வழியாகத் தாவித் தரையில் குதித்த சம்ப வத்தை இப்போது நினைத்துப் பார்த்தார். அப்போதைய நிலை மைக்கும் இப்போதைய நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை அவர் மனம் ஆராய்ந்தபோது, மலைக்கும் மடுவுக்கும் உள்ள பேதம் புலனாகாமல் இல்லை.

அம்பலகாரர் நெஞ்சத்து ஆழியில் எண்ண அலைகள் ஆர்ப் பரித்தன:

'நான் கண்டவாகிலே ஆசையோட நினைச்சிருந்ததெல் லாம் இப்பைக்கு இப்பிடிப்பட்ட சோதனையை உண்டாக்கு

மூன்று லவலேசமும் நினைக்கவில்லையே?... கருவேப்பிலைக் கொழுந்தாட்டம் இருக்கிற என் மவளுக்கு தகுந்த புருஷன் கெடைச்சிட்டுது என்கிற நிம்மதியிலே இத்தனை காலமாய் சந்தோசம் கொழிச்சுக்கிட்டு இருந்ததுக்கா இப்ப இப்பிடிப்பட்ட இடி வந்து விழுந்திருக்குது?... அந்தப் பிள்ளை வீரமணி இதுக்குத்தானா அக்கரைக்குப் போச்சு? இப்பிடி அந்தப் பிள்ளையாண்டான் வேறொருத்திக்கிட்டே கெட்ட சவகாசம் வச்சுக்கிட்டு இருக்கும்னு நான் சொப்பனம்கூடக் கண்டது கெடையாதே!... புதுசாச் சோடி சேர்ந்திருக்கிற குட்டியையும் கூட்டிக்கிட்டு இங்கனே வரப்போகுதாமே!... இது என்ன இடு சாமம், தயாபரி?... அரைப் பேச்சு ஊருக்குள்ளாற நடக்காமாடும்?... ஊகூம், ஒருக்காலும் இருக்கமாட்டாது!... இதைப் பத்தி ரெண்டு பேர் தாச்சி இல்லாம காலம்பற வயக்காட்டுப் பறிகையிலே என் காதிலே போட்டுப்பிட்டாங்களே! வார விதி ராத்தங்காதுன்னு சொல்லுவாங்க! அக்கா மகன் வரந் தொட்டியும் நாம ஒரு முடிவையும் செஞ்சிடப்புடாது. பட்டணக்கரையைக் காட்டியும் இந்த மாதிரிப் பட்டிக்காட்டிலே தான் பொய்ப் பேச்சுக்குக் கைகால் ஒட்ட வைக்கிறதிலே வில்லாதி வில்லன்கள் கூடுதல். இம்மாதிரியான கைங்கரியத்திலே பொம்பளைங்களும் கை ஓங்கினவுகதான்!... சரி!... சிங்கப்பூரிலேயிருந்து கொண்டுவித்து வந்திருக்கிற மேலவளவு சுப்பையா செட்டியார் மகனைப் பார்த்து காதும் காதும் வச்சாப்பிலே நடப்பு என்ன, நாடகம் என்னென்னு கேட்டுக்கிடலாம். நாளைக்கு இந்தச் சங்கதி அப்பிடியே பொய்யின்னு ஆயிருச்சுதின்னா, இது விவரம் அறிஞ்சு வீரமணி கிலேசம் காட்டும்!... அதுபோரிலே கெட்ட எண்ணம் எனக்கு விழுந்திருச்சின்னு மனத்தாங்கல் படுவான்!... நாளைக்குத்தான் வந்திடுமே!, அதுக்குள்ளாற அறக்கப்பறக்கக் கிடந்து அவதிப்படுவானேன்?... அப்பிடியே தப்பூத் தண்டாவா நடந்திருந்தாக்க, அப்பவே அதுக்கும் ஒரு

முடிவு கட்டிப்புட்டுத்தான் வேணும்!... வார பிள்ளை எனக்குக் கச்சிதமா சேதி சொல்லி ஒரு தாக்கல் கொடுக்கப்புடாதா?] ஊம்!... ஒண்ணுமே மட்டுப்படலேயே! கண்ணைக் கட்டி காட்டிலே விட்டதுக்கு சமதையாயிருக்குது! இந்த லட்சணத்திலே வீரமணியைப் பத்தின விசயங்களை ஆத்தாக்கிட்டே மூச்சுப் பறியவே கூடாது. ஆமா!... இதைக் கேட்டாக்க பாவம், எம் பொண்ணுன பொண்ணு தரையிலே விழுந்த கெண்டையாட்டம் துவியாய்த் தவிச்சுத் தண்ணியாய் உருகிப்பிடும்!..."

மனக் குடைச்சலின் உறுத்தலில் அம்பலத்துக்கு ஆற்றுமல் வந்தது. மூப்பின் அசதியும் ஐந்து நாள் செய்நேர்த்தி அலுவலும் அவரைக் கிறங்கச் செய்தன. துண்டை உதறிப் போட்டுத் திண்ணை முந்தலில் படுத்தவர் குறட்டை விடத் தொடங்கினார்.

அந்நேரத்தில்:

தண்ணீர்க் குடத்துடன் வாசலில் கால் வைத்தாள், அன்னக்கொடி.. அவள் முகம் களையிழந்திருந்தது. இலைதழையிழந்து தென்பட்ட வாகை, கொன்றை, வேப்ப மரங்கள் அவள் பார்வையில் களையிழந்து தெரிந்தன. தன்னுடைய நிலைமைக்கும் அம் மரங்களின் அப்போதைய நிலைமைக்கும் ஏதோ ஓர் ஒற்றுமை இருப்பது போன்றதோர் உணர்ச்சியை அவள் அனுபவித்தாள்; தந்தை அடித்துப் போட்டாற்போன்று துயில் வசப்பட்டிருந்ததைக் கண்ணுற்றாள். குடத்தைக் கீழே வைத்துவிட்டு, சாவிக் கொத்தை எடுத்தாள்.

கம்பளத்தான் ஒருவன் குடுகுடுப்பையைத் தட்டிக்கொண்டு வாசலில் நின்றான். "நல்ல சேதி வருது. நல்ல சேதி வருது!... இந்தக் குடும்பத்துக்குக் கேடு நினைக்கிற ஒருத்தி. அவள் ஐயோன்னு போயிடப் போறா!... அவளாலே இப்ப இந்த வூட்டிலே புகல் அடிச்சிக்கிட்டிருக்குது!... தாயே!... காணிக்கை குடு!... உன் தங்க மனசுக்கு தங்கச் சம்பா அரிசி கெடைச்சு, உன் கழுத்துக்குத் தங்கத் தாலி கெடைக்கும்!... சுடுகாட்டு

பக்கிரி சொல்லுத் தப்பாது...!" என்று 'வாக்கு'க் கொடுத்தான்.

நிலைப்படியில் நின்ற அன்னம் இமைப்பொழுது தன்னுள்ளே சிரித்துக் கொண்டாள். சுளகில் உழக்கு அரிசி, பருப்பு, உப்பு கொணர்ந்து பிச்சை இட்டாள்.

"நீ மகராசியாயிருப்பே! ... மலைபோல வந்தாலும் அல்லாத் தீம்பும் தீவினையும் பனிபோல மறைஞ்சிடும்!" என்று 'ஆருட'ம் படித்துச் சொன்னான், குடுகுடுப்பைக்காரன்.

அவள் தன்னம்பிக்கையின் அமைதியோடு உள்ளே நுழைந்தாள். 'அயித்தை மகன் சம்பந்தப்பட்ட தகவலை இப்பைக்கு அப்பா காதிலே விளுத்தாட்டக்கூடாது. பாவம், அவுகளாலே இந்த இடியைத் தாங்க ஏலாது. எட்டுக்கண் விட்டெரிய வாழ்ந்தவங்க, விதியோட அழுச்சாட்டியத்திலே காடு மேடாய்ப் போய், எதையும் விட்டுக்காட்டாமல், கடன் கப்பி இல்லாமல் வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க! ... மானத்துக்குப் பயந்தவுங்க; குடும்ப கவுரவத்துக்குப் பயந்தவுங்க; அவுககிட்டே அந்தப் பாளத்துப் போன சங்கதியைச் சொன்னுக்க, தவிச்சுப் போயிடுவாங்க! ... அயித்தை மவன் வந்ததும் ஆவணியிலேயே கண்ணாளம் வச்சுப்போடணுமின்னு ரோசிச்சிருக்காங்க. ஆண்ட பெருமாள் ஆசாரியோட ராசிக் கையாலே நகை நட்டு செஞ்சி வாங்கி மாசம் மூணு ஆயிருச்சே! ... கண்டசரம் பண்ணுறதாகவும் இருக்காங்க! ... எங் கண்ணாலத்துக்கின்னு குத்துமதிப்பா ஒரு ஆயிரத்துக்கு மேலே ரூவாயும் சேமிச்சு வச்சிருக்காங்க! ... நெல்லுக்குத்தான் பஞ்சமில்லையே!, இப்பிடிப்பட்ட கட்டத்திலே அந்த விசயத்தை அவுகள் அறிஞ்சால், பாவம், அலறிப் புடைச்சிடுவாங்க! ...' என்ற தீர்மானத்தைக் கைக்கொண்டாள்.

நேர் பார்வையில் தென்பட்ட பனையில் உச்சிச் சூரியன் தகதகத்தான்.

பெற்றவரை எழுப்ப வந்தாள், அன்னம். வாசற்புறத்தில் பன்றிகள் திரிந்தன. விரட்டிவிட்டு வந்தாள். மடத்துக் குளத்துக் கரையில் போடப்பட்டிருந்த காளவாயிலிருந்து புகை வந்து சூழ்ந்து விலகிக் கொண்டிருந்தது. நெஞ்சின் புகை கனத்தது. ஊராளும் தாயை வேண்டிக்கொண்டு நின்றாள்.

வாசலில் சைக்கிள் ஒன்று வந்து நின்றது. காக்கி உடுப்புக்காரன் ஒருவன் "சித. ஆதியப்ப அம்பலம் வீடு இதுதானா?" என்று அவளிடம் விசாரிக்க, அவள் "ஆம்" என்றாள்.

"தந்தி வந்திருக்கு!" என்றான் வந்தவன்.

'தந்தி' என்று சொல்லக் கேட்டதும், அன்னத்துக்குக் கதி கலங்கியது. உடனே தந்தையை உசுப்பினாள்.

அம்பலம் கண்களை துடைத்துக்கொண்டு அமரிக்கையுடன் தந்தியைக் கையொப்பமிட்டு வாங்கினார். அவசர தந்தி அறந்தாங்கியில் இருந்து வந்திருந்தது. எனவே, அதற்குண்டான கூலியைச் சேவகனுக்குக் கொடுத்துவிட்டு, துளி திருநீறு எடுத்துப் பூசிக்கொண்டு சுருக்குப் பையை இடுப்பில் செருகிக்கொண்டார். தந்தி உறையைக் கிழித்துக்கொண்டே ஏதோ ஒரு நல்ல சேதியை எதிர்பார்த்தவராக வளவை நாடி விரைந்தார்.

இருப்புக் கொள்ளாமல் தவித்த அன்னத்திடம் வந்து, "உன் அயித்தை மவன் நாளைக்கு மைத்தநாள் விசாழக்கிழமை காலம்பற வண்டிக்கு வருதாம். ஆயிங்குடி டேசனுக்கு என்னை வரச்சொல்லி தந்தியிலே பேசியிருக்குது!" என்று புளகத்துடன் அறிவித்தார், அம்பலக்காரக் கிழவர்.

நாணத்தை மீறிய ஆர்வத்துடன் "நீங்க வெள்ளனவே கஞ்சி குடிச்சிட்டுப் போயிடுங்க. வண்டிக்குக் கூடு மாட்டிக்கிட்டு போறுத்தான் தேவலை" என்றாள், அன்னம்.

"பின்னே என்ன, மாப்புள்ளையைக் கால்நடையாவா அழைச்சுக்கிட்டு வருவேன்?... திண்ணையிலே இருக்கு பாரு,

பலாப்பழம் அதை எடுத்து வாரத்திலே போட்டு வை. வீர மணிக்காகத்தான் இந்தப் பலாக்கொட்டையை அறுக்காம போட்டு வச்சிருந்தேன். ஒன்னோடை மரமடக்கி அண்ணமொாண் டுக்கிட்டே சொல்லி, சந்தைக் கெடுவுக்கு விளா மீன் ரெண்டு சோடி வாங்கிப்பிடச் சொல்லு! போதுமென்ன, ஆத்தா?" என்று மகிழ்வு கொட்டக் கேட்டு மகளைப் பாசம் கொட்டப் பார்த்தார்.

"அந்த நாளையிலே அவுகளுக்குக் கவுச்சியின்னுத்தான் ரொம்ப இஷ்டம். அயித்தை சாகுற பரியந்தம் நண்டு மீனை பசமா ஆக்கி, முப்பழமும் சோறும் போட்டாங்க! ... கூசாப்பு அத்தனை தேடிவராது! ..."

"இனிமே உம்பாடு, உன் அயித்தை மவன் பாடு! ..."

"சல்லிசாச் சொல்லிப்புட்டீங்க!"

"ஏன், இதுகளிலே குறுக்குப் பாய்ச்சல் காட்டுறதுக்கு யார் இருக்கா?"

"அயித்தை மவன் நம்ம வூட்டுச் சனம்தானே? இதிலே அந் நியம் அசலிலே யாரு குறுக்குச்சாலு ஓட்ட ஏலும்? அதுக்குச் சொல்லலே! ... அங்காளம்மை நல்ல மனசு வச்சால், அல்லாமே தானே நல்லபடியா நடந்திடும்!"

மகளை விநயபாவத்துடன் பார்த்த அம்பலம் தயக்கம் தையும் வெளிக் காட்டாமல், "எல்லாம் நல்லபடியாகவே நடந்துப்புடும். நாம யாருக்கும் தீவினை செஞ்சிருந்தாத்தானே நமக்கு சாமி தீவினை செய்யும்? எல்லாம் சுபமாகவே நடந்துப் பிடும்!" என்று மங்களச் சொல் உதிர்த்தார்.

"அடுப்பினைக்கு நிழல் சாஞ்சதும் உன் அயித்தை வூட்டுத் 'தொரவச்சி'யை எடுத்துத் தாரேன், போய்த் தொறந்து மெழுகிக் கூட்டிப் போட்டுப்பிட்டு வந்திடு, ஆத்தா! அப்பத் தான் வீரமணி வந்து தங்கிறதுக்குச் சவுகரியப்படும். போன அடைமழைக்குத்தான் தொறந்து பார்த்தேன், ஒழுகல் இருக்கு தான்னு பார்க்க வேண்டி! ... கெட்டியமாப் பார்த்துக்கிட்டு

உள்ளே போ. பூச்சி பொட்டுக் கெடக்கும். மெத்தனமாயிருக்காதே, அன்னம்! என்று எச்சரிக்கை செய்தார், அவர்.

அவள் 'ஊம்' கொட்டிக் கேட்டாள்.

பிறகு அம்பலகாரருக்குக் 'காப்பித் தண்ணீர்' காய வைத்துக் கொடுத்தாள்.

இராச் சாப்பாட்டுக்கு மாணிக்கமும் வந்துவிடுவான் என்று சொன்னார் அவர். இன்னும் ஒரு சில தினங்களுக்கு அவன் 'கூடமாட' இருந்தால்தான், தமக்குப் பயனாகும் என்றும் கூறினார். "முடிஞ்சால் ஒரு துண்டு கருவாடு சுட்டுப் போடு, அன்னம்."

"அந்த அயித்தை மவன் வந்தா அவுக கண்ணிலே நாலு துணுக்கைக் காட்டணுமென்ன! ... இந்த அயித்தை மவனுக்கு 'கச்சப் பொடியை' எண்ணெயிலே போட்டுப் பொறிச்சு எடுத்து வைக்கிறேன். மச்சான் வந்ததுக்குப் பொறகுதான் ஒங்களுக்கு அவுகளோட குந்திப் பேசறதுக்குத்தான் நேரம் காலம் காணுதே?" மச்சிலிருந்து எம்பி எடுத்த பன்னுடையைக் கையில் இடுக்கியிருந்தாள்.

"எம் பொண்ணு என்னையே நையாண்டி பண்ணுது! ... எம் மாம் பொழுது பேசினாலும் அதெல்லாம் உன்னைப் பத்தினதாத்தானே ஆத்தா இருக்கும்! நீ சந்தோசமாய் இருக்க வேணும்கிறது ஒண்டிதான் எனக்குக் கனா! ... ம்! ..."

இதயம் தோய்ந்த பூரிப்பு எய்தினாள் அன்னக்கிளி.

'எங்க அயித்தை மகன்காரக அப்பிடி அந்த அந்நிய நாட்டுப் பொண்ணையும் கூட்டிக்கிட்டு வாரதாயிருந்தால், அப்பன்காரரையும் டேசனுக்கு வரும்படியா தந்தி தட்டியிருப்பாகள்ளா? ஊகூம், கிழக்காலே உதிக்கிற வெயில் மேற்காலே உதிச்சாலும், அப்பிடிப்பட்ட துணிகரம் வந்துப்புட ஏலுமா என்ன? ...' என்ற எண்ணந்தான் அவளுக்குப் பூரிப்பை அளித்தது.

# 5 வியாழக்கிழமை

வியாழக்கிழமைப் பொழுது.

மம்மல் பொழுதிலேயே அன்னக்கிளி அம்மன் கம்மாயில் தலை முழுகி, மஞ்சள் பூசிக்கொண்டாள்; அம்மன் சந்நிதியில் ஈரப் புடவையுடன் சாமி கும்பிட்டு நெடுஞ்சாண் கிடையாக விழுந்து எழுந்தாள்.

'ஊருக்கு ஒசந்தவளே! தனியெழுத்துக்காரியே, தயாபரி! உன் குஞ்சைத் தனி எழுத்துக்காரியாக ஆக்கிப்புடாதே! வயித்திலே நெருப்பைக் கட்டிக்கிணு இருக்கேன். என்னைச் சோதிச்சுப்பிட மாட்டியே?... ஆத்தா!... என்னோட மச்சானும் அக்கரைச் சிமைக்குப் புறப்பட்ட எங்க அயித்தை மவனை என்னோட மச்சானுகவே திரும்பிவரச் செஞ்சுப்பிடு. இந்த வேண்டுதலைச் செஞ்சு காட்டிப்புடு. மச்சான் தாக்கலாய் அத்து இல்லாம புகைஞ்சு, ஊரே அத்தளிப்படுது! ஒனக்கு நல்லது செஞ்சு வளமையுண்டு. நானு ஒனக்குச் சொல்லிக் கொடுக்கோணும்?...' மனம் விட்டுக் கேட்டாள்.

கோயிலின் மேல் முனையில் கவுளி அடித்தது. 'நல்ல நிமித்தம்தான்!' என்று எண்ணியவளாக வீட்டுக்குத் திரும்பின போது, கருட தரிசனமும் கிட்டியது. "விசாழக்கிழமையும் அதுவுமா கருட தரிசனம் கெடைக்கிறது ரொம்ப ரொம்ப அபூர்வம்!"

வீட்டிற்குத் திரும்பினுள் அன்னம். நெஞ்சில் தைத்த நெருஞ்சி முள்ளை எடுத்து வீசினுள்.

நார்க் கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டு இருந்தார்கள், ஆதியப்ப அம்பலமும் மாணிக்கமும்.

புடவை மாற்றிக்கொண்டு வந்த அன்னம், தந்தையைத் தொட்டு எழுப்பினுள். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த அம்ப

னம், விரைவுடன் மாணிக்கத்தைத் தொட்டு எழுப்பினர்.

காலைக் கடன்களை நிறைவேற்றித் திரும்பிய அவர்களுக்குக் கஞ்சி வார்த்தாள், அன்னம். மிளகாயின் அந்தமும் சுவையும் அலாதிதான்.

வயலுக்குச் சென்றான், மாணிக்கம்.

அம்பலகாரர் ரெயில் நிலையத்தை நோக்கிக் கூட்டு வண்டியை ஓட்டினர்.

தன் நேசமச்சான் வீரமணியை வரவேற்கச் சென்ற வண்டியின் பின்னாலேயே தன்னுடைய மனசான மணசையும் அனுப்பி விட்டுவிட்டு, அவள் மட்டும் வீட்டில் இருந்தாள்.

அவள்: அன்னக்கிளி!

வீடு, வாசல், கொல்லை, குடிக்காடு என்று போட்டி போட்டுக்கொண்டு காலை நேரத்து வீட்டு அலுவல்களை புதிய உவப்புடன் செய்தாள், அன்னம். கதிர்வீச்சில் ஆய்ந்த கடலைக் கொடிகளை ஓர் ஓரமாக விசிறிப் போட்டாள். ஆனந்தத் திளைப்பில் இப்போது இருந்தபடியால், அவளுக்கு அவ்வளவு பசி கிளம்பவில்லை. என்றாலும் கஞ்சி குடித்தாள். பழங்கஞ்சி புதிய சுவை கொண்டு இருந்தது, அவளுக்கு. 'கஞ்சி குடிக்காம இருக்கலாமா? இருக்கக்கூடாது!... அப்பாலே மச்சான் வந்து என்னைச் சாடையாப் பார்த்தாக்க, 'அம்மான் மவளுக்கு மூஞ்சியிலே களைப்பு மிஞ்சியிருக்குதே?... சோறு செல்லலையோ?' அப்படியின்னு அவுக வந்து அப்பாரைக் கேட்கமாட்டாகளா?... ஆத்தாடியோ! அந்த வம்பு உடம்புக்கு ஒத்து வராது!' என்று எண்ணிப் பயந்து கஞ்சி குடித்தாள், அவள். 'அப்பவே அவுக பேச்சுப் படிச்சவுக. இப்ப பேச்சையே படிச்சுக்கிட்டு இருப்பாகளே!... நாட்டு வளப்பம் ஆளேயும் வளப்பமாக்கி இருக்குமென்ன!... நாலு பேரை ஒத்து நாலு காசு தேறிச்சின்னுத்தான் ஊர்நாட்டிலே நாமளும் தலையெடுக்க முடியுமிங்கிற பாடம் புரிஞ்சு போச்சு, அயித்தை மகனுக்கு

அல்லாம் அப்பன்காரர் செஞ்ச தற்புத்திதான்!"

அன்னக்கிளி முற்றத்துக்கு வந்தாள். அத்தை மகன் வந்து விட்ட சேதி கிடைத்தபின் சமையலுக்குத் தோதுபண்ணலாம் என்பது அம்பலத்தின் ஏற்பாடு. அவர்களுக்கு மத்தியானச் சாப் பாடு ஒரு பொருட்டல்ல. சுடு சோருக இரவு சாப்பிடுவதில் பழ கிய மக்கள் அவர்கள்.

'புலந்திரன் களவு மாலை' யைத் தொட்டுப் பார்க்க விழைந் தாள், அன்னம். அதற்கு முட்டுக்கட்டையாக வந்தார்கள்; அவ ளுடைய பாங்கிமார்களான அகிலாண்டமும் அஞ்சலையும்.

"இருந்திருந்து வேலைமெனக்கெட்டு புலந்திரனைத்தாஞ படிக்க வேண்டும்?... சிலட்டூரிலே திருவிளையாடல்னு ஒரு பயாஸ்கோப் ஆடுதாம். புதுசாம். அதோட பாட்டுப் புத்தகம் வச்சிருக்கேன். அதைப் படிச்சாலும் புண்ணியம் கெடைக்கு மாமே!"

"அவ கெடக்கிருடி, அன்னம். அயிலாண்டத்துக்கு சினிமாப் பாட்டுன்னு ஒரு மசக்கம்தான். சமைஞ்ச பொண்ணுக ஊர், பிள்ளையார் கோயில் எல்லையைத் தாண்டப்பிடாதின்னு ஒரு கட்டுத் திட்டம் வச்சிருக்காட்டி, ஒரு நாளைக்கு ஒரு ஆட்டம் மல்லுக்கட்டிப் பார்க்காம தப்பமாட்டா!... சமையறதுக்கு முன்னுடி அது கூத்திலே ஒண்ணையானும் விடவேணுமே?... அரிசி மில்லு சின்னையா அண்ணன் வேலன், வேடன், விருத்தன் வேசம் போட்டு நடிக்கிறதையும், 'காயாத கானகத்தே' பாட் டுப் படிக்கிறதையும் அலுக்காமல் சலிக்காமல் ரசிச்சதாச்சே? இப்ப அதெல்லாம் வேணும். நாம ஒரு கடுத்தம் தாயம் ஆடு வோமே!" என்ருள் அஞ்சலை. ஒன்றரைக்கண் பார்வைக்காரி. நெருப்பைக் குளிப்பாட்டிய நிறம். ஆனலும் கவர்ச்சி மிகுந்த உடல் வாளிப்புக் கொண்டவள்.

"ஏண்டி, நீ என்ன சொல்லுறே கங்காணி பேத்தி?"

"உன் இஷ்டப்படி செய்யேன்?"

"கட்டுப் பாண்டி ஆடலாமா?"

"பலே!"

"கட்டுப்பாண்டி ஆடப் போறோமே!—தங்கமே தில்லாலே!
கட்டுச் சோறு போடத்தானே ஆளில்லே!
தங்கமே தன்னானே!"

தானாக இட்டுக்கட்டி, இப்படி ராகம் நீட்டிப் பாடினாள், அகிலாண்டம். இழுத்த இடத்துக்குத் தொண்டை சென்றது!) காதுச் சிமிக்கிகள் பளபளத்தன.

பாண்டி விளையாட்டு கூடிவந்தது.

'பசு' சேர்ந்த குழிக் காய்களை மறதியாக அஞ்சலை அள்ளித் தன் பங்கில் சேர்த்து அந்தத் தவற்றை மறைக்க வல்லடி வழக்குப் பேசிக் கொண்டிருந்ததால் ஆட்டம் அதிகாரப்பூர்வமாகக் கலைக்கப்பட்டது.

தோழிகள் சென்றபின் அன்னக்கிளி வீட்டு வேலைகளை மெல்ல செய்து கொண்டு இருந்தாள்.

வேலைகள் முடியும் வேளை.

பொன்னுத்தா தலைதெறிக்க ஓடி வந்தாள். நல்லவேளை, அவளுக்குத் தலை தெறித்துவிடவில்லை. அவள் தந்தை சின்னச் சாமி அம்பலம் செய்த அதிருஷ்டம்தான், அது!

"அக்கா, அக்கா! ... உன் மச்சான் வந்தாச்சாம்ல, ஒனக்குத் தெரியாதா? ... எங்க சின்னயி ஓடிப்போயிருக்குது, அந்த ஆம்பிளையைப் பார்க்கிறதுக்கு" என்றாள், பொன்னுத்தா.

தன் அத்தை மகன் வீரமணி வந்து சேர்ந்துவிட்ட இன்பச் செய்தி அவளது கன்னி மனத்தில் பால் வார்த்தது. பொங்கிய அன்பு வார்த்து, ஆரோகணித்த பாசம் வார்த்து, பக்குவப் பட்ட பக்தி வார்த்துக் கும்பிட்ட அந்தக் கடமைக்குப் பலன் கிட்டிவிட்டது. 'ஆத்தா! அல்லாம் உன் தயவுதான்! ஒங் குந்த செஞ்ச வேண்டுதலையை நிறைவேத்தி வச்சுப்பிட்டாய் நீ! நாளை வெள்ளிக்கு ஒஞ் சந்நிதானத்திலே சிதறுகாய் அடிச்

சுப்பிடுறேன், தாயே!'

அவளுள் எண்ணங்கள் ஓடிக்கொண்டேயிருந்தன. ஆனால் அவளுக்குத்தான் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. 'கையும் காலும் எதுக்கு ஓடவேண்டும்? நான் அங்கனே அயித்தை வூட்டுப் பக்கம் இப்பைக்குத் தலையைக் காட்டினு, என்னைக் காணுறவுங்க என்னை நையாண்டி பண்ண மாட்டாங்களா? மச்சான் நல்லவிதமாய் வந்து சேர்ந்ததே போதும்!'

அன்னக்கிளி சிலை வடிவம் கொண்டாள்.

"அக்கா, நான் சொன்னது புரிஞ்சுதா?"

"ஓ... புரிஞ்சுது பொன்னுத்தா. ரொம்பச் சந்தோஷம்!" என்றாள் அன்னக்கிளி.

இரண்டாம் கட்டில் இருந்துகொண்டே வாசற்புறத்தில் விழிக் கணைகளை தொடுத்தாள், அவள். வீரமணி பெண் ஒருத்தியை அயல்நாட்டில் சேர்த்துக்கொண்டு இருப்பதாகச் செய்த புரளியை அவள் நினைத்து நெஞ்சுருகாத வேளை உண்டா? அது சம்பந்தமாக அவளிடம் கேட்கத் துடித்தாள். 'கூடாது. அந்த விசயமா இவ கிட்டே கேட்கிறது உசிதமில்லே. எல்லாம் இன்னும் கொஞ்ச நாளிகையிலே அம்பலமாயிடுது!' என்று தேறினாள்.

"நான் போயிட்டு வாரேன். இனிமே ஒன்னோடே பேசிப் புழங்கிறதுக்குக்கூட ஒனக்கு ஒழியாது!"

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே. பொன்னுத்தா! நான் சடங்கான நாள்தொட்டு அவுக மூஞ்சியை நிமிர்ந்து பார்த்து, அத்திப் பூத்ததாட்டம் நாலு ரெண்டு பேச்சு பேசினதைத் தவிர, வேறே எங்கே நான் கூடுதலாய் அவுகளோடே பேசியிருக்கேன்?... நீ கண்டும் காணுமலும் வரவேண்டிய காலத்தை உண்டாக்கிப்புட்டாங்க, ஒங்க சின்னயி. நீ எப்ப வந்தாலும் முதல் சலுகையாய் உன்னோடே தான் நான் பேசுவேன். அதான் நம்ம சிநேகத்துக்கு ஒத்தது!... இல்லியா?"

"ஆமா, அக்கா! விருந்தாடிக்கு சமைச்சுப்பிட்டியா?"

"அதெல்லாம் நேருசீராச் செஞ்சுப்புட்டேன். அரிசி களைஞ்சு போட்டிருக்கேன், உலையிலே. விளை மீன் வாங்கிச் சமைச்சிருக்கேன். முட்டை அவிச்சு வச்சிருக்கேன். இலை நறுக்கிப் போட்டிருக்கேன். வாடிக்காட்டு கிழவி மகள்கிட்டே சொல்லி புத்துருக்கு நெய் வாங்கி வச்சிருக்கேன்! நான் கடைஞ்ச மோர்—பசும்மோர் இருக்குது."

"உங்க அயித்தை மவன் கொடுத்துவச்சவுக, அன்னம்!"

"நான்தான் மெய்யாலுமே கொடுத்துவச்சவள்! ..." என்று தன்னை மறந்த லயத்தில் லாகவம் சேர்த்துச் சொன்னாள், அன்னம். மூக்கின் முனையில் செம்மை ஊறியது. கழுத்தில் இழைந்த இரட்டைவடச் சங்கிலியை கை விரலால் நெருடி விட்டுக்கொண்டிருந்தாள்.

செட்டித் தெரு கந்தசாமி செட்டியார் பெண், கைக்கடிகாரம் ஒய்யாரம் காட்ட அவ்வழியே கடந்து சென்றாள். கடந்த வாரம்தான் அவள் கழுத்தில் தாலி ஏறியது.

"மணி என்ன, மணிமேகலை?" என்று கேட்டாள், அன்னம்.

மணிமேகலை அவளை அண்டிவந்து, "நீ பார்த்துக்க" என்றாள்.

"அடே, மணி நாலு ஆகப் போகுதே. குத்தமில்லே, ராகு காலம்கூடக் கழிஞ்சிருச்சுது!"

அந்தப் பெண் சென்றுவிட்டாள்.

சிரிப்பை கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடினாள், பொன்னுத்தா. "கெடிகாரத்தைக் கட்டிக்கிடச் சொல்லுற பிள்ளைங்க மணி பார்க்கிறதுக்கும் கத்துக் கொடுத்திட மாட்டாங்களா, அக்கா?" என்று வினவினாள்.

"இதுக்கு மணி பார்க்கத் தெரியாமல் இல்லே, பொன்னுத்தா. மத்தவுக எப்பிடியோ, இது படிச்சது. என்னோட அஞ்

சாம் வகுப்பு படிச்சுது! ... நிமிஷம் விநாடி சுத்தமாய் நேரம் கேட்பேனின்னு, கடிகாரத்தையே எங்கிட்டே நீட்டுப்புடுதுக! அம்புட்டுத்தான்!"

"கதை அப்பிடியா?"

"ஊம்!"

"முழுசா ஒனக்கும் ஒரு கடியாரம் வாங்கி வந்திருப்பாக உங்க மச்சான். ஆமா!" என்றாள் பொன்னுத்தா.

"பொன்னுத்தா, எனக்குக் கடிகாரம் தேவையில்லே. அந்த ஆடம்பரமும் தேவையில்லே! ... எனக்கு முழுசா அவுக கெடைச்சிட்டால் அதுவே லட்சாந்திரம்! ..." என்று உருகினாள் அன்னக்கிளி. பேசும்பொழுது அவள் மேனி புல்லரித்தது.

அப்பொழுது, பெட்டைக் கோழி ஒன்றுடன் வந்தான் மாணிக்கம்.

பொன்னுத்தா மரியாதையோடு ஒதுங்கியவண்ணம் ஜாடை சொல்லி ஓடிப்போனாள்.

"வாங்க. வயல் அலுவல் முடிஞ்சிருச்சுங்களா?"

"ஊம்" கொட்டினான் மாணிக்கம்.

முண்டா பனியனில் சேற்றின் துளிகள் படிந்திருந்தன. "குருந்தடி பிஞ்சையைக் கரம்பை ஓட்டச்சுப் போட்டிருக்குது. மிச்சம் சொச்சத்தை நாளைக்கு முடிச்சுப்புடணும்" என்று விவரம் தெரிவித்தான், அவன். இடுப்பில் செருகியிருந்த செய்தித் தாளை விரித்துப் படித்தான்.

தரையில் கால் கட்டுடன் கிடந்த கோழி முரண்டுபிடித்தது.

"கோழி ஒங்களுக்கா?"

"இல்லே. ஒனக்கு!"

"எனக்கா?"

"ம்! ..."

"எனக்கு எதுக்கு?. அப்பா, கொண்டாரச் சொன்னாகளா?"

"ஊகூம்! ..."

"பின்னே?"

"உம் மச்சானுக்கு உங் கையாலே ஆக்கிப் போடுறதுக் காக வாங்கியாந்தேன்."

"காசு எம்புட்டு?"

"எதுக்கு?"

"கோழிக்கு!"

வேதனையுடன் மாணிக்கம் சிரித்தான். "இப்பிடியெல்லாம் பேசினு எம்மனசு தாளாது, அன்னம். உம் மச்சான் வந்தாச் சாம்! உம் மச்சான் மட்டும்தான் வந்திருக்குதாம்! ..." என் ருன்.

"நீங்களும் எனக்கு அயித்தை மவன்தானே! குளமங்க லத்து அயித்தையும் அயித்தை புருஷனும் இருக்குமட்டுக்கும் ரெண்டு குடும்பமும் தேவை. திங்களுக்கு ஒண்ணடி மண்ணடியா யிருந்து வந்ததுதானுங்களே! இப்பவும் ஒங்களை இங்கையே இருந்து சாப்பிடச் சொல்லி எவ்வளவோ படிச்சுப் படிச்சு அப் பன்காரரு சொல்லியும் நீங்கதான் கேட்டுக்கிடாம, சமைச்சுச் சாப்பிட்டுக்கிறீங்க! ... மத்தப்படி, நீங்க வேறே எதையும் மன சிலே தேக்க வச்சுக்கிடாதீங்க. நாலு சாதி சனம் மாதிரி நீங் களும் ஒரு கண்ணாலம் கட்டிக்கினு சந்தோசமாக இருக்க வேணுமிங்கிறது என்னோட ஆசையும் எங்க அப்பன்காரர் ஆசையும்! நீங்கதான் சம்மதிக்கமாட்டேங்கிறீங்க! நேத்திக்கு ராவிலேகூட அப்பாரு சொல்லி வருத்தப்பட்டாங்க! ..." என்று தொடர்ந்து பேசினாள், அன்னம்.

சலனமின்றி அவளை ஊடுருவிப் பார்த்தான்; "அதெல்லாம் முக்காலும் உண்மைதான் அன்னம். சரி, உன் இஷ்டப்படி சாப் பிடுறேன். போடு!" என்ருன், மாணிக்கம், கையில் இருந்த செய்தித் தாளில் கண்ணேட்டம் செலுத்தியவாறு. மாஸ்கோ விமான நிலையத்தில் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்

தியை ரஷியப் பிரதமர் கோசிஜின் கைகுலுக்கி வரவேற்ற ரேடியோப் புகைப்படத்தைப் பார்ப்பதில் கட்டுண்டிருந்தது, அவனது மனக்கண்.

"குந்துங்க. இந்தாக் கூப்பிடுறேன்."

"ம்" என்று அவன் வாய் மூடவில்லை.

அதற்குள் ஆதியப்ப அம்பலம் அடியெடுத்து வைத்தார். மாணிக்கத்தைக் கண்டதும், "இப்பத்தான் வந்தியா? உன் ஞாபகமாத்தான் வந்துக்கிட்டிருக்கேன்" என்றார் அவர்.

"வந்து கால்மணி நேரமாச்சுதுங்க" எனப் பதில் கொடுத்தான், மாணிக்கம்.

"என்னமோ தெரியலே, இவுக சாப்பிடுறதுக்குக்கூட இன்னிக்கு ஒப்புக்கிடலே, அப்பா!" என்றாள் அன்னம்.

"வேறே என்ன இருக்குதுங்க அம்மான்?... வீரமணிக்கு சாப்பாடு போட்டு ஏற்பாடு செய்யறதுக்குக் குந்தகம் ஏற்பட்டுப்பிடக் கூடாதேன்னுதான் சொன்னேன். அதுக்காக, அன்னத்துக்குக் கோபம் வந்திருச்சு!" என்று இதம் பதமாகச் சொன்னான், மாணிக்கம்.

அம்பலம் சிரித்தார். "நம்ம அன்னத்தோட கண்ணாலம் நடந்த சூட்டோட ஒன் கண்ணாலத்தையும் நடத்திப்புடணும்னு இப்பக்கூட ரோசிச்சுக்கினு வந்தேன். இனியும் நீ தடுத்துச் சொல்லித் தட்டிப் பேசினா; எங்களுக்குக் கிலேசமாகிப்பிடும்" என்றார்.

"ஆகட்டுங்க. நீங்க ஆக வேண்டியதுகளைக் கவனியுங்க. வீரமணி நல்லபடியா வந்து சேர்ந்தாச்சில்ல?"

"ஆமாப்பா!... கொஞ்ச நாளா, எனக்கு மனசு ஒருநிலைப் படலே. இப்பத்தான் சள்ளை போய், நிம்மதியாயிருக்குது!..." என்று மாணிக்கத்தைப் பார்த்துச் சொன்னவர், இப்போது தம் அருமைப் புதல்வியை நோக்கி, "ஆத்தா, வீரமணி வந்திடுச்சு!" என்று அழகுச் சிரிப்புடன் கூறினார்.

"தெரியுங்களே!" என்றாள் அன்னம். சொன்ன சடுதியில் வெட்கத்துடன் உள்ளே மறைந்துவிட்டாள்.

வயல் வரப்பு விஷயமாக நடப்புகளை எடுத்து வைத்தான், மாணிக்கம்.

"உம்" கொட்டிக் கேட்டார் பெரியவர். "சரி. மாப்பிள்ளை யோடே நீயும் சாப்பிடலாம். கொஞ்சம் இருவேன்" என்றார்.

"வேண்டாங்க. நான் முன்னாடிச் சாப்பிட்டுப்புட்டு புறப் படுறேன். வூட்டுக்குப் போய்ப் படுத்திருந்திட்டு, விடிகாலையிலே திரும்பிடுறேனுங்க."

"சரி, உன் பிரியம்."

மாணிக்கத்தை உண்ண அழைத்தாள், அன்னம்.

"எந்திரு. எப்பவும் போலே நீ சகஜமாயிருப்பா! நீ எங்க வூட்டுப் பிள்ளை!" என்று சொன்னார் அம்பலம்.

மாணிக்கம் புன்னகை செய்தவாறு, கை கழுவிக்கொண்டு உள்ளே சென்றான்.

"மாணிக்கத்துக்குச் சாதம் போட்டதும், வீரமணிக்குச் சாப்பிடத் தோதுபண்ணு, அன்னம். பலாப் பழத்தை நறுக்கிப் போட்டுப்புட்டு நான் போய் மாப்பிள்ளையைக் கூட்டிக்கிட்டு வந்திடுறேன்" என்றார் பெரியவர். பரிமாறப்பட்ட இலையில் தம் கைப்பட ஐந்தாறு பலாச் சுளைகளைக் கொட்டை நீக்கி வைத் தார் அவர்; மகளிடம் வீரமணிக்குரிய சாப்பாட்டின் விவரம் கேட்டுக்கொண்டு வெளியேறினார்.

போனவர் திரும்பி, "நல்லாச் சாப்பிடு மாணிக்கம். அவ சரப்படாமல் சாப்பிடு" என்று சொன்னார்.

"சரிங்க!"

குனிந்த தலை நிமிராமல் பதிலிறுத்தான் மாணிக்கம்.

நிமிர்ந்த தலை குனியாமல் புறப்பட்டார், அம்பலகாரர்.

"அப்பார்கிட்டே முன்னைப் போல கோள் சொல்லிப்புடு வேன். ஆனதாலே, வயிறு கொண்ட மட்டும் வஞ்சனை பண்ணு

ச் சாப்பிட்டாகணும், நீங்க. ஆமா, சொல்லிப்புட்டேன் இப் வே! ...” என்று உத்தரவு பிறப்பித்தாள், அம்பலகாரர் கள்.

வறுத்த ‘கச்சம் பொடி’ வாசனை கூட்டியது.

“உத்தரவு, அம்மான் மகளே! ...”

சிரித்துக்கொண்டே சொன்னான், மாணிக்கம்.

மல்லுக்கட்டி வரவழைத்துக்கொண்ட சிரிப்பு அது என் தை அவன் மாத்திரம்தான் அறிவானே?

# 6 உரிமைக்கு ஒருத்தி

அம்மனுக்கு இரு மருங்குகளிலும் நின்று வெண்சாமரம் சும் சேடிமார்களை நினைவூட்டும் வகையில், ஆதியப்ப அம் த்தின் சீமை ஓட்டு வீட்டின் இருபுறங்களிலும் நின்ற வேப்பங் ன்றுகள் இளந் தென்றலை வீசிக்கொண்டேயிருந்தன. இலை ழைகள் சிவப்பட்டிருந்த மற்றப் பெரிய மரங்கள் உண்டாக்கி ட்டிருந்த துள்ளியமான வெளிச்சத்தின் இடைவெளியில், ந்தி வானத்தின் சிந்தூரக் கதிர்கள் பளிச்சிட்டுப் பரவின. அசைந்தாடிப் பசுமை கொழித்த வேப்பந் தளிர்கள் பொன்வண் ணம் பொழிந்து விளங்கின.

சுவரில் பதிந்த கண்ணாடியில் பதித்த பார்வையை எடுக்க னம் ஒப்பாமல் நின்றாள், அன்னக்கிளி. வீரமணி அன்புடன் அனுப்பியிருந்த சேலையும் ரவிக்கையும் அவளுக்கு மிகவும் எடுப் ாக இருந்தன. பட்டும் கிளிப் பச்சையும் சேலையில் இலங்கின. ஆகாய நிற ரவிக்கை அவளின் மாநிற மேனிக்கு நல்ல பொருத் ும். பெண்மையின் கவர்ச்சியுடன் காணப்பட்டாள் அவள்.

சாந்துப் பொட்டு, நெற்றியில்.

சாந்தப் பார்வை, கண்களில்.

மயங்கிய பாவனே!

மயக்கும் பாவம்!

இதழ்க் கனிவில் கனவு:

கனவே அவளாக, அவளே கனவாக நின்ருள்.

அவளே அழகாக, அழகே அவளாக நின்ருள்.

அழகும் கனவும் கும்மி கொட்டின.

கும்மி கொட்டிக் குதூகலம் எய்திய அந்த நாட்கஃ எண்ணமிட்டாளா?

சலங்கையொலி கேட்டது.

அன்னக்கிளியின் கண்களில் ஓர் அவசரம் கூடியது.

வாசலில் வந்து நின்றது, கூண்டு வண்டி.

ஆதியப்ப அம்பலம், இரத்தப் பசை கொழிக்கும் இளை போல, ஓயிலாகக் கீழே குதித்தார். கையில் இருந்த திருக்கை வால் குச்சியை வண்டியின் 'கட்டுக்கழி' யில் செருகிக்கொண்டே "ஐய இறங்குங்க!" என்று கூறினர், கிழவர்.

வாசலுக்கு ஓடிவந்த அன்னக்கிளி, ஓட்டுத் திண்ணைக்கு பின்வாங்கி கீழவசமாக இருந்த மறைவில் ஒதுங்கினள்; பட்டு கண்டாங்கிச் சேலையைச் செம்மைப்படுத்திக் கொண்டாள். மிள காய்ப் பழ நிறம் மின்னியது.

கம்பீரமான ஒய்யாரத்துடன் இறங்கினன், வீரமணி. 'லட சுமிச் சுழி' கொண்டு ஆறு பல்லோடு, நீர்க்கட்டுடன் விளா கும் சந்தைப்பேட்டை மயிலைக் காளை போல அவன் நின்ருன் மயில்கண் ஜரிகை துப்பட்டாவை லாகவமாகத் தோளில் இழையவிட்ட வண்ணம் அவன் வடபுறமாகத் திரும்பினன்.

அதே நேரத்தில் அன்னக்கிளி தென்புறம் பார்வையைத் திருப்பி நின்ருள். 'பிணைஏர் மடநோக்கு' அது!

அவன் அவளைப் பார்த்தான்!

அவள் அவனைப் பார்த்தாள்!

இள மீசைக்கு அடியில் ஊடாடியது குறுஞ் சிரிப்பு

செக்கச் சிவந்த இதழ்க் கடையில் ஊர்ந்தது, நாணப் புன்னகை. மதுக்குடம் ஏந்திய மணமலர் சிரிக்கக் கேட்பானேன்?

"வாங்க, மாப்பிள்ளே!" என்றார், அம்பலம்.

வீரமணி நடை பயின்முன்; கால்நடையன்கள் சரசரத்தன.

அன்னக்கிளி வானம்பாடியாக உள்ளே பறந்தாள். மெட்டி ஒலிக்க, மிஞ்சிகள் ஒலித்தன. மேனியில் கிளர்ந்த புளகக் கிளர்ச்சியுடன் நடையைத் தாண்டி அடுப்படியை அடைந்தாள். நெஞ்சிடைச் சுழித்த ஆனந்தத்தின் ஆரவாரத்தில் ஒருகணம் அவள் திக்குமுக்காடிப் போனாள்.

"குந்துங்க... வசமாக் குந்துங்க பாயிலே!"

ரங்கூன் பாயில் வீரமணி அமர்ந்தான். டெர்லின் சட்டையை ஒழுங்குபடுத்தினான். தங்கக் கைப்பொத்தான்களைப் பொருத்திக் கொண்டான். ஜரிகை வேட்டியைப் பாதங்கள்வரை இழுத்துவிட்டான். 'ஐந்து விரல்கடை' ஜரிகைப் பட்டை பளபளப்புக் காட்டியது. தன்னைத் தானே ஒருமுறை குனிந்து பார்த்துக் கொண்டான். மைனர் சங்கிலியின் அடிக்கட்டில் ஊசலாடிய நரிப்பல் தங்க டாலர் மின்னியது. கைவிரல் மோதிரங்கள் முத்தெழில் சிந்தின.

உள்வட்டமாகச் சுற்றிக் கொண்டிருந்தார், அம்பலம். 'அரிக்கேன் விளக்கை' விட்டத்தில் தொங்கிய கொக்கியில் இருந்து கழற்றி எடுத்துக் கொளுத்தினார்.

எரிந்த விளக்கை நலியாமல் எடுத்து நளினத்துடன் நடை நடுவே கொண்டுவந்து வைத்தாள், அன்னக்கிளி. குனிந்து நிமிர்ந்ததும், வீரமணியை வெட்கம் பூக்கப் பார்த்தவளாக, "சொகமா இருக்கீங்களா?" என்று அன்பு மேலிட, நயந்து கேட்டாள். சரிந்து விழாமல் புடவைத் தலைப்பைக் காத்துக் கொண்டாள்; இரட்டைவடம் தொங்கி விளையாடியது.

வீரமணி தன் அம்மான் மகளை அடங்காத ஆசையுடன் நோக்கினான். "நல்ல சுகம்தான்!... அம்மான் மக சுகந்

தானே?" என்று கேட்டான். பாசச் சிரிப்பு பரிவு கொட்டியது.

"நல்லா இருக்கேனுங்க!"

பதில் மொழிந்தாள். இப்போது முன்போல அவனை ஏறிட்டுப் பார்க்கும் தைரியம் அவளுக்கு வரவில்லையோ? பால் அமுதச் சிரிப்பு அளவு பார்த்து வழிந்தது. காதுச் சிமிக்கிகள், குழைந்தாட, அவள் உள்ளே ஓடிவிட்டாள்.

வெள்ளித் தட்டில் பலாச் சுளைகளை நிரப்பிக் கொணர்ந்து வைத்தார், அம்பலம். "சாப்பிடுங்க, முதல் இனிப்பைச் சாப்பிடுங்க. அப்பாலே சோறு உண்ணலாம்" என்றார்.

வீரமணி சட்டையின் வலதுகைப் பகுதியை விலக்கிக் கொண்டான்.

ஒரு சுளையை எடுத்து சுவை பார்த்தான்.

அதற்குள், "இலை போட்டாச்சு அப்பா!" என்ற குரல் எட்டிப் பார்த்தது.

"வாங்க, வாங்க. சாப்பிடலாம். ஒங்களுக்குப் பசி தாங்கிப் பழக்கமிருக்காதுங்களே!" என்றார், அம்பலம்.

ஓர் அசட்டுச் சிரிப்புடன் எழுந்து உள்ளே சென்றான், வீரமணி.

கிழவர் நீட்டிய செம்பு நீர் அவர் கைகளைச் சுத்தப்படுத்தியது.

தலை வாழை இலையில் சம்பாச் சோறு படைக்கப்பட்டிருந்தது.

விளைமீன் குழம்பு வாசனை பரப்பியது. சுறாக் கருவாட்டுத் துணுக்குகள் மணத்தன.

கும்மட்டிக் கூட்டு இங்கிதமாகத் திகழ்ந்தது.

வீரமணி இலையின் முன் குந்தினான்.

வெள்ளிக் கிண்ணத்தில் புத்துருக்கு நெய் வந்தது. அன்னக் கிளியின் தங்கக் கரங்கள் நெய்யை ஊற்றின.

யாரோ தும்மினார்கள்! ...

அவளுக்குச் 'சுருக்' கென்றது!

"போதும், போதும்" என்று கையமர்த்தினான், வீரமணி அவள் நெய்க் கிண்ணத்தைக் கவிழ்த்தவண்ணம் இரு தாள்.

அவன் இப்போது அவள் கையைப் பற்றித் தடுத்தான்.

அவள் நெய் முழுவதையும் சோற்றில் கொட்டி முடித்து விட்டுத்தான் நிமிர்ந்தாள்.

"அம்மான் மகளுக்குப் பழைய குறும்பு இன்னமும் மட்டுப் படலையே?" என்று சிரித்துவிட்டு, அவள் முகத்தை உவப்புடன் நோக்கினான்.

அவள் குறும்புச் சிரிப்புடன் காட்சி தந்தாள்.

வீரமணி 'சடக்' கென்று சுற்றும் முற்றும் பார்த்தான். 'அன்னத்தோட கையைப் பிடித்து அமர்த்தின விளையாட்டை அம்மான் பார்த்திருப்பாரோ? ...' என்று உள்ளூற ஒருவகை அச்ச உணர்ச்சி எழுந்தது. ஆனால், தன் தாய்மாமன் வெளியே யாருடனோ பேசிக்கொண்டிருப்பதை அறிந்ததும் அந்தப் பழைய அச்சம் மறைந்து, அவ்விடத்தில் ஓர் உரிமை பிறந்தது. 'அம்மான் மவ எனக்குச் சொந்தமான பொண்ணு. அது கையைப் பற்றினதை அம்மான் நேருக்குநேராய்க் கண்டுபிடித்தால்கூட, அவுக என்ன நெனைச்சிருக்க முடியும்?' என்ற போக்கில், அவன் முகத்தில் ஆணவம் மண்டிய ஒரு பெருமிதம் ஒளிர்ந்தது. விரல் சொடுக்கும் நேரம் அவன் சிந்தனைவசப்பட்டான்.

அதே நேரத்தில் அன்னக்கிளியின் மனமும் திகில் அடையத்தான் செய்தது. 'அயித்தை மவன் எப்பவும் அவசரம் பிடிச்சவுகதான். நான் அவுகளுக்கின்னு என்னதான் முடிவாகிப் போனாலும், இப்பிடியா செய்கிறது? ... நல்லவேளை, அப்பன்காரக இதைப் பார்க்கல்லே, பார்த்திருந்தா, அவுக மனசு சங்கடப்பட்டிருக்குமே! ...' என்று மறுகினாள். வீரமணி பற்றிப் புகைந்த



"ஒனக்கு இன்னமும் பழைய குறும்பு மட்டுப்படலையே?"
என்று அன்னத்தின் கையைப் பற்றித் தடுத்தான் வீரமணி.

நடப்பு அப்போது தவிர்க்க முடியாத விபத்துப் போல அவ ளுள் தோன்றியது. 'மச்சான்காரக எம்மேலே கொண்டிருக்கிற மெய்யான நேசத்தை ஒட்டித்தானே அப்பிடி எங் கையை உரிமையோட பிடிச்சுத் தடுத்தாங்க?' என்று அவள் மனத்தின் ஒரு பகுதி எண்ணமிட்டது. மறுகணம் அதே மனத்தின் மறு பகுதி, "அதெப்படி அம்புட்டு நிச்சயமான சங்கதியாய் இருக்க ஏலும்? அவுகளோட சபல மனசினுலே இப்பிடிச் செஞ்சிருக்க முடியும்னு ஏன் நான் முடிவு செஞ்சுக்கக் கூடாதாம்?" என்று எதிர்வாதம் செய்தது. அவள் நெஞ்சகம் எம்பித் தணிந்தது. கண்கள் கலங்கி வந்தன. ஆனுலும் சமாளித்துக் கொண்டாள். சலனத்தின் நிலைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ளலாகாது என்ற ஒரு பக்குவம் அவளைக் காத்தது. 'மச்சான் இதுமட்டுக் கும் எப்பிடியிருந்தாலும், இனிமே அவுகளை நல்லதனமாய்க் கட் டிக் காத்துக்கிட வழி தெரியும் எனக்கு!'

"மச்சான், சாப்பிடுங்க சோத்தை!" என்று நினைவுத் தூண் டில் போட்டாள். விழிகள் தாழ்ந்தன. பெருமூச்சுப் பதமாக வெளிப்பட்டது.

அவன் குழிபறித்துச் சிரித்து அவளை விழுங்கிவிடுபவன் போலப் பார்வையிட்டான். "பலே! இப்பத்தான் எனக்குப் பசி எடுக்க ஆரம்பிக்குது! ஏன் தெரியுமா, புள்ளே?..., நீ என்னை மச்சான்னு அழைச்சியே, அந்த அழைப்பைக் கேட்டதும் எனக்கு நெசமான சந்தோசம் பொங்குதாக்கும்!... முந்தி ஒரு விசை ஓங்கிட்டே நெருங்கி என்னை எப்பவுமே மச்சான்னே கூப் பிட வேணும்னு கேட்டுக்கிட்டேனே, நெனைப்பு இருக்கு தில்லே?..." என்று கேட்டான்.

அவள் விநயபூர்வமான வெட்கத் திரட்சியுடன் 'ஆம்' என்ற குறிப்பில் தலையை இணக்கம் காட்டி ஆட்டினுள். அவ்விரு காதல் உள்ளங்களுக்கும் ஊடாக அந்த ஒரு சம்பவம் நிழலாடி டியது.

'அம்பலகாரர்கள்' என்னும் அந்த மறக்குலத்தவர் இடையே ஒரு மரபு—வழக்கம் இருந்து வந்தது. புஷ்பவதியான பெண்ணுக்கு அவளைக் கொஞ்சம் உரிமை பெறும் மாப்பிள்ளை சடங்கு சுற்றும் நாளன்றைக்கு விலையுயர்ந்த பட்டுச் சேலையும் பட்டு ரவிக்கையும் எடுத்து 'உலுப்பை' வைக்க வேண்டும். அம்மாதிரி உலுப்பை வைத்து கொட்டு முழக்கத்தோடு ஊரறிய ஊர்வலம் போய் இரு சம்பந்தி வீடுகளிலும் தாம்பூலம் மாற்றிக்கொண்டுவிட்டால், அப்பால் அந்தக் கன்னிக்கு உடையவன் அந்த மாப்பிள்ளை என்பது உறுதியாகிவிடும்! —இதுதான் அக்குலத்தவர் இடையே வமிச வழியாக நிலவிவந்த—நிலவி வரும் ஒரு பண்பாடாகவும் இலங்கி வந்தது—இலங்கி வருகிறது! அந்த இனத்தவரின் 'கொள்வினை—கொடுப்பினை' யின் கதை இதுவே!

அன்னக்கிளி சமைந்ததும், அவளுக்குரிய சடங்குக்கு உலுப்பைச் சேலை ரவிக்கை எடுத்து வைக்கும் உரிமையினை வீரமணி ஏற்றான். புடவை ரவிக்கை வாங்கும் வசதியை மூன்றும் பேருக்குத் தெரியாமல் அவனுக்கு ஏற்படுத்திக் கொடுத்த புண்ணியராக ஆதியப்ப அம்பலம் இருந்தார்!

சடங்கு முடிந்ததும், புதுக் கோலத்துடன் நல்ல சகுனம் பார்த்து, தண்ணீர் கொணர்ந்து மீண்டாள், அன்னக்கிளி. குடத்தை இறக்கி வைத்துவிட்டு ஓய்வாக நின்றாள், அவள். அவளைத் தேடி வந்தான் வீரமணி. அவளோ நாணத்தின் கன்னியாக ஓடப் பார்த்தாள். ஓட எத்தனம் செய்தவளை அவன் ஓடிப்போய் கூடிப் பிடித்துக்கொண்டான். "சொகமா அம்மான் மகளே?" என்று மோகத் திளைப்புடன் வினவினான். அவள் 'ம்' கொட்டினாள்.

"பேசு புள்ளே!" என்றான் அவன்.

"புள்ளேயா?... நீங்க எனக்குத் தாலி கட்டிலேயே, அதுக்குள்ளே என்னைப் புள்ளேன்னு அழைக்கிறீங்களே?... அதுக்குள்

ளாறு நீங்க எங் கையைத் தொட்டுப்புட்டீங்களே?" என்றாள், அன்னம். அவள் தொனியில் சினம் ஏறியிருந்தது.

"அம்மான் மகளே! நீ எம் மனசைத் தொட்டவள்; ஆன தாலே, நான் ஒன் கையைத் தொட்டேன். இதிலே தர்ம நியாயம் இருக்குதாக்கும்! அத்தோடே நான் உலுப்பைச் சேலே எடுத்து வச்சதுமே நீதான் எனக்குங்கிறதும் நான்தான் ஒனக் குங்கிறதும் ஊரறிஞ்ச ரகசியமாகவும், உங்க அப்பன்காரர் புரிஞ்சுக்கிட்ட உண்மையாகவும் ஆயிடலேயா? இதுக்காக உன் னோடை குரலிலே இத்தனை கோபம் இருக்கலாமா?" என்று கெஞ்சினான், இளஞ் சிங்கம் வீரமணி.

அன்னக்கிளி வெள்ளேத்தனமாகச் சிரித்தாள். "ஒங்களுக்கு மாப்பு விட்டுப்புட்டேன், அயித்தை மவனே!" என்றாள் அவள்.

"அன்னம், நீ என்னைச் சும்மா சும்மா அயித்தை மவ னேன்னு அழைக்கிறதானது எம் மனசிலே நிறையக் காணோம்!... இனிமே நீ என்னை 'மச்சான்'னு அழைச்சால், நீ என்னைப்பத்தி நெனைக்கையிலே 'மச்சான்'னு நெனைச்சால், அந்த ஒரு சொந்தத்திலே — அந்த ஒரு பாந்தத்திலேதான் எனக்கு மனசு நெறைஞ்சிருக்கும்!" என்று உணர்ச்சிவசப்பட் டுப் பேசினான், வீரமணி. அவனது பேச்சு அவளது கன்னி மனதை இளக்கி உருக்கியது. "ஆகட்டுங்க, மச்சான்!" என்று இணங்கினாள் அவள்.

அவளது ஒப்புதல் அவனுடைய இதயத்தை உருக்கி இளக்கி யது.

இருவருமே அந்தப் பழைய பசுமை நிகழ்வின் தரிசனத்தை முடித்துக் கொண்டார்கள்.

"சோத்தை உண்ணுங்க, மச்சான்!" என்று இப்போது ஞாபகமூட்டினாள். பிறகு ஞாபகமாக, அவன் அனுப்பி வைத்த கருக் கருவாட்டுத் துண்டங்கள் சிலவற்றையும் இலேயில் வைத் தாள். எண்ணெயில் பொறித்த வாசம் கமழ்ந்தது.

"நீங்க அனுப்பிச்ச கருவாடுங்க!"

"எனக்கின்னு மிச்சம்பிடிச்சி வச்சிருந்தியாக்கும்?"

"ஆமா!"

"நீ தொட்டுப் பார்த்தியான்னே?"

"தொட்டுப் பார்த்தேனே!"

"எப்படியிருக்கு?"

"வழவழன்னு இருக்குதுங்க!"

அவன் சிரிப்பை அடக்கிக்கொண்டான்.

"அதைக் கேட்கலே. நீ சாப்பிட்டுப் பார்த்தியான்னு கேட்டேன்."

"அதைக் கேட்டீயளா? சாப்பிட்டுப் பார்த்தேனே! நீங்க ஆசையாய் அனுப்பிச்சதை அப்பவே ருசி பார்த்துப்புட்டேனே!"

"எப்பிடி இருந்திச்சு வாய்க்கு?"

"உங்க அன்பாட்டம் உணக்கையா இருந்திச்சு!"

"மெய்யாவா?"

"பொய் வராது ஒங்க அன்னத்துக்கு."

சிரிப்போடு சிரிப்பு ஜோடி சேர்ந்தது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டே நுழைந்தார், கிழவர்.

குனிந்த தலையை நிமிர்த்தாமல் சாப்பிட்டான், வீரமணி

"நல்லாச் சாப்பிடணும். மீன் ரொம்ப நல்ல ஜாதி. வாழப்பூ மடல் கணக்கிலே சதையைப் புட்டுப் புட்டுச் சாப்பிடலாம். முள் அலாக்காப் பிஞ்சிடும். ராசேந்திரபுரம் காக்கா இந்த விளாமீனைக் கண்டா அப்படியே ஆளாப் பறக்கும்!..." என்றார் அம்பலம்.

"ஓகோ!"

"ம்!..."

"காக்கா, மீன் சாப்பிடுங்களா, அப்பா?"

"காக்கான்னு காக்காமாருங்கம்மா. ஒரு திருப்பம் நம்ம ஊட்டுக்கு வந்து நாலு பொதி நெல்லு வாங்கிப் போட்டுக்கிட்டுப் போகலே ஒரு சாயபு, அவுகளொத்தவுகளைச் சொல்லுறேன் ஆத்தா... நாங்க அவுகளை வாஞ்சையாய்க் காக்கான்னுதான் சொல்லுவோம்."

"ஓகோ!"

"சிங்கப்பூரு நாட்டிலே வஞ்சிரம் அப்பிடின்னு ஒரு மீன் உண்டு. அதை ரோஸ்ட் பண்ணி வைப்பானுங்க, ரொம்ப பேஷாயிருக்கும்" என்று சொன்னான், வீரமணி. சொல்லிவிட்டு ஒரு வாய் தண்ணீர் குடித்தான். தண்ணீர் மண்டைக்கு ஏறிவிட்டது.

"பார்த்துச் சாப்பிடுங்க. யாரோ ஒங்களை நினைக்கிறாங்க..." என்றார், அம்பலம்.

தந்தையின் அப் பேச்சு மகளின் மனத்தில் நெருஞ்சில் முள்ளாகத் தைத்தது. வீரமணி பற்றிய புரளி மீண்டும் அவளுள் வலியை உண்டுபண்ணியது. காலில் தைத்த முள்ளை வாகாய் எடுத்து வீசிவிடுவாள். ஆனால், நெஞ்சில் தைத்ததை எப்படிப் பிடுங்கி வீசுவாள்? எப்போது எடுத்து வீசுவாள்?

"எனக்கு வேண்டியவுங்க இப்ப என்னைப்பத்தி நினைக்கிறாங்க. இல்லீங்களா? அப்பிடித்தான் அர்த்தமோ?" என்றான், வீரமணி.

"ஊம்..." அவர் குரல் இறங்கியது.

"அன்னம்தான் நினைக்குது!" என்றான் வீரமணி.

சிரித்தபடி இன்னோர் அகப்பை மீன் குழம்பு ஊற்றினாள் அன்னம். கை ஏனோ நடுங்கியது.

"ஐயையோ, இனிமே என்னாலே ஒரு பருக்கை சாப்பிட ஏலாது" என்று திணறினான் வீரமணி.

"எனக்கு அளவு தெரியாதா? சாப்பிடச் சொல்லுங்க, அப்பா! நீங்க சொன்னாத் தட்டமாட்டாக, மச்சான்காரக"

என்று வேண்டினாள் அன்னம்.

"ஆமா, சாப்பிடுங்க" என்றார், அம்பலம்.

தந்தை சிபாரிசு செய்துகொண்டிருக்கையில் அடுத்த மீன் துண்டம் ஒன்றை எடுத்துப் போட்டாள், அவள்.

"ஊகூம், என்னாலே முடியாது" என்று எழுந்துவிட்டான், வீரமணி.

பெரியவருக்கு என்னவோ போலாகிவிட்டது.

"இந்தாங்க, தண்ணி. கையலம்புங்க" என்று தண்ணீர்ச் செம்பை நீட்டினார், அவர்.

ஈரக் கையைத் துடைத்தவண்ணம், 'பாக்கெட் டிரான்சிஸ்டரை' எடுத்துக்கொண்டு வெளியே வந்தான், வீரமணி.

அவன் பின்னால் வெளிப்பக்கம் வந்தார், அம்பலம்.

"வெத்தலைப் பெட்டியைக் கொண்டாந்திடு ஆத்தா," என்று உட்புறம் குரல் கொடுத்தார், அவர்; புகையிலைப் பொட்டலத்தைப் பிரித்து ஓர் 'இணுக்கு' எடுத்து வாயில் அடக்கிக் கொண்டார். மகள் பதவிசாக நீட்டிய தாம்பூலப் பெட்டியை வாங்கி அவன் அருகே வைத்துவிட்டு, "குந்திப் போடுங்க" என்றார்.

"அந்தக் கெட்ட பழக்கமெல்லாம் இல்லிங்க" என்றான் வீரமணி.

மாணிக்கம் கொண்டுவந்து விட்டிருந்த கோழி கால் கட்டுடன் வீரமணியின் கால்மாட்டில் தத்திக் கொண்டிருந்தது.

"கோழியின்னா அம்மானுக்குப் பிடிக்காதே?" என்றான், வீரமணி.

"இது நம்ம மாணிக்கம் கொண்டாந்ததாம்!" என்றார் முதியவர்.

"யாரு, குளமங்கலத்து ஆளா? இங்கிட்டு வரப்போக இருக்காரா, அந்த ஆளு?... கண்ணாலம் கட்டிக்கிட்டாரா? இல்லே, கைச்சமையலோடதான் காலந்தள்ளுறாரா?..." என்று

விசாரித்தான், வீரமணி.

"அந்தப் புள்ளைதான் வயல் வேலையிலே எனக்குக் கைவாக ணைமா இருந்து உதவிக்கிட்டு இருக்குது. எட்டத்துச் சொந்த மின்னுலும், ரொம்ப ஒட்டுதலாய் இருக்குது. ஒங்க கண்ணுலம் முடிஞ்சதும் அதுக்குக் கண்ணுலம் செஞ்சு வச்சுப்புடணும். நீங்க ஊர் வந்த சங்கதி தெரிஞ்சு, ஒங்களுக்கு விருந்து ஆக்குற துக்கின்னு கோழி பிடிச்சாந்து அன்னத்துக்கிட்டே குடுத்து ருக்குதிங்க. அதோட நல்ல மனசு வேறே யாருக்கும் சுட்டுப் போட்டாலும் வாய்க்காது... அவுக அப்பாரு சொந்தம் சோபாரிக்கு அள்ளியள்ளிக் குடுத்து நொடிச்சவர். அந்த வாசனை இதுக்கும் வராமத் தப்புமா?..." என்று விளக்கினர், அவர்.

அதைக் கேட்டு, வீரமணியின் முகம் ஏன் அப்படிச் சிறுத்து விட்டது?

# 7 சிலந்தி வலை

சிதிலமடைந்த வீட்டின் வெளித் திண்ணையில் விரிக்கப் பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தில் 'அட்டணைக்கால்' போட் டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான், வீரமணி.

கிழக்குப் பார்த்த வீடு. நாட்டு ஓடுகள் முன்பகுதியில் சரிந்து கிடந்தன. வயிறு கம்மென்றிருந்தது. இளந் தொந்தி யைத் தடவி விட்டுக்கொண்டான். கைவிரல் மோதிரங்களைக் கண்டு கண்சிமிட்டின, வானத்து மீன்கள். பரந்திருந்த மார்ப கத்தின் முடிகளை காற்று அலைக்கழித்தது. திண்ணைச் சாய்மான த்தில் சாய்ந்துகொண்டு "அப்பாடா!" என்று பெருமூச் செறிந்தான்.

ஒரே இருப்பாகக் குந்தியிருந்து பழக்கமில்லை, அவனுக்கு. பேச்சுத் துணைக்கு யாராவது இருந்தாலும் பாதகமில்லை. அப் படி இப்படியென்று வந்து, அவன் வருகை குறித்து நலம் விசாரி

ரித்துச் சென்றவர்கள் ஏழெட்டுப் பேர் இருக்கலாம். 'பாக்கிப் பேருங்க யாரையும் காணலையே?... வேலாயுதம், சரவணன் இவங்கள்ளாம் வந்து என்னைக் கண்டுக்கிடாம இருக்கமாட்டாங் களே?' என்று ஆடம்பரத்துக்காக ஏங்கிக் கொண்டிருந்தது, அவன் உள்மனம்.

எழுந்து வீட்டுக்குள் சென்றான். விளக்கை நன்றாகத் தூண்டி விட்டு, விரித்துக் கிடந்த மெத்தையில் உட்கார்ந்தான். தோல் பெட்டியைத் திறந்தான். பெட்டியில் இருந்த சாமான்களைப் பிரித்தான்.

பிரித்த அவசரத்தில் புகைப்படம் ஒன்று தென்பட்டது. அதையே குறிப்பாகத் தேடியவன் போன்று அப் படத்தை ஒரு சில விநாடிகள் பரிவுசூழப் பார்த்துவிட்டு, அதை ஒரு கூட்டுக் குள் திணித்து பெட்டியின் அடியில் வைத்தான்.

பிறகு, ஞாபகமாகப் பெருமூச்சை நெட்டித் தள்ளியவாறு, இடது பக்கம் இருந்த தனி அறையில் துழாவினான். அழகான சிறு பெட்டியொன்று வந்தது. திறந்தான். அதில் கண்டசரம் ஒன்று காட்சி தந்தது. வைரங்களென வெள்ளைக் கற்கள் ஒளிர்ந் தன. உடனே அவனுக்கு அன்னக்கிளியின் நினைவு கிளர்ந்தெழுந் தது. 'இப்பவே போய் அம்மான் மக கையிலே இதைக் கொடுத் தால் என்ன? அம்மானும்தான் எங்கிட்டோ போயிருப்பாங்க. தனியா இருக்கும் அன்னம். இதான் வாகான சமயம். அதுக் கிட்டே அண்டியிருந்து நாலு பேச்சுப் பேசிடலாமே!... ஆமா, அதான் சரி. சின்னச்சாமி அம்பலம் வேறே தம் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குக் கூப்பிட்டாங்க. அவர் சம்சாரம் வேற நான் வந்து இறங்கினதும் ரொம்பத்தூரம் அழுத்திச் சொன்னாக. என்னமோ, அவுக புருசன் பெண்சாதி ஊர்ப்பட்ட பிரியம் காட்டினாங்க எங்கிட்டே. நாலு காசு பணம் கையிலே மடியிலே புழங்கிற தடயம் தெரிஞ்சிருச்சின்னா, அதோட மவுசும் தினுசும் அலாதிதான் என்கிறது கைக்கு மெய்யான விசயந்தான். நீ

மாவா சொன்னுங்க, பணம் பத்தும் செய்யும்னு! ... ம்...சரி! ... இப்ப அம்மான் வூட்டுக்குப் போகலாம்' என்று சிந்தித்து கண்டசரம் இருந்த பெட்டியை எடுத்துக் கொண்டவனாக பெட்டியை மூடினான்.

மூடின கையுடன் திறந்து வலதுபுறத்தின் அறையில் இருந்த புடவை, ரவிக்கைகளைத் தூக்கிவிட்டுக் குனிந்து பார்த்தான். புதுக் கருக்குடன் பொதிந்த ரூபாய் நோட்டுக்கள் தெரிந்தன. மறுகணம், முன்னிருந்த மாதிரியே புடவை ரவிக்கைகளை மேல் மட்டமாக வைத்து மூடிப் பூட்டி சாவிக் கொத்தைக் கையில் ஏந்திக்கொண்டு எழுந்தான்.

மறுபடியும் ஏதோ சந்தேகம் தட்டியது. பெட்டியின் அந்த ரங்க விசைகளை இயக்கிப் பெட்டியைத் திறந்தான். ரூபாய்க் கட்டுக்களை 'நிம்பி'னன். அவற்றின் ஆழத்தில் இருந்த ஒரு துணிக் கூட்டை நெருடிப் பார்த்தான். கண்களில் அமைதி கனிந்தது. நிம்மதியுடன் பெட்டியைப் பூட்டிவிட்டு எழுந்தான். சாவிச் சரத்துடன் நிலைப்படியை அடைந்தான். முதுகு வலித்தது. அக்குளில் இருந்தது கண்டசரப் பெட்டி.

அப்பொழுது, "தம்பி, வீரமணித் தம்பியோ! ..." என்று விளித்துக்கொண்டே வந்தார், புதுப்புள்ளி சின்னச்சாமி அம்பலம். கரடி மயிராகச் செறிவுடன் விளங்கியது மீசை. விபூதிப் பட்டை பொங்கலுக்கு வெள்ளை அடித்தது போன்றிருந்தது.

வந்த மனிதரைப் புரிந்துகொண்ட வீரமணி "வாங்கங்கறேன்" என்று முகமன் மொழிந்தான்.

"ஆமா...தம்பி எங்கிட்டோ புறப்பிட்ட மாதிரி இருக்கே?, என்னமோ ஒரு பொட்டி இருக்கே?" என்று கேட்டுக் கம்பளத்தில் குந்தினர் சின்னச்சாமி.

"எங்கிட்டுப் போவேன் நான்! எனக்கு வேறே இடம் போறதுக்கு ஒப்பாது. இப்ப எங்க அம்மான் வூட்டுக்குப் போகலாம்னு கிளம்பினேன்."

"அந்தப் பெட்டி ரொம்ப நேர்த்தியாயிருக்கே?"

"இது மதிப்பு வெள்ளிக் கணக்குப்படி... இல்லே, ரூபாய் மதிப்புப்படி பார்த்தாக்க ஒரு ஆயிரத்தைத் தாண்டிடுச்சாக்கும்."

"அதிலே என்னுங்க இருக்குது, தம்பி?"

"அதிலேயா? அது ஒரு பெரிய பொருளாக்கும்...

"அதைச் சொல்லுறதுக்குத் தம்பிக்கு நாட்டம் இல்லே போல. சரி. கேட்கலே. ஒங்க அம்மான் மகளுக்கு ஏதானும் நகை நட்டு இருக்கும்!"

"போடுடா சபாசுன்னும்! எப்பிடிக் கண்டுக்கிட்டீங்க?"

"அந்தக் கண்டசரத்தை நீங்க ஒங்க அம்மான்கிட்டே காட்டிக்கிட்டிருந்தீங்களாம். அதைக் கமுக்கமா எம் பெஞ்சாதி காத்தாயி நோட்டமிட்டுச்சாம்! ... எம் மக பொன்னுத்தாளுக்கும் அதே அச்சிலே ஒண்ணு பண்ணிப் போடணும். மாதிரிக்குப் பார்த்தாக்காத் தேவலே."

"அப்படியா? ஒங்க பொண்ணுக்குக் கண்ணாலம் ஆகலேயா இன்னும்?"

"இல்லே தம்பி. வகையோட இருக்கிற பிள்ளையாப் பார்த்துக்கிட்டிருக்கேன். தாயில்லாப் பொண்ணை கண்ணைக் கசக்க விடப்புடாதில்லே! ... காத்தாயிக்குத் தன்னோட தம்பிக்குக் கட்டிக்குடுக்க வேணும்னு ஒரே ஆட்டம். அந்தப் பயலோ, காலித்தனமாகச் சுத்துறான். கெட்ட போக்கு உள்ளவனுக்குப் பொண்டாட்டியை ஆசையோட வச்சுத் தண்ணி ஊத்த வகை வராதுங்க, தம்பி. நீங்க என்ன சொல்றீங்க?"

சிந்தனை வசப்பட்டிருந்த வீரமணி தன்னுணர்வு எய்தி, "மெய்தான்" என்று சுருக்கமாகப் பதில் கொடுத்தான்.

"ஒங்க மாதிரி ஒரு பிள்ளை கெடைச்சா, இப்பவே நான் வச்சுப்புடுவேன்."

"அப்பிடியா?"

"ம்! ..."

கண்டசரத்தைப் பார்வையிட்டார், சின்னச்சாமி. அவர் தலை உச்சியில் சிலந்தி வலை ஒன்று தென்பட்டது!

"தம்பிகிட்டே அனையமாத் தாக்கல் தகவல் கலக்கணும்."

"அப்பிடிங்களா? நீங்க எம்மேலே இம்புட்டுத் தொலைவுக்கு மதிப்பு வச்சிருக்கிறது எனக்கு எவ்வளவோ தெம்பா இருக்குதுங்க. இந்தமாதிரி ஒரு நிலைமைக்கு வரவேணும்ணு தான் நான் கனவு கண்டுக்கிட்டிருந்தேன்," என்று தன் இள மீசையை நீவிவிட்டவாறு விளம்பினுன், வீரமணி.

"அக்கரைக்குக் கால் தூக்கி வச்ச வேளை ஒசந்த வேளை யுங்க, தம்பி."

"வேளை என்னுங்க வேளை?... ஒரு மனுசனுக்குப் பணம் காசு சேர்ந்தாக்க, உடனே அவன் அதிர்ஷ்டம் பிரமாதம், சுக்கிர திசை அடிக்குது, அப்பிடி இப்பிடின்னு கதைக்கிறதுதான் ஊரிலே சம்பிரதாயம். அந்தமாதிரி பேசுறதிலே அர்த்தமே கிடையாதுங்க. என்னைப் பொறுத்தமட்டிலே, வேளை வேனல் என்கிறதிலே எனக்கு அக்கறை இல்லை. நான் உழைச்சேன், சீதேவி தேடிவந்தா. அம்புட்டுத்தான் விசயம்!"

இந்தப் பேச்சு சின்னச்சாமிக்கு அத்துணை உடன்பாடாகத் தோன்றவில்லையோ, என்னவோ? சுருக்கம் விழுந்து கறுத்துப் போயிருந்த அவர் முகம் மேலும் கறுக்க வழியின்றி, சிறுத்தது. எண்ணிப் பத்தே நாளில் புதுப் பணக்காரராகிவிட்ட அதிர்ஷ்டம்தான் அவரை அப்படி ஆக்கியிருக்குமோ? ஆம்; அந்நிலை அந்த அதிர்ஷ்டத்துக்குத்தான் வெளிச்சம்! ...

"தம்பி சம்பாத்தியம் எந்த மட்டுக்கு ஓடியிருக்கும்?"

"அதெல்லாம் சொந்த விசயமுங்க. நானும் இந்த பூவாத்த குடியிலே ஒரு புள்ளி ஆனது கணக்குத்தான். புரிஞ்சுக்கங்க ளேன்!"

"இதைக் கேக்கிறதுக்குக் காதுக்குக் குளிர்ச்சியாயிருக்கு.

உங்க பேர் விளங்குறதுக்குத் தக்கனே ஊருக்கு மெய்ப்பிளேயாய் ஒரு நல்ல காரியத்தைச் செஞ்சு காட்டிப்பிடுங்க. அப்பத்தான் ஓங்களைப்பத்தி அறியாதவங்களும் புரிஞ்சுக்கிட லாயக்குப் படும்."

"அதுவும் நான் ரோசிச்சிருக்கிற சங்கதிதான்! எங் கண்ணு லத்தை ஒரு சினிமா ஸ்டார் கச்சேரியோட மோக்ளாவா நடத் திப்புடணும்னு நெனைச்சிருக்கேன்."

"அப்பிடியா? அது ஓங்க குடும்ப சமாசாரம், தம்பி! ... நான் ஆசைப்படுறது என்னன்னு, நீங்க நம்ப ஊராருங்க நினேப் பிலே ஒரு பிடி ஒசந்து நிக்கணும். அப்பிடி ஒரு மரியாதை உங்களுக்குக் கிட்டவேணும். நீங்க வந்து மிதிச்சிருக்கிற நேரம் குறியான நேரமாக்கும். புரட்டாசியிலே அங்காளம்மை திரு நாள் வருது... அதைக்கூட நீங்க உபயோகிச்சுக்கலாம்! ..." என்று நிறுத்தினர் சின்னச்சாமி அம்பலம்.

ஊசி வெடிகள் வெடித்து ஓய்ந்ததும் ஒரு மெல்லிய சத்தம் வருமே, அப்படி மனிதர் மூச்சு விட்டார்.

"கொஞ்சம் விளக்கமாகத்தான் செப்புங்களேன். சொன்னுக்க, எங்க அம்மான்காரவுகளையும் கலந்து அதுப்படி நடக்கத் தோதுப்படுமில்ல!" என்று நிதானம் சிதருமல் கூறினுன் வீர மணி.

சின்னச்சாமி அம்பலம் அவன் பேச்சைக் கேட்டுத் துணுக் குற்றூர்.

"அடடே, நீங்க ஓங்க விசயத்துக்கு அந்த மனுசனை ஏன் கலக்கணும்? ... அது வேண்டாம் தம்பி. திருநாளைக்குத்தான் இன்னம் நாள் கெடக்குதே! நானே அதைப்பத்தி பின்னடி சொல்லுறேன். பணம் காசைச் சும்மா வச்சிருக்காதீங்க. வட்டி வாசிக்குக் குடுங்க, நல்ல இனமாப் பார்த்து. அப்பத்தான், நாம தூங்கினலும் வட்டி தூங்காம இருக்கும். துட்டு வட்டிக்குக் குடுக்கலாம். துட்டி வராது! தொக்கடியாப் பணம் சேரும்!"

"அல்லாத்துக்கும் எங்க அம்மான்காரக சொல்லைப் பார்த்துத்தான் நடக்கோணும்."

"தம்பிக்கு அம்மான்பேரிலே இம்புட்டு மரியாதை இருக்குதே!... ஆதியப்ப அம்பலம் அதிர்ஷ்டப் புள்ளிதான்! அட்டியில்லே!"

"இதிலே அதிர்ஷ்டம் என்னுங்க இருக்குது? எங்க அம்மானுக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கேனுங்க!..." என்று கூறினான் வீரமணி.

அவன் பேசி வாய் மூடவில்லை. ஆதியப்ப அம்பலம் ஒரு கனைப்புச் சத்தத்தை முன்னோட விட்டுப் பின்தங்கி நுழைந்தார்.

மரியாதைக்கு அடையாளமாக கால்களைப் பிரித்து சாதாரணமாகச் சம்மணம் கோலி உட்கார்ந்துகொண்டே, "வாங்க" என்றான் வீரமணி.

திண்ணைமீது சாய்ந்திருந்த சின்னச்சாமி ஓரக்கண்ணால் ஆதியப்ப அம்பலகாரரைப் பார்த்தபடி, "நான் வரட்டுமா?" என்று சொல்லிப் புறப்பட்டார்.

"நம்ம மீனாச்சி ஆயா பேத்தி—மகவூட்டுப் பேத்தி புளிக்குடிச்சிருக்குதாம். போய் விசாரிச்சிட்டு வந்தேன். அதான் நேரம் கடந்திருச்சு. ரொம்ப நேரமாச்சுப் போல!" என்றார் அம்பலம். "தாயும் புள்ளையும் நல்லாக் கெடக்குதுங்க!"

இடது கை மணிக்கட்டுக்கு மாறியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான் வீரமணி. "ஒம்பது ஆகப் போகுது. அதாலே என்னுங்க. வாங்க போகலாம்!" என்று கூறிக்கொண்டே கண்டாசரப் பெட்டியும் தானுமாகப் புறப்பட்டான், வீரமணி. இப்போது அவன் மேனியை 'சில்க் ஜிப்பா' அலங்கரித்தது. மைனர் செயின் நிலவொளி கண்டு கண்கூசிச் சிலிர்த்தது. மஸ்லின் வேட்டி தும்பைப் பூவாக ஒளி சிந்தியது. வகிடு கலையாத கிராப்பும், வாசனை குறையாத சிங்கப்பூர்ச் சீமை அத்தரும் அவனுடன்

துணை போயின.

இரவு சாப்பாட்டுக்குப் பின் வீரமணி தனது வீட்டுக்கே திரும்பினான்.

காலைப்பொழுது பொலபொலவென்று புலர்ந்தது.

குளித்து முடித்து, அம்மான் வீட்டில் வந்து நின்றான், வீரமணி. புதுத் தெளிவுடன் விளங்கியது 'கிளாக்சோ மல்' வேட்டி.

"வாங்க..." என்றாள், அன்னக்கிளி.

"ஆமா" என்றான், அவன்.

"ஓங்களுக்கு ஆயுசு நூறுங்க!"

"தர்ம மகாராசா, சொல்லியனுப்பிச்சாரா?"

"ஊம்!"

நைலக் சேலை நகைத்தது.

"ஒனக்கு...?"

"அதிலே ஒண்ணு மட்டு!"

"ஏனும் அப்பிடி?"

"அது நாளு வேண்டிக்கிட்ட வரமுங்க!"

"ஏனும்?"

"ஓங்களுக்கு முந்தி பூவும் மஞ்சளுமாப் போயிடணுமில்ல, அதுக்கோசரம்!"

"மெய்யாலுமா?"

"ஆமாங்க, மச்சான். இப்பத்தான் நான் ஓங்களை நெனைச் சேன். வந்து குதிச்சிட்டீங்களே?"

"பாத்தியா குறும்பை—என்னைக் குரங்காக்கிப்புட்டே!"

"தப்பு, தப்பு!... அதொண்ணும் சாமி ஆணையா இல் லிங்க."

"ஆமா, நீ இன்னிக்கு யார் மூகத்திலே முழிச்சே?"

"ஓங்க முகத்திலே!"

"ஐயையோ, வெட்கம்!... கன்னி கழியாப் பொண்ணு பேசுற பேச்சா இது?"

"போங்க நீங்க!"

"போயிட்டா?"

"சொல்லுக்குச் சொல்லு ஒண்ணுக்குள்ள ஒண்ணாய் அர்த்தம் பெருக்கிறீங்க, பொண்ணாய்ப் பொறந்த நான் எப்பிடிங்க சமாளிப்பேன்? நான் கண் முழிக்கையிலே ஒங்க முகத்தை மனக் கண்ணாலே தரிசிச்சுக்கிட்டுத்தான் ஏந்திருச்சேன்னு சொன்னேனுங்க."

"நெசமாவா?"

"ஊம்!"

"நான் கொடுத்துவச்சவன், அம்மான் மகளே!"

"அதான் என்னையே எடுத்துக்கிட்டுப் போறீங்களே!"

"எப்போ?"

"அது ஒங்களுக்குத்தான் வெளிச்சம்!"

சிரிப்பும் சிலிர்ப்பும் கூடி முழங்கின.

"பசிக்குது" என்றான் அவன்.

"வாங்க" என்றாள் அவள்.

நடையில் குந்தினான்.

குனிந்து பரிமாறினாள்.

கோலம் கண்டான்.

நாணம் கொண்டாள்.

மிளகி நெல் பச்சைக் குத்தி அவித்த இடியாப்பமும் பாகு சேர் கற்கண்டு வடையும் புதுக் கறவைப் பாலும் அவனுக்குத் தேவரமுதமாக இனித்தன.

ஏப்பம் வந்ததும் அம்மான் நினைவு வந்தது.

அந் நினைவை ஊகம் செய்து உணர்ந்தவர் போல அப்போது வெயிலில் ஓட்டமும் நடையுமாக தலையில் மூட்டையுடன் மூச்சு இரைக்க வந்தார், கிழவர். மூட்டையைத் 'தொபுகடீர்' என்று போட்டார்.

"புளியம்பழம் உலுப்பினேன். கூடமாட மெய்யப்பன் நின்னான். அவனுக்கு மூணுலே ஒண்ணு குடுத்துப்புட்டு மிச்சத்தைத் தூக்கியாந்தேன். பலகாரம் ஆச்சா? ராத்திரி சொன்னீங்க, நீங்களே இனிமே வந்து சாப்பிட்டுக்கிறதாய். அதாலேதான் சத்தை அசட்டையாய் நின்னுப்புட்டேன்!..." என்றார். வேர்வை வளர்ந்தது.

சாப்பிட்ட விவரத்தைச் சொன்ஞன், வீரமணி.

"நம்ம மாணிக்கம் வரலேயே ஆத்தா?"

"இல்லீங்களே! எப்பவும் இந்நேரத்துக்கு வந்து வயலுக்குப் பறிஞ்சிருக்குமே அயித்தை மகன்!"

"ஏன் இன்னமும் வரலே? சொன்ன சொல்லேத் தவறவிடமாட்டாதே மாணிக்கம்" என்று கவலே கொண்டார், அவர். பிறகு "இன்னிக்கு கார்த்திகை விரதம். குளிச்சு முருகன் கோயிலுக்குப் போயி ஒரு கும்பிடு போட்டு அர்ச்சனே பண்ணிப்புட்டுத்தான் பலகாரம் சாப்பிடணும். அப்புறம் என்ஞங்க மாப்பிள்ளே தாக்கல் தகவல்?..."

தலே அரிக்கவில்லே. என்ருலும் சொறிந்துகொண்டே, "நீங்கதான் சொல்ல வேணும் அம்மான்!... விருதம் புடிச்சிட்டு, சிவட்டூர் வரை போயிட்டு வரணும். தெரிஞ்ச ஆளுங்களேப் பார்த்திட்டு வரவேணும்" என்று அறிவித்தான், அவன்.

"இன்னிக்கே கட்டாயமாப் போகணுமா?"

"போஞத் தேவலே, ஏனுங்க?"

"மகராசியாய்ப் போயிட்டு வாங்க. சரி. அப்புறம் உங்க கண்ணுலெ விசயமாய் ரோசிச்சீங்களா? வார ஆவணியிலே நடத்திப்பிடலாம்னு இருக்கேன். மனிதக் காயம் என்ன நிச்சயம்? சட்டுப் புட்டுன்னு எனக்குச் செகல் இருக்கிறப்பவே முடிச்சுப்பிட்டா, எங் கடமை தீர்ந்திடும். அப்புறம் ஓங்க பாடு, ஓங்க அம்மான் மக பாடு..." என்ருர் கிழவர்.

வீரமணி, நடையிலே எட்டிப் பார்த்த பதுமையை ஓரக் கண் தொடுத்துப் பார்த்தவாறு அழகாகப் புன்னகை செய்தான். "ஓங்க சவுரியப்படி செய்யுங்க" என்ருன்.

"இடைநட்டிலே இருக்கிற ஆடி இல்லாட்டி, இப்பவேகூடக் கெட்டி மேளம் கொட்டிப்புடுவேன்" என்று சிரித்தார் அம்பலம்.

"அப்பன்காரவுக பொய் சொல்லுராங்க மச்சான்!" என்று உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள், அன்னம்.

அம்பலம் பதறிப்போய், "ஏன் ஆத்தா, அப்பிடிச் சொல்

னுறே?" என்று கேட்டார்.

வீரமணிக்கும் அன்னத்தின் குற்றச்சாட்டு பதட்டத்தை விளைத்தது.

"பின்னே என்னங்க? அப்பனுக்குக் கொட்டு மேளம் கொட்டத் தெரியுமுங்களாங்காட்டி?" நாணயக் குலுக்கலாகச் சிரித்தாள், அன்னம்.

மாமனும் மாப்பிள்ளையும் சிரித்துக் கொட்டினார்கள்.

"மாப்பிள்ளைக்கில்ல..."

"சொல்லுங்க!"

"அப்பன்னு, ஆவணியிலே நல்ல நாள் பார்த்து ஒரு தக்கம் ஆவுடையார் கோயில் போய் ஆத்மநாதர்—யோகாம்பாள்—மாணிக்க வாசகரை சாமி தரிசனம் செஞ்சுப்புட்டு, அங்கே செல்லையா ஜோஸ்யர்கிட்ட முகூர்த்தத்துக்கும் பரிசத்துக்கும் குறிச்சிக்கிட்டு வந்திடுவமா?"

"ஓ!"

உள்ளே சென்று பஞ்சாங்கத்துடன் திரும்பினார் அம்பல காரர். ஏடுகளைப் பிரித்தார். ஓர் ஏட்டைப் பார்த்தார். "எட்டா ைத்து வெள்ளிக்கிழமை; வெள்ளிக்கிழமை வெள்ளாமைக்கு ஒசந்த நாளாய் இருக்குது. அன்னிக்கு சாமி கும்பிட்டு, நாத்து நடவை ஆரம்பிச்சுக்கிடலாம்னு இருக்கேன். மண்ணும் மழை யும்தான் நமக்குக் கண்ணுக்குக் கண்ணான தெய்வம். ஆத்தா, அங்காளம்மை இந்த வருசமானும் ஒழுங்காப் படி அளப் பான்னுதான் சத்தோடு நெனைச்சுக்கிட்டு இருக்கேன். பொசுப்பு எப்பிடி எழுதியிருக்குதோ? அல்லாத்துக்கும் அம்மைதான் காப்பு... எல்லாம் எம் மனசுப்படி நல்லபடியா நடந்திட்டா, ஆத்தா என் வூட்டு வாசலுக்கு வந்து முதல் சூடம் தீபாரத னையை ஏத்துக்கிறப்ப, அவளுக்குப் பள்ளயம் படைச்சு, பத்துத் தேங்காய் சிதறுகாய் அடிச்சுப்புட வேணும்னு நேந்துக்கிட்டி ருக்கேன்... ஆத்தா மூத்தவ ரத ஊர்வலம் வரப்ப, என்னோட வூட்டிலே மனசொப்பி முதல் தீபாராதனை ஏத்துக்கிடுற இந்த வள்ளமை எங்க பாட்டன் முப்பாட்டன் காலந் தொட்டு வந்துக் கிட்டிருக்குது. இந்த உரிமையிலே இதுமட்டுக்கும் ஒரு கொம்ப

னும் குறுக்கிடுறதுக்குத் துணிஞ்சதில்லே. இந்த வழக்கத்தை மாமூலமாய் என் ஆயுசுக்குப் பிற்பாடு நீங்க கைக்கொண் காப்பாத்திப்பிட வேணும்... தலைமுறை தத்துவமாய் நிலைச் நிக்கிற பெருமைங்க இது. அல்லாம் அவளோட மகிமைதான் கருணைதான், பிச்சைதான்! ..." என்று தம்மை மறந்த பக்தி பரவசத்துடன் உரைத்தார், ஆதியப்ப அம்பலகாரர்.

"சாடாவும் மெய்யானதுதாங்க. அப்பிடியே செய்யே னுங்க. இப்படிப்பட்ட பெருமைக்கு நான் வாரி சாகிறதின்னு அதுக்கு நானும் எவ்வளவோ பூர்வ புண்ணியம் செஞ்சுதான் இருக்கேனுங்க" என்று 'தன்மை'யுடன் ஆமோதிப்புச் செய் தான், அம்பலகாரரின் மாப்பிள்ளை.

வாசல் ஓரத்துக்குச் சென்று புகையிலைச் சக்கை உமிழ்ந்து திரும்பி, மீண்டும் ஒரு மடக்கு புகையிலைத் துணுக்கை எடுத்துக் கடைவாய் வழியே திணித்துக் கொண்டார், முதி வர். "மனுசன்னு மண்ணிலே பொறந்திட்டா ஏதாச்சும் ஒரு கெட்ட வழக்கம் தொத்திக்கிடும் போலே! அது கெடக்குது கழுதை! ... வாய்ச் சேதியை மறந்திடப் போறேன். மாப்பிள்ளை நீங்க கண்ணாலம் முடிஞ்ச கையோட காணிகரை ஏதாச்சு வாங்கிப் போட்டுப்புடணும். நமக்கின்னு சொந்த நிலம் நீச் இருந்தாத்தான் ஊரிலே மதிப்பாங்க. நம்ம மண்ணிலே விளைஞ்ச மட்டைக் குறுவையின்னாலும்கூட அதைச் சாப்பிட் டாத்தான் பெருமை. என்ன நினைக்கிறீங்க?" என்றார்.

"நானே அதெல்லாம்பத்தி ஒரு முடிவோடதான் இருக் கேன். கட்டாயமா வாங்கிப்புட வேண்டியதுதான். வந்து... உங்ககிட்டே ஒரு யோசனை... எங்கவூடு பாடாவதியா போச்சு. அதிலே இருக்கிறதுக்கும் எனக்கு நாஞ்சல்படுது. உட னடியா, ஒரு இடத்தைக் கிரயம் பேசி புதுசா வூடு கட்டினா தேவலாம்னு தோணுது. நீங்கதான் அதுக்கு ஒரு முடிவு சொல்ல வேணும்."

அம்பலகாரர் 'சின்னஞ்சிறு இருமல்' ஒன்றை வெளிப்படுத்தி னார். பிறகு ஆரம்பித்தார்:

"மாப்பிள்ளை, 'கண்ணாலத்தைச் செஞ்சு பார், வீட்டைக் கட்டிப் பார்' னு ஒரு வாசகம் சொல்லுவாங்க. இந்த ரெண்டு காரியமுமே தலைக்கு ஒசந்த கஷ்ட சாத்தியமான காரியம்... புதுசா வூடு கட்டுதின்னு எப்பிடியும் ஒரு வருசம் ஆகிப்பிடும். வூட்டிலேயா இருக்குது மனுசங்களோட கவுரவமும் பெருமையும்? அவங்கவங்க மனசிலேயும் மனசிலேருந்து வெளிப்படும் செய்கையும்தான் அவுங்கவுங்களுக்கு உண்டான மதிப்பும் பெருமையும் இருக்குதுங்க... இப்பைக்கு இருக்கிற பழைய வீட்டைச் சீர்பண்ணுவோம். அதோட, எம்புட்டு வீடு கடலாட்டம் இருக்குது!... வீட்டிலே போடுற பணத்தை மண்ணிலே போடுங்க. பொன்னாக்கித் தாரேன் நான்!... ஆமாங்க மாப்பிள்ளை!..."

"உங்க புத்திப்படியே ஆகட்டுங்க, அம்மான்."

"அதாங்க வேணும். எதொண்ணையும் நீங்களே தன்னடச்ச மப்பாச் செய்யாம, என்னையும் ஒரு பேச்சுக்குக் கலந்து ஆலோசிச்சுக்கங்க. காசு பணத்தைக் கட்டுச் செட்டாச் செலவழிச்சாத்தான் நல்லது. மாப்புள்ளை! உங்ககிட்டே படிச்சுப் படிச்சுச் சொல்லிப்புட்டேன். சின்னச்சாமி அம்பலம் திருகுதாளப் பேர்வழி. அவன் சன்னட்டம் கூடவேகூடாதுங்க. பூடகமாக இம்புட்டுத்தான் சாடை காட்ட ஏலும். இது கெட்டபய ஊரு. ஒருத்தன் பசையோட இருந்தா ரொம்பப் பேருக்குக் கரிக்கும். ஏடாகூடமா ஏதானும் கெட்ட யோசனைங்களைச் சொல்லி மாட்டிவிடுவானுங்க. நல்லவங்க கம்மி. மாமனுக்கும் மாப்பிள்ளைக்கும் சிண்டு முடிஞ்சிவிடுவாங்க. அப்பனையும் மவனையும் மோதவிட்டு வேடிக்கை பாப்பானுங்க. வெள்ளையாய்ச் சொல்லப்போனா, புருசனையும் பொண்டாட்டியையும்கூட ஒத்திருக்க விடமாட்டானுங்க!..." தொண்டை வறண்டது. ஆனாலும் கூட, பேச்சை விடவில்லை. "தவிச்ச வாய்க்குத் தண்ணி தராத பாவி அந்தச் சின்னச்சாமி. எச்சிக் கையினாலே காக்கை விரட்டாத புல்லியவான் அந்தப் படுபாவி. அவன்கிட்டே முழிச்சுக்கிட்டு இருங்க நீங்க!... அவனும் அவன் சம்சாரமும் என்ன



மாணிக்கத்தின் தலையில் இருந்த இரத்தத்தை தனது சேலைத் தலைப்பினால் துடைத்தாள் அன்னம்.

நினைக்கு உங்களைச் சுத்திக்கிட்டு இருக்காங்களோ, நீங்க ரொம்ப ரொம்ப சாக்கிரதையா இருக்க வேணுமுங்க. இந்தக் கவலைதான் நேத்தியிலேயிருந்து எனக்கு. மிச்சம் மீதியுள்ள ரெண்டொரு சங்கதியை அப்பாலே சமயம் வரப்ப உங்ககிட்டே தனியாக் கேட்டு விளங்கிக்கிடுவேனுங்க! ..." என்று முத்தாய்ப் பிட்டார் அனுபவசாலியான அம்பலகாரர்.

"நீங்க யாதொண்ணுக்கும் அலட்டிக்கிடத் தேவை இல்லே. என்னை யாரும் அவ்வளவு லகுவிலே வசப்படுத்திப்பிட ஏலா துங்க. எம் மனசை புண்படுத்தி, என்னோட கவுரவத்தைப் பாதிக் கும்படியா யார் நடந்தாலும், அதை நான் பொறுத்துக்கிடவே மாட்டேனுங்க... நீங்க திடமாயிருங்க. நான் இதுமாதிரி எம காதப் பேர்வழிகள் எம்பிட்டுப் பேரையோ கண்டிருக்கே னுங்க!" வீரம் பொங்க, மணி குலுங்கப் பேசினான் அவன். அவன் வீரமணி அல்லவா?

அப்பொழுது நாலைந்து பேர் சூழ ஒரு கூட்டம் வந்தது. அதைத் தொடர்ந்து பெருங் கும்பல் அலறிப் புடைத்துக் கொண்டு வந்தது.

விரைந்தார் பெரியவர்.

மண்டையிலே ரத்தம் சொட்டச் சொட்டக் காட்சி தந்த மாணிக்கத்தைத் தூக்கிக் கொண்டு வந்து வெளித் திண்ணையில் கிடத்தினார்கள். பிரக்ஞை தப்பியிருந்தது. உதிரம் வழிந்தோடத் தலைப்பட்டது.

"ஐயோ! ..." என்று ஓலமிட்டார், அம்பலம்.

"அட தெய்வமே!" என்று ஓடிவந்து கதறினாள் அன்னக் கிளி. நெற்றி மேட்டின் இடதுபுறத்தில் குருதி ஊற்றெடுத்தது. "சாமியே! என்ன அறியாயம்? ... நிணமாயிருக்குதே?" என்று செருமிக்கொண்டே ரத்தத்தைத் தன்னுடைய சேலைத் தலைப் பைக் கொய்து துடைத்த மணியமாக இருந்தாள், சமைந்த சிலை அன்னக்கிளி.

வீரமணியின் முகம் சலனமடைந்து சிறுத்தது.

லாரி ஒன்று மாணிக்கத்தை அடித்துப் போட்டுவிட்டுப்

பறந்துவிட்டதாகச் செய்தி "பராபரியாக" வெளியானது.

"மாப்புள்ளே, நீங்க நாளைக்குச் சிலட்டூர் போய்க்கிலாம்! ... என்ன, நான் சொல்றது? ஆமா! ... இப்ப அவசமாய் மாணிக்கத்தை வண்டியிலே தூக்கிப் போட்டுக்கிணு அறதாங்கி ஆசுபத்திரிக்குப் பறக்கணும். பாவம், மூச்சுப் பேச்சை காணலையே! ..." என்று விம்மினுர் ஆதியப்ப அம்பலகாரர்.

"செய்யுங்க!" என்று குரல் பிசிறு அடித்துக்காட் சொல்லிவிட்டு, நிற்காமல் நிலைக்காமல் புறப்பட்டான், வீ மணி, பொலிகாளை போல.

# 8 கள்ளப் பார்வை.

உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது மணி அடிக்கப்பட்டது.

பிடித்து வைத்த களிமண் பிள்ளையார் மாதிரி பெ கலங்கி, உணர்வு தடுமாறி உட்கார்ந்திருந்த வீரமணிக்குக் கா யில் தன் தாய்மாமன் வீட்டில் நடந்த நடப்பை அறவே மற முடியவில்லை. ரத்தம் வழியக் கொண்டுவந்து கிடத்தப்பட குளமங்கலம் மாணிக்கத்தைக் கண்டதும், "அட தெய்வமே என்று அன்னம் அலறிப் புடைத்துத் துடித்து, அவன் மன்ன யில் இருந்து வழிந்த உதிரத்தைத் துடைத்த அந்நிகழ்ச்சி அ னுள் எரிதழலாய்த் தகித்தது. உஷ்ணக்காற்றை வெளிப்படுத் கொண்டிருந்தது, அவன் மனம். தணலை அவித்துவிட மு வில்லை காற்றினுல். மாருக, தழலை மேலும் எரியவே செய்த

"தலையை வலிச்சாக்க, காலை வலிச்சாக்க, அவசரத்து ஒரு நாலு வெள்ளி புரட்ட வகையத்த மாணிக்கத்தை என்ன தலைமேலே தூக்கி வச்சுக் கூத்தாடுருரே அம்மான்காரரும் மான் மகளும்? ... சொக்குப்பொடி போட்டுத் தன் வாய்ச் சவடால் பேச்சாலே நல்லா மயக்கி வச்சிருக்கான், துப் பயல்! ... நாளைக்கு எனக்கு முந்தானை போடப்போற

ரம் கூட, அவனுக்காக அத்தனை விசனப்பட்டு!... அன்
ரம் சடங்கானதும் உலுப்பைச் சேலை எடுத்து வைச்சு கண்ணு
ஒத்துக்குப் பொண்ணு பேசுறதுக்கு குன்னக்குடிக்குக் காவடி
ஏரக்காத குறையா எம்புட்டோ பாடுபட்டும், அந்தத்
பாக்கலுக்கு ஒத்தை வரியிலேயே நறுக்குத் தறிச்ச கணக்
இலே 'அந்தப் பேச்சு நடக்காது மாணிக்கம்; எங்க அன்னம்
ங்க வீரமணிக்குன்னு பொறந்தது; எப்பவோ, நாங்க கைய
ச்சுச் சத்தியம் பரிமாறிக்கிட்ட விசயம் இது!' என்று துண்டு
றித்துச் சொல்லியுங்கூட, அந்தப் போகுடி மாணிக்கத்துக்கு
டு, சொரணை, ரோசம் எதுவும் அத்துப்போயிடுச்சே!...
ச!...' எண்ணங்களின் சுமை, அவனது மனச் சுமைக்கு மேலே
ந்திக் கொண்டது.

வெளியில் வீசிய வேனல் காற்று அவன் நெஞ்சிலும் நினை
லும் வீசியது.

பொன் பொடிகளைத் தூவினாற்போன்று, வெய்யில் மின்னி
து.

சிகரெட்டைப் பற்ற வைத்து, புகையை வெறிமூள இழுத்து
ழுத்து வெளியே செலுத்திக் கொண்டிருந்தான், வீரமணி.
பேசாமல் அக்கரைச் சீமையிலே, ஜாலியாய் இருந்திருக்க
ம்னுகூடத் தோணுது. என்னமோ, மனசுக்கு இந்த ஊர்
ப்பட்டே வரலே!..." என்று அல்லற்பட்டான், அவன்.

இந் நினைவின் சபலம் உருக்காட்டிய மாத்திரத்தில் அவ
க்கே ஓர் ஆசை மூண்டது. விரைவுகூட்டி உள்ளே சென்று
ட்டியைத்திறந்து, அந்தப் புகைப்படத்தை எடுத்தான். சிங்
பூர்ச் சிங்காரி ஒருத்தியின் அலங்கார உருவத்தை வைத்த
ர வாங்காமல், தொடுத்த மனம் எடுக்காமல் பார்த்தான்;
ர்த்துக்கொண்டேயிருந்தான். 'என் பேரிலே அந்தக் குட்டிக்
தான் எம்புட்டுக் கொள்ளை நேசம்! என் மனசைக் கொள்ளை
ண்ட சிங்காரியாச்சே அவள்!'

இனிய நினைவின் ஊடுருவலில் புதியதொரு கவலையும்
னை ஆட்கொண்டது. 'என்னோட விளையாட்டு எங்க அன்

ணம் காதுக்கு எட்டாம இருக்கோணும். மேலவளவுச் செட்டியார் மகன் சுந்தரம் ஓட்டை வாய்க்காரன். ஆனா, அவனும் எ ஞட்டம்தான்! ஆனதாலே அவன் அநேகமா இங்கிட்டு மூச்சு பறியமாட்டான்! படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்கிறேனு கும்! ... வேறே யாரும் இங்கிட்டிருந்து அந்தப் பக்கம் வந் பிழைக்கலே! ... சிலட்டூர்ப் பக்கத்திலேயிருந்து ஏகமா வந் ருக்காங்க!'

பாத ஒலி கேட்கவே, படத்தைத் 'துருசாக' எடுத்து பெட்டிக்குள் திணித்துவிட்டு வெளியே வந்தான், வீரமணி. அ போதுதான் நினைவு ராட்டினம் நிலைக்கு வந்து நின்றிருந்த மூண்டா, பனியனுக்கு வெளியே சங்கிலியை இழுத்து விட் கொண்டு திண்ணையில் சாய்ந்தான். மண் தட்டுப்பட்டது. மு கைத் திருப்பினன். ஈரக் கறையான் மண்டியிருந்தது. "நல ஓடு கட்டியாகணும். சிங்கப்பூர்ச் சீமையானு ஒரு ராத்தி குள்ளே ஒரு புது வீட்டை வாங்கிப்புடலாமே! ... ம்... கொடு நாழி கழிச்சிருந்தா கறையான் புற்றுமண்டி என்னையும் வ மீகியாக்கிப்பிட்டிருக்குமே! ...'

தபால்காரர் கடிதம் ஒன்றைக் கொடுத்து நின்றார்.

"தட்டுக்கெடாமக் கொண்டாந்துப்பிட்டீங்களே?"

"நீங்க வந்த தாக்கலேத்தான் நண்டு சுண்டெல்லாம் த கடிச்சுச் சொல்லிச்சே!"

"என் லெட்டரை யார்கிட்டவும் மாற்றிக் கொடுத்தி புடாது."

"மாற்றிக் கொடுக்காம இருக்கிறதுக்குத்தானுங்க எனக்கு நம்ம அரசாங்கத்திலே சம்பளம் பட்டுவாடாச் செ ஞுங்க!"

தபால்காரர் போனதும், வீரமணி கடிதத்தைப் படி விட்டு பத்திரப்படுத்தினன்.

வயிறு பசித்தது.

அவன்தான் பசியை அறிந்தும்கூட, அன்னக்கிளியின் வ பாட்டை உண்ணப் போகக்கூடாது என்று கோபமாக இரு ருனே? ...

'ஆமா! அன்னமே வந்து காலிலே விழுந்து கெஞ்சிக்
த்தாடி கூழைக் கும்பிடு போட்டாக்கூட, மசியப்பிடாது! ...
ந்த மாணிக்கம் பயலைத் தலையைவிட்டு இறக்காமல் தூக்கி
சுக்கினு 'கரகம்' ஆடட்டுமே! ... எனக்கென்ன ராசா,
கு வயித்துவலி? ... சொந்த மாப்பிள்ளைகாரன் நான் சிலட்
நக்கு வண்டி ஓட்டிக்கிட்டுப் போறதாய் முடிவுகட்டியிருக்கி
ப, அதுக்குக் குந்தகமாய், வக்கத்த மாணிக்கத்தை ஒசத்தியா
ச்சு அவனைச் சுமந்துக்கினு போறதுக்கு வண்டி வேணும்னு
த்தெறிஞ்சு பேசிப்புட்டாரே, அம்மான்காரர்! ... அவரு
ளுக்குள்ளவே ஒண்டிக் கெடந்த பழைய வீரமணிப் புள்
ன்னு இன்னம் எடைபோட்டிருக்காராங்காட்டி? ... இந்தப்
வீரமணியோட பெருமதி இன்னம் சரியாப் புரியலை அவ
து! ... நான் எதுக்கு சிலட்டூருக்குப் போறேன்னு அவருக்கு
ன அந்தரங்கம் தெரியும்? ... ஒரு அவசரம், ஆத்திரம்னு,
கிட்டு நான் என்னோட சேக்காளி மாருபத்திலே ரகசியமா
ப்பிச்சு வந்த பணம் பத்தாயிரத்துச் சொச்சமும் ஒரு
பெட்டிலே' எங்கூடவே திரும்பி வரும்னு அம்மான்கார
ந விளங்கலே! ... எம்புட்டு சேக்காளி செந்தில்வேல் அய
மார்க்காவாக்கும்! ... கேட்ட டயனிலே வட்டிவாசியோட
பண்ணிப்பிடுவாரே! உசிரைக் கையிலே பற்றிக்கினு சம்
ச்ச பணமாச்சே! ... கணச் சித்தம் கணப் பித்தம் கொண்ட
ந அம்மான்காரருக்கு நல்லவேளையாய் என்னோட செமந்த
த்தை அனுப்பிக்காம இருந்திட்டேன். நான் செஞ்ச அந்தக்
தி இப்ப நல்லது சொல்லிருச்சே! ... அதுவும் இப்ப நல்ல
ப் போச்சு! ... அந்தத் துப்பும் தடயமும் இந்த அம்மா
ந ஒருபொழுதிலே தெரிஞ்சு, 'ஏன் மாப்பிள்ளே, என்னை
ாமத்தானே அந்நியத்திலே இம்மாம் காசை அண்டல்
ணினீங்க?' அப்படின்னு கேட்கத்தான் கேட்பாரு. அப்ப
நல்ல மூக்குடை கொடுத்துப்புடுறேன்! ... இந்தப் புது வீர
யோட சுயரூபத்தை ஒரு தக்கம் அப்பனும் மகளும் புரிஞ்
டாத்தான், அதுக்கப்பறமானும் நேரு சிராய்ப் படிஞ்சு
வாங்க! ... ஊம்! ... அம்மான் மக அன்னமின்னு எனக்கு

அடிநாள் தொட்டு ஒரு 'மாகை'. அதுக்காகத்தான், நான் இங்கிட்டு கிறுக்குப் புடிச்சதாட்டம் வந்து குதிச்சிருக்கேன். இல்லாட்டி, எனக்குப் பொண்ணுக்கா பஞ்சம்?... என்னமோ ஒரு நேசம் அன்னத்து மேலே. அதுக்கு நானின்னுக்க ஒரு பிரியம்தான். சும்மாச் சொல்லப்புடாது!... ஆனா, அந்தப் பொண்ணு அன்னம் எங்கண்ணு பார்க்க, அந்நியமான மாணிக்கத்தோட நெத்தியைத் தொட்டு ரத்தத்தைத் துடைக்கிறதா வது? இதை என்னாலே சகிக்கவே ஏலலையே!... ஆமா, அன்னத்துக்கு ஒரு சூடு போட்டுக் காட்டினாத்தான் எம் மனசு ஆறும்!... ரைட்டு; அதுதான் சரி!..."

சிலட்டூருக்குப் போய்த் திரும்பினால்தான் மனம் சமாதானம் அடையும் என்ற சிந்தையுடன் எதிரே நோக்கியபோது, அலங் கோலமாக நின்ற வில்வண்டி தெரிந்தது. மதியச் சாப்பாட்டை ஆவணத்தாங்கோட்டை சாலையில் முடித்துக்கொண்டு சிலட் டூருக்குப் பயணப்பட வேண்டுமென்று தீர்மானம் செய்து, அத் தீர்மானத்துக்குப் பக்கபலமாக இந்த வில்வண்டியைப் பயன் படுத்திக்கொள்ளும் ஆலோசனையைத் தனக்குத் தானே அங்கீ கரித்துக்கொண்டான், வீரமணி.

'பச்சோந்தி' ஒன்று அவன் காலடியில் பாய்ந்து ஓடியது.

அவன் பயந்து நடுங்கிக் குதித்தான். பசி வயிற்றைக் கிள்ளி யது. ஆகவே, அவன் வண்டியைப் பூட்டிக்கொண்டு கிளம்ப எண்ணி வீட்டைப் பூட்டினான். வில்வண்டியை நகர்த்தி வசம் பார்த்து வைத்துவிட்டு, வெள்ளைக் காளைகளை வாலைப் பிடித்து எழுப்பினான். காளைகளோ பின்னங் கால்களால் எட்டி உதை கொடுத்துத் திமிறின. இடது தொடையில் அடி விழுந்ததோடு தப்பிவிட்டான். 'ஆத்தாடி, தப்பிச்சேன்! இத்தி தப்பியிருந்தா, படாத இடத்திலே பட்டு இப்ப நானுமில்ல மாணிக்கம் மாதிரி ஆசுப்பத்திரிக்குப் போயிருக்க வேணும்?...' என்று எண்ணி ஆறுதல் அடைந்தான்.

அப்போது பொன்னுத்தா அங்கு வந்தாள்.

வீரமணி ஓரி அசட்டுச் சிரிப்பை உதடுகளின் மேல் ஓட

விட்டான். "வா, பொன்னுத்தா!" என்று வரவேற்றான். அவளது பொங்கும் பருவக் கவர்ச்சியை ரசிக்க ஓர் அழகான சந்தர்ப்பம் தன் போக்கிலே ஏற்பட்டுவிட்ட பூரிப்பில் அவன் மனம் குதிபோட்டது.

அவனுடைய 'பார்வை'யை விரும்பாதவளாக நின்ற பொன்னுத்தா வாயைத் திறக்காமல், வில்வண்டியைப் பூட்டினாள். காளைகள் அடங்கின. "எங்க வூட்டு வண்டியை ஓட்டிக்கிட்டுப் போறேனுங்க" என்று சொல்லி, தார்க்கழியைக் கையில் ஏந்தினாள், பொன்னுத்தா.

அவளது ரூப லாவண்யத்தை அத்துணை சடுதியில் பிரிய ஒப்பாதவன்போல் சற்றே தயங்கினான், வீரமணி. 'இந்தப் பொண்ணு போட்டிருக்கிற பொன்வண்டு ரவிக்கை எம்மாம் பளபளப்பாயிருக்குது!...' என்று மனத்தில் வியந்தவாறு, "இரு பொன்னுத்தா, இந்தாலே வாரேன்" என்று சொல்லி உள்ளே போய்த் திரும்பினான். அவன் கையில் மிட்டாய்ப் பொட்டலம் இருந்தது. "இந்தா, தின்னு" என்று வேண்டினான், அவன்.

அவனை ஏற இறங்கப் பார்த்தாள், பொன்னுத்தா. அவள் "பார்வை"யில் 'கள்ளாப்பு' இருந்தது. "எனக்கு வேண்டாமுங்க. ஒங்க அன்னத்துக்குக் குடுங்க! அதான் தர்ம நியாயம். ஆமா, சொல்லிப்பிட்டேன்!" என்று விறைப்பாகச் சொன்னாள்.

"கொஞ்சூண்டாச்சும் எடுத்துக்க!"

அவனுடைய கெஞ்சுதலைச் செவிமடுக்காத பொன்னுத்தா, அவனை முறைத்துப் பார்த்துக்கொண்டே தார்க் குச்சியை சுழல விட்டாள். காளைகள் துள்ளின. வண்டியின் 'போல் மரத்தில்' ஒயிலாக ஏறிக் குந்தினாள். அடுத்த விநாடிக்குள் அவள் பறந்து விட்டாள்.

இக் காட்சியை உசிலே மரத்தடியில் மறைந்து நின்று பார்த்த அன்னக்கிளி, அங்கிருந்து நகர்ந்து வீரமணியின் வீட்டுக்கு மடங்கினாள்.

ஏமாற்றத்தாலும் அவமானத்தாலும் முகம் வெளுத்துக் காணப்பட்ட வீரமணி, அந்நேரத்தில் தன் முறைப் பெண்ணை அங்கு கண்டதும், அவனுடைய மனம் அவனையும் மீறி அடித்துக் கொண்டது. வீடு தேடி வந்தவளை 'வா' என்றுகூடச் சொல்லாமல் மாப்பிள்ளை முறுக்கோடு அவன் திண்ணையில் கால்களைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

சஞ்சலத்தின் பின்னலுடன், சடைப் பின்னல் அழகு காட்ட நின்ற அன்னக்கிளி, "வாங்க சாப்பிட. நீங்க வருவீங்கன்னு பொல்லாப் பாடுபட்டுக் காத்துக்கிட்டேயிருந்தேன். வாங்க. உருமம் தாண்டி இரணிய வேளையும் வரப்போகுதுங்க..." என்றாள்.

அவன் அவ்வளவு லகுவில் திருவாய் மலர்ந்திடுவானா என்ன? முறுக்கு இன்னமும் பிரி கழலவில்லை.

"மச்சான், எம்மேலே கோவமா?" என்று இறைஞ்சினாள், அவள்.

"என் கோபம் வந்து ஒங்களை என்னு செஞ்சிட முடியும்? ஒங்களுக்கு மாணிக்கம் பயல் கோவம்தான் ஒசத்தி" என்று சொன்னான் அவன். குரலில் சோளம் பொறிந்தது.

"அந்த ஆம்பளை பாவம் அடிபட்டு என்னமாக் கெடக்குறாரோ? யாரைப் பத்தியும் எளக்காரமாப் பேசப்புடாதுங்க! ... நீங்க பன்மை போட்டுப் பேசறதைக் கண்டால், ஒங்களுக்கு எம்மேலே மட்டும் கோவமில்லே, என் அப்பன்காரர் மேலே யும்தான் கோவம் போலத் தோணுது! ... இல்லீங்களா?"

"அதான் சொல்லிப்பிட்டேனே, முந்தியே! எங் கோபம் வந்து யாரை என்ன செஞ்சுப்பிடப்போகுது? ... நீ போ, நான் வரல்லே!"

"கண்ணாலம் தெகைஞ்சு தாலி பூட்டினாத்தான் கோபதாபம், சம்பந்திப் பொணக்குன்னு சில்லறைச் சண்டை வரும். இப்பவே நீங்க இப்பிடிக் காரணமில்லாம ஏடாகூடமாச் சடைச்சுப் பட்டீங்கன்னா, என்னாங்க அர்த்தம்?" பொறுமையின் அன்புடன், பரிவின் பாசத்துடன் வின்வினாள், கிளி. ஊதா நாடா பளபளத்தது.

அவளை நிமிர்ந்து பார்த்தான் வீரமணி.

அவளுடைய தங்க ரேக் ரவிக்கை அவனுள் பாய்ந்தது.

"மச்சான், பேசுங்க" என்று தூண்டினுள், அன்னம். கழுத்துச் சங்கிலி மார்பகத்தின் மையத்தில் 'பதிந்து' ஊசலாடியது.

"எனக்குப் பேசறதுக்கு மனசில்லே."

"அப்பிடி என்னுங்க அதுக்குள்ளே வித்தியாசங் கண்டுக்கிட்டீங்க? வாய்ச் சேதியை மறந்திட்டேன். அந்தக் குளமங்கலம் அயித்தை மகன் ஒங்களைமாதிரி சும்மா; கோவிச்சுக்க மாட்டாங்க. மச்சான்."

"அப்பிடியா? இப்பத்தான் விளங்குது. அதானு, அவன் மண்டை ரத்தத்தை அம்புட்டு உரிமையோட நீ துடைச்சு வாய் விட்டுப் புலம்பினே?... நாளைக்கு ஒன்னைக் கட்டிக்கிடப்போற மச்சான்காரன் எங் கண்ணுக்கு முன்னலே நீ அசலானைத் தொட்டு அவன் தலையிலே சொட்டிய ரத்தத்தைக் கவலையோட துடைச்சே?" என்று ஆவேசத்துடன் கேட்டுவிட்டு, அவளை நோக்கினுன் வீரமணி.

இப் பேச்சைக் கேட்டதும் அன்னக்கிளியின் கன்னி நெஞ்சம் படபடத்தது. அவனைத் தலை உயர்த்தி 'நேர்கொண்ட பார்வை' யால் அளந்து ஊடுருவினுள். "இந்தாப் பாருங்க, மச்சான்! ஆபத்துக்குப் பாபமில்லே என்பாங்க. நான் நடந்தது உங்க கண்ணுக்கு இப்பிடி ஆத்திரத்தை உண்டுபண்ணுமின்னு நான் ரவைகூட ரோசிக்கலேயே! நான் செஞ்சது எங் கடமையைத்தானுங்க. அடிபட்டு வந்த ஆளுக்கு மனிதாபிமானத்தோட கவலைப்பட்டு, மனுசப் பண்போட அவுங்க புண் ரத்தத்தைத் துடைச்சது தப்புன்னு ஒங்களுக்குப் படுதா?... எனக்கு அப்படிப் படலேங்க!... ஆபத்துன்னு, யாராலும் எந்நேரமின்னாலும் உதவி செய்யக் கடமைப் பட்டவளுங்க, நான். நான் பொண்ணாய்ப் பொறந்த சென்மமுங்க. ஈரமும் அன்பும், கடமையும் சத்தியமும்தான் எங்க தாய்க்குலத்துக்கு உண்டான தர்மமுங்க!... என்னோட இந்தச் செயலே நீங்க விகல்பமாய் எடுத்துக்கிறது தெய்வம் திருவுளத்துக்குக்கூட அடுக்காதுங்க!...

அடிபட்டுக் கிடந்த அந்த அயித்தை மகனை ஏறெடுத்துக்கூடப் பார்க்காம மச்சான் நீங்க பறிஞ்சிட்டீங்களேன்னு நான் உன்ளுக்குள்ளே எம்புட்டு மனத்தாங்கல் பட்டேன், தெரியுங்களா?" என்ருள் அன்னம்.

"அத்தோட உம் பேச்சை நிறுத்திப்புடு, அன்னம். நீ இப்பிடிப் பேசுவேன்னு நான் கனுக்கூடக் காணலே. வாய் வேதாந்தம் படிக்கிறதுக்கு வசமாக் கத்துக்கிட்டு இருக்கியே. அதோட எம்பேரிலே வேறே குத்தப் பத்திரிக்கை வாசிக்கத் துணிகாரம் வந்திருச்சா?..." கடுமையாகக் கேட்டான், அவன்.

அன்னக்கிளியின் பெண் மனம் வீரமணிக்காக அனுதாபப்பட்டு வருந்தியது. அவனுடைய இதயமற்ற வாதத்தை எண்ணி ஆத்திரமும் அடைந்தது. வருத்தத்தையும் ஆத்திரத்தையும் அவள் பொறுமையுடனும் அமைதியுடனும் கட்டுப்படுத்திக் கொண்டாள். 'மச்சான் வீணுச் சந்தேகப்படுருங்க. இந்த மாதிரி மனசை அப்பாலே திருத்திக்கிடறதுக்கு வழி பண்ணிப்பிடனும். இவுகளோட வீண் பொறுமையும் அசட்டுக் கவுரவமும் பாவம் அந்த அயித்தை மகன் மாணிக்கம் பேரிலே எரிச்சலை ஊட்டியிருக்குது. ஆத்தா, இந்த அயித்தை மகனை—எம் மச்சானை நல்லதனமாத் திருத்திப்புட வழி பண்ணு!' என்னப் பிரார்த்தனையினூடே வீரமணியைப் பற்றிப் புரண்ட புரளிக்கும் ஒரு முடிவு கட்டிவிட வேண்டும் என்ற அவசரம் அவளுக்கு எழுந்தது. ஆனாலும் இவ் விஷயத்தைப் பிறகு காலந் தாழ்த்தாமல் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் தன்னுள் அமைதியாகச் சிந்தித்தாள். அதே தருணத்தில் சற்று முன் பொன்னுத்தாவிடம் வீரமணி பல் இளித்துக் கெஞ்சிய நடப்பையும் அவள் நினைவுகூட்டத் தவறிவிடவில்லை. பெருமூச்சுத்தான் அவளுக்கு மாற்ருக இருந்தது. கண்களின் கலக்கத்தை நாசூக்காகச் சமாளித்துக் கொண்டாள், அவள்.

வெள்ளாடு ஒன்று வீரமணியையும் அன்னக்கிளியையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றது.

கையருகில் இருந்த மிட்டாயில் கட்டெறும்புகள் சூழ மூலைந்து கொண்டிருந்தன.

அன்னக்கிளி புன்னகையை 'ஆ, மந்திரக்காளி' போட்டு வரவழைத்துக் கொண்டாள். "மச்சான், வாங்க சாப்பிட" என்று வேண்டினாள்.

"ஊகூம், நான் வரல்லே" என்று சொல்லிக் கொண்டிருக்கையில், இருந்திருந்தாற்போல "ஆ! ..." என்று கூச்சல் போட்டான் வீரமணி.

"என்னாங்க மச்சான்!" என்று பதறித் துடித்தாள் அன்னம்.

அவள் கண்களில் மின்னிய கண்ணீரை வீரமணி கண்டு கொண்டான்.

தன்னுடைய அத்தையின் மகனைக் கட்டெறும்பு ஒன்று பிடுங்கிவிட்ட உண்மையை அவள் அறிந்தாள்; பதற்றம் மாறியது.

"நல்லாத் தடவிக்கிடுங்க... சரியாப் பூடும். சத்த நேரம் தான் கடுக்கும்! ... சரி, இப்ப நீங்க வாறீங்களா, இல்லையா?" பட்டுக் கைத்தறி பாவனையில் கேள்வியைச் சொடுக்கினாள் அவள்.

"ஊகூம்!" திண்ணையை விட்டுக் கீழே இறங்கினான். மனம் மட்டும் இறங்கவில்லையே!

அவ்வளவுதான். அவள் தன் சடைப் பின்னலின் அடிப் பகுதியில் இருந்த ஊதா நாடாவை 'லபக்' கென்று 'லாந்தி' இழுத்தாள். நாடா அவன் கையில் சிக்கியது. "இந்தாங்க, இதை எடுத்துக்கிடுங்க! ... இப்போதைக்கு நீங்க தந்ததுகளிலே இது ஒண்டிதான் இருக்குது. பாக்கிச் சாமான்களை இப்பவே நொடியிலே கொண்டாந்து குடுத்துப்புடுறேன்! ... உங்க மனசை அதுக்குள்ள எந்தப் பாளத்த பாவிகளோ கலைச்சிருக்கிறாங்க!" என்று ஓரங்கமாகச் சொல்லி, நாடாவை அவனிடம் சமர்ப்பித்தாள், அன்னம்.

அரைக்கணம் அப்படியே பிரமை பிடித்து நின்றுவிட்டான், வீரமணி. கண் சிமிட்டும் நேரத்திற்குள் அவனுள் ஏதோ ஒரு யோசனை கொடிமின்னலாகத் தோன்றி மறைந்திருக்க வேண்டும்!—சற்று முன் தன்னை எறும்பு பிடுங்கியவுடன், தான்

"ஆ..." என்று அலறியதைக் கேட்டு கண்கலங்கித் துடைத்த அன்னத்தின் அன்பும் அவனுள் தோன்றியிருக்க வேண்டும்! அன்னத்தைச் சிரித்த முகத்துடன் ஊடுருவிப் பார்த்தான்: "அன்னம், என்ன காரியம் செஞ்சே... நான் நேசத்தோட உனக்குக் குடுத்த ரிப்பனையா எங்கிட்டவே கோபத்திலே திருப்பித் தருறே? இதான் அழகா?... வச்சுக்க!... இல்லாட்டி, எம் மனசு தாளாது... நம்ம கோபதாபம் ஒருபக்கம் இருக்கட்டும். அதுக்காக, நம்ம பாசமும் நேசமும் யாராலவும் கலைக்கப்பட்டுப் புடாது! அதுக்கெல்லாம் நான் ஒண்ணும் அரை மனுசன் இல்லே!... இந்தா, நீ எடுத்துவச்சுப் பின்னிக்க" என்று கெஞ்சினான்.

வீரம் மிகுந்த வீரமணி, ரிப்பனை அவள் பூங் கரங்களில் திணித்தான்.

"சாப்பிட வருவீங்களா?..."

"ஓ!..."

வாய்விட்டுச் சிரித்தாள் அன்னம். கணத்தில் ஊதா நாடா அதன் இடத்தை அலங்கரித்தது.

"நீ போ. நான் பின்னாலேயே வாரேன்!... இந்தா மிட்டாய், இதையும் எடுத்துக்க!" என்று குறிப்பிட்டான் அவன்; குழைந்தான். அவளது பருவ எழில் அவனைக் கிறக்கியது. 'அன்னத்தை உள்ளாறக் கூப்பிட்டா என்ன?' அவனுடைய மனம் துடித்தது.

"எடுத்துக்க!"

'ஊகூம், எனக்கு எதுக்கு; பொன்னுத்தா தள்ளிவச்ச மிட்டாய்?' என்றுதான் ஒரு போடுபோட விழைந்தாள் அன்னம். ஆனால் அப்படிச் சொல்லவில்லை. நிதானம் அடைந்தாள். "நீங்க தின்னுங்க. அதான் உங்களுக்கு இதமாயிருக்கும். எனக்குத்தான் லை நிறையத் தந்திட்டீங்களே! ஒங்களுக்கும் தேவைப்படாட்டி, ஒங்களைப் பார்க்கிறவங்களுக்குக் கொடுத்திடுங்க. மிட்டாய் கெடக்கட்டும். நீங்க வந்துப்பிடுங்க, எனக்குப் பசி கிள்ளுது!..." என்று 'செல்ல' மாகக் குறிப்பிட்டுவிட்டு, தோள் சேலையை

எடுத்துப் போட்டுக்கொண்டு வழி நடந்தாள், அவள்.

பல்லெல்லாம் தெரியக் காட்டிச் சிரித்தபடி, "ஆகட்டும்" என்று சொன்னான் வீரமணி.

அன்னக்கிளியின் அழகு மறைந்தவுடன், ஏனோ அவனுடைய சிரிப்பு மறையத் தொடங்கிவிட்டது.

# 9 மன ஆழி

உயர்நிலைப் பள்ளியில் கடைசி மணி அடித்துவிட்டார்கள்.

அந்தி வானத்தில் விந்தைக் கோலங்கள் மலர்ந்திருந்தன.

கன்னியாகுரிச்சி மஞ்சள் பூசப்பட்டிருந்த அன்னக்கிளியின் அழகு முகம் செத்துப்போய்விட்டது. வாசல் வெளியைப் பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்துவிட்டன. பூத்திருந்த மல்லிகைப் பூக்கள் அவளை வருந்தி வருந்தி அழைத்தன. அவள் அவ்வழைப்பைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அவள் நெஞ்சம் குலுங்கியது. உள்மன வட்டத்தில் நீறுபூத்த நெருப்பாகக் கனன்ற கவலையின் துயரம் அவளை வாட்டியது; வாடிவிட்டாள் அவள். எதை எதையோ நினைத்தாள்; எதை எதையோ மறந்தாள், ஏதேதோ கவலைகள் அரித்தன. ஏதேதோ துயரங்கள் மூட்டமிட்டன. தெய்வத்தின் சந்நிதிக்குப் போய்விட்டு, அதே உணர்வின் பக்தி நிறைவோடு வீரமணியின் வீட்டுக்குச் சென்றாள். இப்படி ஒருதரமல்ல, இரண்டுதரம் சென்றாள். இருமுறையும் அந்த வீடு பூட்டப்பட்டிருந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்தாள். புலன் ஏதும் கிட்டவில்லை; பலன் ஏதும் கிட்டவில்லை.

அன்னம் சிந்தனை வசப்படலானாள்:

"மச்சான்காரவுக இப்பிடிச் செய்வாகன்னு நான் நினைக்கவேயில்லையே?... ஏன் இப்புடி என்னை ஏச்சுப்புட்டாங்க?... தனக்காகக் காத்துக்கிட்டு சாப்பிடாம பட்டினியோட ஒருத்தி இங்கனே காத்துக்கிட்டு இருப்பாளேன்னு அக்கறையும் அன்பும் கவலையும் கொண்டிருந்தாக்க, இப்பிடிச் செய்வாங்களா?

எம் பட்டினியைப் பத்தி எனக்குக் கவலேயில்லே. ஆனு, அவுக பசி பொறுக்காதவுகளாச்சே... ஊர் மண்ணே எந்த நேரத்திலே மிதிச்சாங்களோ, வந்து ஒண்ணு ரெண்டு நாளேக்குள்ளவே இப்பிடிப்பட்ட புசல் வீசத் தொடங்கியிருச்சே... ஆத்தா, நீ ஏன் இப்பிடிச் சோதிக்கிறே?... எங்க மச்சானே ஏதுக்கு இப்பிடிச் சோதிக்கச் செஞ்சே?... ஆபத்து சம்பத்து யாருக்கும் பொதுவின்னு சொல்வாங்க. ஆனு, அப்பிடிப்பட்ட ஒரு ஆபத்துக்கு எங்க குளமங்கலத்து அயித்தை மகன் மாணிக்கத்தோட தலேக் காயத்திலேயிருந்து ஆடு அறுத்துக் கொட்டுறதன்ன ரத்தம் கொட்டினதை நான் துடைச்சது பெரிய குத்தமின்னு நாக்கிலே நரம்பில்லாம, நெஞ்சிலே ஈரமில்லாமப் பேசிப்புட்டாங்களே?... யாரோ சண்டாளி சூர்ப்பநகை என் மச்சான் மனசைக் குத்திக் கலேச்சிருக்காங்க! அந்தக் கூனியைத் தெய்வம் தான் கேட்க வேணும்!...

'அன்பு எதையும் கேக்கமாட்டாது, குடுக்கத்தான் செய்யு'மின்னு காந்தி மகாத்துமா சொன்னதை அடிக்கொருவாட்டி குளமங்கலத்து அயித்தை மவன் சொல்லிக் காட்டுவாங்க. ஆனு, இந்த பூவாத்தகுடி அயித்தை மவனே அதுக்கு நேர் விரோதமாய் நடக்குறுங்களே. நான் அன்போட அந்தரங்க சுத்தியாய் அந்தக் குளமங்கல அயித்தை மவனேட மண்டை ரத்தத்தைத் துடைச்சதிலே என்ன குத்தம் இருக்குது?... என்னேட பரிசுத்தமான அன்பைக் கண்டு மனச் சந்தோஷப்படுறதுக்குப் பதிலா, வீண் பொருமையும் அல்ப சந்தேகமும் படுறுங்களே, இந்த மச்சான்?... ஒரு கிழமைக்கு எத்தனேயோ தரம் இங்கிட்டுத் தான் அந்த அயித்தை மகன் சாப்பிடுறுங்க; தூங்குறுங்க; எழுந்திருக்கிறுங்க. இதைக்கூட யாராவும் மச்சான்கிட்டே ஓதி, இதைப் பத்திக்கூட சம்சயப்பட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லேதான். அந்தக் குளமங்கலத்து அயித்தை மகன் மாணிக்கம் கீறின கோட்டைத் தாண்டாதவுக, கிழிச்ச வெத்திலேயைப் போடாதவுக என்கிற சங்கதி ஊருக்கெல்லாம் தெரிஞ்ச ரகசியம்தானே? ஆனு, இந்தச் சொந்த மச்சானுக்குத்தான் அதெல்

ளாயி மனசிலே படாதே! ...

'நாளைக்கு நான் மூந்தானை போடப்போற மச்சானுச்சே, வாயடக்கம் இல்லாமப் பேசப்புடாதேன்னு பொறுமையாய் இருந்தேன். இல்லாட்டி, வேறே எந்த அப்பன் மகன் கொம்பனு யிருந்தாலும், பல்லு மேலே பல்லுப் போட்டு என்னை ஏசினதுக்கு நல்ல பாடத்தை கைக்கு மெய்யாய்ப் படிச்சுக்குடுத்திருக்க மாட்டேனு? பொன்னுத்தாவோட சரசம் கொஞ்சுனுங்க. அது வந்து ஒப்பாரி வச்சிட்டுப் போவுது... ஒரு சமைஞ்ச பொண்ணுக்கு ஒரு ஆம்பளை திங்கிறதுக்குக் குடுத்தா, யாருக்குத்தான் சிவன் போகாது? ... இந்த மச்சான் திட்டம் யாதொண்ணுமே மட்டுப்படலையே? ... புதுசா ஒரு பேச்சு அடிபடுருப்பிலே, அவுகளை சின்னச்சாமி அம்பலம் மயக்கி தன்னோட மாப்புள்ளையா ஆக்கிக்கிட்டாலும் ஆக்கிடுவாங்கதான்... எடுப்பார் கைப் பிள்ளையாய் ஒரு விதரனை தெரிஞ்ச ஆம்பளை இருந்தாக்க, யார் தான் ஆட்டிப்படைக்கமாட்டாங்க? ... உள்ள இடுசாமம் பத்தலைன்னு, இதுவேறே... இந்த லட்சணத்திலே, இவுக அக்கரைச் சீமையிலே ஒரு குட்டியோட சவகாசம் வச்சிருந்தாங்கன்னு வேறே புகைஞ்சுது... ஆத்தா மூத்தவளே! ... எங் கதையை இப்பிடியா திருப்பியடிக்க வேணும்? ... காலிலே நகம் முளேச்ச நாள்தொட்டு, நாஞம் இந்த மச்சானும் ஒரே வட்டியிலே சோறுண்ணேம். விவரம் புரியிற காலம் வரைக்கும் ஒரே பாயிலே படுத்துத் தூங்கினேம்! ... அந்த ஒரு பாசம், அந்த ஒரு நேசம் அன்னியிலேயிருந்து எம் மனசிலே ஊறி வளர்ந்து, "இவுகதான் என் புருசன், நான்தான் அவுக பொஞ்சாதி' அப்பிடியிங்கிற ஒரு கட்டுதிட்டம் உருப்பெற்றிடுச்சு. அயித்தையும் அப்பனும் அந்த ஒரு உண்மைக்குச் சாட்சியாட்டம் கையடிச்சுக் கிட்டாங்க. எங்க ஆத்தாவும் அவுக அப்பாரும் கூட இருந்து நடந்து முடிஞ்ச ஒரு ஒப்பந்தம் இது! ... அப்ப இந்த மச்சான் கை இறங்கியிருந்த சிரமமான சமயந்தானே; அப்பவேதானே எங்க சம்பந்தம் சாடிக்கை குதிர்ந்திச்சு... இப்ப யோக தெசையிலே இருக்கிறப்பவா நாங்க அவுககிட்டே புதுச் சம்பந்தப் போட்டுக்கிட்டோம்? அதொண்ணும் இல்லியே! ...

"மச்சான், ஒங்களுக்காக விருதத்துக்கு ஆக்கி வச்ச விருந்தும் பாகசமும் நாக்கடுகுத் துகையலும் சவத்துப் போச்சே, மச்சான்!... ஏதுக்கு என்னை இப்படிப் படுத்திப்புட்டீங்க?... எம்புட்டோ உணர்வா, அப்பாவுக்குக் கடுதாசி போட்டு அதிலே என்னைப்பத்தி எம்புட்டோ நேசமாய் கண்டெழுதியிருந்தீங்களே, மச்சான்?... மெய்யான நேசம் இருந்தாக்க, மெய்யாலுமே எம்பேரிலே ஒங்களுக்கு முழுசான பிரியமும் அன்பும் பாசமும் இருந்தாக்க, நடந்த நடப்பை உங்களாலே புரிஞ்சுக்கிட்டிருக்க ஏலாதா? உங்க அன்னத்து மேலே ஒங்களுக்கு அப்பழுக்கில்லாத வாஞ்சை இருந்திருந்தாக்க, ஒங்க அன்னத்தோட அப்பழுக்கில்லாத மனதைத் தெளிஞ்சுக்கிட்டிருக்க வாய்க்காதா?... ஐயையோ, நெஞ்சு பொறுக்கலியே?..."

மன ஆழியின் எண்ண அலைகளுக்கு ஓய்வேது?

அந்திக் கோலம் அழிந்தது.

அன்னக்கிளியால் மண்டைக் குடைச்சலைத் தாள முடியவில்லை. நெற்றியைப் பற்றிக்கொண்டு, தடை கழிந்தாற்போல எழுந்தாள், அவள் காலடியில் சுற்றியது கோழி! —ஆம்; கொடுக்கும் அன்பாக வீரமணிக்குக் கோழி விருந்து வைக்க மாணிக்கம் கொண்டு வந்து கொடுத்தானே, அந்தக் கோழிதான்! அதைப் பார்த்ததும் அவள் நயனச் செம்புகள் நிறைந்தன. "குளமங்கலத்து அயித்தை மவன் பொழைச்சுக்கிட வேணுமே... ஆத்தா, ஒனக்கு மாவிளக்கு போடுறேன், அதை விக்கினமில்லாமக் காப்பாத்திடு. எனக்குக் கஷ்டம் வருது; அதைத் தாங்க சக்தியத்து, ஒனக்குக் கஷ்டம் கொடுக்குறேன். என்ன செய்யட்டும்?..."

நடையில் இருந்து வெளியே வந்தாள், அவள்.

ஆசையின் முகத்தில் ஏமாற்றம்.

நடையில் கிடந்த ஈர்வலியை எடுத்து அலமாரியில் வீசிவிட்டு, விளக்கைப் பொருத்தினாள்.

யாரோ வரும் ஓசை வந்தது. வீரமணியாக இருக்குமோ என்று ஓடிவந்தாள் அன்னம்.

யாரோ ஒரு புதிய, நெடிதுயர்ந்த தங்கப்பல் ஆசாமி வந்து

நின்றார். கையில் தோல்பை; முகத்தில் கறுப்புக் கண்ணாடி. தும்பைப் பூப்போல வேட்டி, சட்டை. "சிங்கப்பூர் வீரமணி இருக்காகளா?" என்று விசாரித்தார், அந்த மனிதர். 'கோட்டான்' ஜாடையில் முகம் இருந்தால், அவரை 'மனிதர்' இல்லையென்று சொல்லிவிடலாமா?—கூடாது—கூடவே கூடாது!

அன்னம் நிலைப்படிக் கதவில் மறைந்து, "நீங்க யாருங்க?," என்று ஓர் எதிர் விசாரிப்பு நடத்தினாள்.

"நமக்கு கோயமுத்தூருங்கம்மா! வீரமணி ஐயாவைப் பார்க்க வேணுங்கம்மா!..." இழுத்து இழுத்துப் பேசினார், அந்த மனிதர்.

"உங்க பேர்?"

"வந்துங்க... செங்கோடனுங்க!"

"என்ன விஷயமுங்க?"

"நான் ஒரு ஏஜண்டுங்கம்மா. தொழில் விஷயமாப் பார்க்க வந்தேங்கம்மா. உண்டான பணத்தை நல்ல விதத்திலே முடக்கினா ஒண்ணுக்குப் பத்தாய்ப் பெருகுமுங்கம்மா."

"அப்படிங்களா? அவரை உங்களுக்குப் பழக்கமுண்டுங்களா?"

"இனிமேத்தாங்கம்மா பழக்கமாகப் போறுங்கம்மா! ஆமா, நீங்க அவரோட சகதர்மிணியுங்கதானேங்கம்மா?"

"ஆமாங்க!" என்று சிரிப்பை அடக்கிக்கொண்டாள். மன உளைச்சலில் இப்படிப்பட்ட ஒரு பேச்சு இதம் தந்ததோ?

"அப்போ நான் புறப்படறேனுங்கம்மா. அடுத்த நாள் வந்து பார்க்கிறேனுங்கம்மா!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார், செங்கோடன்.

நிலவு எரித்தது.

இருள் நகைத்தது.

அன்னம் மேல்பக்கம் சென்றாள். சோளக்கொல்லை பொம்மைதான் தெரிந்தது. கீழ்ப்பக்கம் போனாள். பஞ்சாயத்து விளக்குத்தான் தெரிந்தது.

பாம்பு ஒன்று உளுந்து வாசனையை வீசிக்கொண்டு ஓடியது.

நரிக்குறத்தி நரியை விட்டுவிட்டு, வெறும் குறத்தியாக வந்தாள். நாய் ஊளையிட்டது.

"என்ன விராட்டிச்சி, சோறு? இரு...இரு!"

அவளை இருக்கவிடாமல் சோறு போட்டாள், அன்னம்.

"மகாராசியா இரும்மே! ..."

"இருக்கிறேன், தாயே!"

"இது என்ன ஊர்?"

"பூவாத்தகுடி!"

"அங்கிட்டு குளத்தைத் தாண்டி என்ன பட்டணம்?"

"பூவைமா நகர்னு ஒரு ஊர்."

"ஊசி வேணுமா, தாயி?"

"எதுக்கு?"

"தைக்க!"

"ஒன் வாயையா? போ, போ."

அவள் கறுப்புக் கறை படிந்த பற்களைக் காட்டிச் சிரித்தாள். மார்பகத்தின் குறுக்காகத் தூளியில் கிடந்த செல்வம் அழுதது.

அன்னக்கிளியின் சிரிப்பும் இப்போது அழுகையாகத்தான் மாறியது. வீரமணியை இன்னமும் காணவில்லையே!

அப்போது வாசலில் வண்டி வந்து நின்றது.

எட்டி நடந்த அன்னம், கீழே தன்னுலே இறங்கிய மாணிக்கத்தைக் கண்டதும், உணர்ச்சிப் பெருக்குடன் "எப்பிடிங்க இருக்குது அயித்தை மகனே?" என்று கேட்டாள். குரல் பாதி விம்மலும் பாதி மகிழ்வுமாக ஈர்ந்தது.

"பரவாயில்லே, அன்னம்." மண்டைக்கட்டில் கை அளைந்தது.

ஆதியப்ப அம்பலகாரர் அவனுக்குத் துணை நின்றார். "ஊசி போட்டு, மருந்து வச்சுக் கட்டுப் போட்டிருக்குது. மூணும்நாள் மறு கட்டுக்குப் போகணும். தலை தப்பினது தம்பிரான் புண்ணியந்தாணும்! ... ஏதோ கன்னக்கட்டுக்கல் சாமான் அந்த வாயிலே போயிருக்கு. தடயம் கிடைச்சு, அதை நிறுத்திப்புட தானாக்காரரும் மாணிக்கமும் பிரயத்தனப்பட்டிருக்காங்க.

ளாரிக்காரன் இதுமேலே லாரியை மோதியடிச்சுப்பிட்டு பறந்திட்டான். மாணிக்கம் அடிபட்டது தெரியாம தாணுக்காரர் சைக்கிளிலே லாரியை துரத்திக்கிட்டு ஓடியிருக்காரு; கிரமங்களம் தாண்டி, ஆவணத்திலே நெல்லு மூட்டைகளைப் புடிக்கிற கொட்டகைக்குக் கிட்டணியிலே லாரி நின்னதும் புடிச்சுக்கிட்டாரு. இப்ப அறந்தாங்கியிலே அந்த லாரி கெடக்கு...” என்றார் பெரியவர்.

அன்னக்கிளி திண்ணையில் பாயை விரித்துப் போட்டாள். தந்தை சொன்ன விவரம் செவிகளில் ஏறத் தவறவில்லை.

மாணிக்கம் பாயில் மெல்லத் தலை சாய்த்தான். அசந்து போய் உறங்கத் தலைப்பட்டான்.

“ஒரு சங்கதி, ஆத்தா. சின்னச்சாமி அம்பலம் வகையா மாட்டிக்கிட்டு, அவன் ராசாங்கத்துக்குத் தெரியாம ஏமாத்தி பதுக்கி வச்சிருந்த உபரிக் கணக்கு நெல்லு மூட்டை நூறையும் அறந்தாங்கியிலே போலீசு பறிமுதல் செஞ்சு வச்சிருக்குது. கேசு பதிவு செஞ்சுக்கிட்டு ஆளை ஜாமீனிலே விட்டிருக்காங்க!” என்று புதிய விவரத்தை மகள் முன் வைத்தார், அம்பலம். “இதிலே நெல் பறிமுதலும் அபராதமும்தான் கெடைக்குமாம். ஆனா, இன்னொரு காரியம் செஞ்சு தப்பிச்சுக்கிட்டு இருக்கான். இது அம்பலமாயிட்டா, ஐயா கம்பி எண்ண வேண்டியதுதானிருக்கும்! ...” என்றும் சொன்னார். பிறகு அவர் தம் அருமைக் குமரியைப் பார்த்தார். அவள் சோகமே உருவாக நிற்பதைக் கண்டதும், அவருக்குப் பயம் பிடுங்கித் தின்றது. அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். “என்ன ஆத்தா, இப்பிடிப் பொரியுது! மேலுக்கு முடியலையா? ஆசாரி ஐயாகிட்ட கையைக் காட்டப்புடாதா?” என்று கவலை மீதூரக் கேட்டார்.

அன்னக்கிளி, “உடம்புக்கு ஒண்ணுமில்லேங்க அப்பா” என்றாள்.

“ஆமா, மாப்புள்ளை வந்து சாப்பிட்டாங்கல்ல? ... [illegible] விருந்து பலகாரத்துக்கு அழைச்சுக்கிட்டு வரலா? ... நெய்ப் பணியாரம் செஞ்சுப்பிடணும்னு வெள்ளனவே சொன்னியே? ...”

அவள் அமைதியைத் துணை சேர்த்திருந்தாள். பின் வாய் திறந்தாள். "மச்சானுக்குக் கோவம்! ... அவுகளுக்கு சிலட்டூர் போய் வாரதுக்கு தாரதாச் சொன்ன வண்டியை அறந்தாங்கிக்கு ஓட்டிக்கிட்டுப் போயிட்டதாலே ரொம்ப சள்ளைப்பட்டுக்கிட்டாங்க. கெஞ்சிக் கூப்பிட்டுப் பார்த்தேன். வாரதாச் சொல்லியும் வரல்லே. ரெண்டுதரம் போய்ப் பார்த்தேன். ரெண்டு தக்கமும் வீடு பூட்டிக் கெடந்துச்சுங்க!" என்றான். சாவதானமான தொனியில். என்றாலும் அக்குரலின் அடியின் அடிநாதமிட்ட துயர இழையைப் பிடித்துக்கொண்டார், அம்பலம். அப்படியே அரைக்கால் நாழிகை வாய் மூடி ஊமையானார். பிறகு மாணிக்கம் ஆழ்ந்து தூங்குவதைக் கண்டார்.

"நாலு ஊர்த் தண்ணி குடிச்சும் இன்னும் 'இது'க்குப் புத்தியலேயே! ... உயிராபத்தின்னு வண்டியை ஓட்டிக்கிட்டுப் போனதுக்கா கோபப்படுது? ... 'அது' போல நானும் கோபம் காட்டலாமா? கூடாது! ...... அன்னம், நீ வருத்தப் படாதேம்மா! நொடியிலே போய் கையைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு வந்துப்புடுறேன், ஆத்தா! ... இனிமே பலகாரந்தான் சாப்பிடுவாங்க மாப்புள்ளை. தோசைக் கல்லை வை. பணியாரத்தைச் சுடு. ஒரு மிளகாய்ப் பொடித் தோசையும் ஒரு பொன் முறுகல் தோசையும் சுட்டுப்புடணும். அவுக தலையைக் கண்டு கல்லை வைக்கலாம்... அடுப்பிலே! ... ஆமா, நீ விரதம் பிடுச்சியில்லே?" என்று கேட்டார்.

அவள் "ஆம்" என்றாள்.

ஆனால் உள்ளே போய்த் திரும்பிய கிழவர், "பொய்தானே சொன்னே? ஒன் மச்சான் சாப்பிடாததாலே நீ பட்டினி இருந்திட்டே, இல்லே? ... இந்த அன்போட மகிமை அந்தப் புள்ளைக்குப் புரியலையே? ... ம்... நீ போய் ஆகவேண்டியதைக் கவனி. அப்பன் சொல்லுறதைத் தட்டப்புடாது. முதலிலே ரெண்டு தோசையைச் சுட்டு வாயிலே போட்டுக்க. வயசுப் பொண்ணு பசி தாங்கப்புடாது. ஒன் ஆத்தாளா இருக்கினு ஒனக்கு யோசனை சொல்ல? சாப்பிடு ஆத்தா!," என்று மானத்து வேதனை மூளச் சொன்னார்.

"ஆகட்டுங்க. இவுகளுக்கு எந்திருச்சதும் என்ன குடுக்கிறது? நொய்க் கஞ்சி காச்சி, பருப்புத் துவையல் அரைச்சுக் குடுக்கவா? எலுமிச்சங்காய் ஊறுகாயும் இருக்கு" என்றாள்.

"உன் பத்தியம்தான் கணக்கு ஆத்தா!"

தாங்காமல் சென்ற தந்தைக்கும் தங்க நின்ற மகளுக்கும் சாட்டையில்லாப் பம்பரமாக நிலவு துணை இருந்து சுழன்று கொண்டு இருந்தது.

# 10 சகுனி மாமா

சாட்டை இல்லாப் பம்பரம் போல மாயப் பிரபஞ்சம் இயங்கிக் கொண்டிருந்தது.

விதியும் வினையும் கட்சிக்கு ஒன்றாக நின்று கச்சை கட்டிக் 'கிட்டிப்புள்' விளையாடிக்கொண்டிருந்தன.

தன்னை மீறிய ஆணவச் சிரிப்பை அட்டகாசமாகக் கக்கிக் கொண்டிருந்தான் வீரமணி. வலது கை வீச்சில் சுழன்றுகொண்டிருந்த கயிற்றோடு, தரையில் சுழன்று கொண்டிருந்த அந்தப் பம்பரத்தை இமை நோகப் பார்த்தான். வழுவழுப்பாக இருந்த முகம் பிரகாசம் அடைந்தது. "எப்பிடி என்னோட ஆட்டம்?" என்று திமிர் கொழிக்கக் கேட்டான். கோவைப் பழங்களாகச் சிவந்து கிடந்த விழிகளில் ஒரு "கிருது"—கர்வம் துவங்கியது.

"அண்ணாச்சியோட ஆட்டத்துக்குச் சவால்போட ஏலுமா? சரி, எங்களுக்கு மிட்டாய் தாங்க!" என்று புதுப் புதுக் குரலாக எதிரொலிக்கத் தொடங்கின. சிறார்களுக்கு விடுமுறைக் கொண்டாட்டம்.

கதவு திறந்து மூடியது.

போதையின் கிறக்கம் வீரமணியின் மண்டைக்கு ஏறியது. ஒரு குட்டான் மிட்டாய்கள் காலியாயின. காலில் இடறிய சவுக்குக் கட்டையை எற்றிவிட்டான். ஆயிரம் பூக்கள் மஞ்சப் பொலிவூட்டிச் சிதறின.

"எனக்கும் ஒண்ணு தரப்புடாதா தம்பி? ஒங்க கையாலே வாங்கிச் சாப்பிட்டால், மிட்டாய்க்கு இன்னம் மிஞ்சின இனிப்புக் கூடிவருமே, அதுக்காகத்தான் பச்சைப் புள்ளைக்குச் சமதையாக் கேட்டேனுங்க" என்று கெஞ்சிக்கொண்டே வந்தார் சின்னச்சாமி அம்பலம். ஆனல், அவர் அதிர்ஷ்டம் ஒரு மிட்டாயாவது சாத்திரத்துக்கு மிஞ்சிக் கிடக்கக்கூடாதா?

"அல்லாம் ஆயிடுச்சுங்க, ஐயா. நாளைக்குத்தான் நாம தஞ்சாவூர், திருச்சியின்னு ஊர்ப்பயணம் போகப் போறேமே, அங்கிட்டு ஒங்களுக்கு ஒரு முட்டாயிக் கடையையே வாங்கித் தந்துபுடுறேனுங்க. எம்பேரிலே நெசமான பாசம் வச்சுக்கிட்டு வார ஒங்களுக்கு நான் எம்புட்டோ செய்யக் கடமைப்பட்டவன் இல்லீங்களா?" என்று 'நேரிய' முறுவல் இழைத்துச் செப்பினன், அவன்.

சின்னச்சாமி அம்பலத்துக்கு உச்சி குளிர்ந்தது. "ஓங்க அன்பு எம்பேரிலே சாசுவதமாயிருந்தா, அதுவே எனக்குப் போதுமுங்க. முட்டாயி கெடக்குதுங்க" என்றார். மிட்டாயைத் தின்னுமலே நப்புக் கொட்டிக் கொண்டார், அவர். நாக்கு உதடுகளைத் தடவியது. மீசையின் இழைகள் சில நாக்கில் ஒட்டிவிடவே அவர் காறித் துப்பினர்.

வீரமணி விஷமமாக நமட்டுச் சிரிப்புச் சிரித்தான். அதை அவர் கண்டும் காணுதது போல இருந்துவிட்டார். "அப்புறம் என்னுங்க?" என்று பேச்சுக்கு மறு போக்குக் காட்டினர். அவர், கவலை ஏற்றம் இறைப்பவன் 'படைசால்' மாற்றித் தண்ணீர் பாய்ச்சலுக்கு மறு போக்குக் காட்டித் திருப்பி விடுவதற்குச் சரியாக.

"நீங்கதான் சொல்ல வேணும்" என்முன் அவன், தெளிவுடன். நுங்கும் நுரையுமாகக் கலங்கல் சுழிக்க புது வெள்ளம் தன் மனக் காட்டாற்றில் புரண்டோடிக் கொண்டிருந்த விநயமும், உண்மையும் அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லையோ, என்னவோ?

"தேடி வந்த காரண காரியத்தை மறந்திடப் போறேன். நான் அனுப்பிச்ச அந்தக் கறுப்புக் கண்ணுடி ஆசாமி ஒங்களைப்

பார்த்துக்கிட்டாராமே... மேற்படி தாக்கல் சம்பந்தமாச் சொன்னுரு... எப்ப வச்சுக்கலாமுங்க வீரமணி?" என்று தொடங்கினர், சின்னச்சாமி. கையிலிருந்த புதுக் குடையைத் தடவியவாறு கனவின் மயக்கத்தில் திளைத்திருந்தவராய்த் தோற்றம் தந்தார், அவர். வீரமணி பரிசளித்த குடை வெகு நேர்த்தி.

"பையப் பேசுங்க... எனக்கு இதுமாதிரிக் காரியம்னு தண்ணிப்பட்ட பாடுதான். ஆனலும், ஜாக்கிரதையா இருக்க வேணுமா? அந்தக் கறுப்புக் கண்ணுடி ஆசாமி வந்தாரு. பேசினேம். பேரம் விஷயம்தான் ஒத்து வரல்லே. எப்பிடியிருந்தாலும் முடிச்சுப்பிட வேண்டியதுதான். நான் எப்பவும் ரெடி தான். அதான் சிலட்டூர் சங்கதியும் கைகூடி வந்திருச்சு. ஒங்க தோது பார்த்து வச்சுக்கிடுவோம். மத்த நடவடிக்கைக்கு நீங்க தான் எனக்குத் துணை, ஏன்னுக்க, இந்த நாட்டு நிலவரம் எனக்குக் கிட்டத்தட்ட புதுசுதானுங்களே" என்று கூறினன், வீரமணி.

"என்னை நம்பிட்டீங்க நீங்க. நான் ஒங்க நம்பிக்கையை நம்பிப்பிட்டேன். நீங்க கொடுத்த கொடை ஒண்ணே சாட்சி இல்லையா? ம்... ஆத்தாதான் நமக்குத் துணையிருக்க வேணும். நம்மளைக் கட்டிக் காக்கிற கடமை இல்லையா, ஆத்தா, பெரியவளுக்கு?... நாளைக்கு எனக்கு அறந்தாங்கியிலே வாயிதா. என்ன பண்ணப் போறுமேன்னு வேறே பயமாயிருக்குது. என்னு செய்வான்? நெல் பறிமுதலோட, அலதாரம் வேறே போடு வான், கட்டிப்புடுறது! ... அப்ப நாளைக்கு ராவுக்கே நாம இங்க ணேயே கூடலாம். ரொம்ப கமுக்கமாயிருக்கணும். புக்கந்தியிலே வாயை விட்டுப்புடாதீங்க... நீங்க திடமாயிருங்க... என்னை மிஞ்சிப்புடலாமுங்க பணத்திலே!" என்று மிக மெல்லிய குரலிலே ஞாபகப்படுத்தினர் சின்னச்சாமி; உற்சாகப்படுத்தினர்.

"அப்படிங்களா? நம்ம ரெண்டு பேருக்குள்ளாற இனிமே இகல்பும் ஏது?... ம்... நடத்துங்க ஐயா!" என்று நமட்டுச்

சிரிப்புடன் சொல்லிவிட்டு, அருகில் இருந்த கதைப் புத்தகத்தை எடுத்தான். 'பூவைமாநகர்க் கதாசிரியர் அண்ணுச்சி எழுதின கதை! ... பட்டிக்காட்டுக் கதையை எம்புட்டு நேருத்திரமா எழுதியிருக்காரு, இந்த அண்ணுச்சி! அவுக செட்டித் தெருவிலே முந்தி நடந்து முடிஞ்ச கட்சிச் சண்டையை மனசிலே" வச்சுக்கிட்டு, அப்பிடியே படம்புடிச்சுக் காட்டியிருக்காரே! சொந்த மாமனுக்கும் மருமகனுக்கும் நடக்கிற சண்டையைப்பத்தி என்னமாத் தீட்டியிருக்காரு, அந்த அண்ணுச்சி! ... 'கலயம்' னு கதைப் பேர் அமைஞ்சிருக்கிறதே ஒசத்திதான்... அந்த அண்ணுச்சி கண்டுக்கிட்டு வந்த கணுப்படி, அவுங்க ஊரும் இப்ப ஒண்ணுயிடுச்சே! ... ஊம், இப்பத்தான் யாபகம் வருது. உசிருக்குசிராய்க் காதலிச்ச அயித்தை மகளையும் அம்மான் மகனையும் ஏதுக்குத்தான் பிரிச்சுவச்சுக் கதையை முடிச்சாரோ? ... அந்த முடிவுதான் எம் மனசுக்கு ஒப்பலே! ..."

சிந்தனைப் பின்னலுடன் காணப்பட்ட வீரமணியை ஒரு மாதிரியாகப் பார்த்தார் சின்னச்சாமி. "என்ன யோசனைங்க வீரமணி? கண்ணெல்லாம் சொருகுதே" என்று கேட்டார்.

"தூக்கம் கண்ணைச் சுத்துது... நேத்து அறந்தாங்கியிலே எம்.எல்.ஏ. ஐயாவைப் பார்த்திட்டு வந்தேன். ரொம்பத் தங்கமான ஐயா, அவங்க... ரொம்ப பிரியத்தோடு பேசிஞங்க... பொறகு அறந்தாங்கி, சிலட்டூர்னு வேறே ஒரே அலைச்சல். "எங்க வீட்டுப் பிள்ளை' பயாஸ்கோப்பு பார்த்த அசதிவேறே... இங்கிட்டு வந்ததும், நம்ம பக்கத்து ஊர் கதாசிரியர் அண்ணனைப் பார்த்தேன், அவங்க வூட்டிலே. அவுக போட்ட ஒரு புத்தகத்தைக் குடுத்தாங்க... அதை ஒரே மூச்சாப் படிச்சு முடிச்சிட்டேன், ராத்திரியோட ராத்திரியாய்... அதான் கண்ணிலே தூக்கம் சொக்கிக் கலங்குது! வேறே விசேஷம் ஒண்ணுமில்லே"

நிதானமாகப் பேச முயற்சி செய்தான் வீரமணி.

"என்ன குரல் கம்மலாச் சோர்ந்திருக்குது? காலைப் பலகாரம் ஆச்சோ?"

"ஆச்சு, செல்லையா, டீக்கடையிலே!"

"ஏன், ஓங்க அம்மான் வூட்டுப் பலகாரம் பிடிக்கலையா?"

அவன் மவுனம் சாதித்தான்.

"சொல்லியனுப்பிச்சிருந்தா, பொன்னுத்தாகிட்டே குடுத்தனுப்பிச்சிருப்பேனே! காத்தாயி சொன்னிச்சு மாமனுக்கும் மருமகனுக்கும் ஏதோ கம்மல்னு."

அவன் மீண்டும் வாயை மூடிக் கொண்டான்.

பகல் செய்வோன் ஏறுமுகம் காட்டிக்கொண்டிருந்தான். சின்னச்சாமி அம்பலம் கால்களை மாற்றிப் போட்டுக் கொண்டார். 'காற்று' ப் பறிந்தது.

வீரமணி கைக்குட்டையை எடுத்து மூக்கில் வைத்துக் கொண்டான். 'சென்ட்' மணத்தது. கைக்கெடிகாரத்தைப் பார்த்தான், அவன்.

"தம்பி, இப்ப மணி என்ன?"

"ஓம்பதரையுங்க. ஒரு ரெண்டு நிமிசம் தாமதம்."

"ஆமா, இன்னிக்கு பத்து நாழிகைப் பொழுதுக்கு ஓங்க அம்மான்காரர் ஆதியப்ப அம்பலம் சாமிக்குப் படைச்சு, அலஞ்சிரான்காட்டு நஞ்சைத் துண்டுகளிலே நாத்துப் பறிக்கப் போறாராமே, ஓங்களுக்குச் சேதி வரலையா? அம்பலம் ஓங்களை வந்து கண்டு தண்டிக் கூப்பிடலையா?... குளமங்கலத்தான் சித்தெறும்பாட்டம் சுத்திக்கிட்டு இருக்கானே?" என்று தூபம் போட்டார், சின்னச்சாமி.

கைகளை அகல விரித்து உதட்டைப் பிதுக்கினான், வீரமணி. மீண்டும் ஓர் அகந்தைச் சிரிப்பு பிறிட்டது. "அந்தப் புறம்போக்கு மாணிக்கத்தைப்பத்தி இன்னமும் எங்கிட்டே பேசுறீங்களே? அன்னிக்கு அறந்தாங்கி தாணாவிலேகூட நான் இதுப்பத்தி வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டாச் சொன்னேனுங்களே?" என்றான்.

"ஆமாங்சு, மறந்துப்புட்டேன். அவன் கெடக்குறானுங்க.

கோபுரத்துக்குக் குப்பை மேடா சமதை?" என்று குழைந்தார் அவர்.

"எம்புட்டுப் பணத்துக்கும் கவுரவத்துக்கும் எமனுயிருக்கிற அந்த மாணிக்கம் பயலுக்கு உறைக்கிற விதத்திலே நல்லாச் சூடு குடுத்துப்புட்டு நின்னுத்தானே நான் வீரமணி! ... மண்டைக் கட்டு ஆறிப்போயிடுச்சுன்னு இருக்கான்! ... ஊம். வரட்டும்? ... அது சரி. என்னு கேட்டீங்க? அம்மான்காரக வந்து சாமி கும் பிடுறதுக்கு அழைக்கலையான்னுதானே கேட்டீங்க? ... அவரு எப்பிடிங்க வருவாரு? ... ஓங்கின கை இறங்காம களத்துமேட் டுக் கங்காணம் கண்டு முதலைக் கருக்கடையாப் பார்த்துப் பழ கினவரு—இருந்த சொத்துப்பத்தை பர்மாச் சீமையிலே லாவா ரம் பண்ணி அழிச்சுப்புட்டு இப்ப ஆத்தா புண்ணியத்திலே அல் லுச் செல்லு இல்லாம ஊருக்கு மதிப்பா ஊறிக்கிட்டு வருறவரு —அங்காளம்மை ரதத் திருநாளையிலே அத்தனை பெருந் தலை களையும் ஒதுக்கிப்பிட்டு ஆத்தா இவரோட முதல் கூடனை ஏத் துக்கிட்டு வருற பெருமையிலே கண்ணுமண்ணு மட்டுப்படாம திரிஞ்சலையிறவரு, என்னை வந்து ரோசத்தை உதித்துப்புட்டுக் கூப்பிடுவாராங்காட்டி? ... நீங்க ஒண்ணு! ..." என்று எகத் தாளமாகப் பேசினுன் வீரமணி. வேட்டியின் புது ஜரிகை தங்க மாய் மின்னியது.

சின்னச்சாமி அம்பலத்துக்குச் சிரிப்பு வெடித்தது. "பொடி வச்சு நைத்தியம் பேசுறதிலே ரொம்பத் திரவிசாய் இருக்கீங் களே. கோபதாபம் இருக்கிறது சகஜம்தான். அதுக்காக முக நைப்புக்கு ஒருதரம் வந்து சாப்பாட்டுக்கு அழைச்சவரு, மறு தரமும் வந்து ஓங்களை விடாப்பிடியாய் அழைச்சா, அவர் குடியா முழுகிப்போயிடும்? ... இல்லாட்டி எம் பெஞ்சாதிக் கிட்டே அவர் சவால் விட்டிருப்பாரா? அவரோட பொண் ணும் சேர்ந்தில்ல என் சம்சாரத்தை ஏசியிருக்குது! ... எம்

பொண்ணை பொண்ணு பொன்னுத்தாளுக்கு மாப்புள்ளே கெடைக்கலேன்னு நாங்க அலமாறுருமாம். அந்தப் பொண்ணு சொல்லுதாம்! ... பெரிய அரிச்சந்திரர்னு, ஒசந்த தர்ம ராசான்னு ஆதியப்ப அம்பலத்துக்கு நெனேப்பு! "எனக்கு ஒரு அவப்பேரு உண்டாக்கிப் போடு, 'பார்த்திடலாம்'' னு சபதம் செய்யிருரு அந்த ஆம்பிளே! ... இவரோட முதல் சூடனே ஆத்தா ஏத்துக்கிடருளாம், அந்தப் பெருமை தாங்கலே இந்தக் கிழவனுக்கு! ... ஊம், இந்தச் சின்னச்சாமி அம்பலம் யாருங் கிறதை அந்த ஆத்தா திருவிழாக்குள்ளாவே காட்டிப்புடுறேன், அந்த ஆம்பளேக்கு! ..."

ஆத்திரம் கண்களில் குந்த, திண்ணே விரிப்பில் இருந்த பாக்குப் பொட்டலத்தைப் பிரித்து அதை அப்படியே எடுத்து வாயில் கொட்டிக்கொண்டு மென்ற சின்னச்சாமி, மறு விஞடி அதை அப்படியே துப்பினர்.

"என்னுங்க?"

"சனியன் மண்ணு கெடந்திருக்குது, பாக்கிலே!"

"தள்ளுங்க சனியனே. நீங்க கோபத்தை ஆத்திக்கிடுங்க. கைக்குக் கையாய் நான் ஒங்க அண்டலிலே இருக்கிறப்ப, நீங்க எதுக்கு தொண்டை காயப் பேசுறீங்க? ... அம்மான்காரரு என்னே மதிக்காமல், அந்தப் போக்கத்த மாணிக்கத்தை தூக்கலாய் நெனேச்சு வண்டியை அவனுக்குப் பயன்படுத்திக்கிட்டதுக்குச் செமத்தியாப் பாடம் படிச்சுக் குடுத்துப்புடுறேன்! ... அன்னேக்கு என்னே லேசாய் நெனேச்சுக்கிட்ட அந்த மனுசனுக்கு எலும்பிலே பித்தா, இல்லே ஈரலிலே பித்தான்னு ஒருகை பார்த்துப்புடுறேன்! ... மண்டை அகராதி, வாய்க் கொழுப்பு அல்லாம் எங்கிட்டவா செல்லுபடி ஆகும்? ... ஆத்தா சந்நிதிக்கு எதிர்த்தாப்பிலே நீங்க கட்டி முடிச்சிருக்கிற உங்க புது வூட்டுக்கிட்டே நேத்துச் சாமத்திலே நாம பேசிக்கிட்ட சங்கதிப்படி எனக்கு ஒங்களோட அந்தப் புது வூட்டைக் கிரயம் பண்ணிக் குடுத்துப்பிடுங்க! இந்தத் திருநாளேயிலே என்னேட முதல்

தீபத்தை ஆத்தா ஏத்துக்கிடச் செஞ்சுபுடுறேன்!... ஆத்தா ரதத்திலே புறப்பட்டவுடனே என்னோட வூடுதானே—ஆமாங்க, நீங்க எங்கிட்ட விற்கப்போற அந்த என் வூடுதானே இனி தலைப்பிலே இருக்கும்!... இதுமட்டுக்கும் இடை நடுவிலே வேறே வூடு வாசல் இல்லே! அந்தத் துள்ளலிலே அம்மான்காரரு முதல் கூடனே ஏத்தி வச்சுப் படைச்சுக்கிட்டு வந்தாரு! இனிமேப் பார்த்துக்கிடலாமே! இனிமே, தலைப்பு வூடாய் என்னோட அந்தப் புது வூடுதானே ஆகப்போகுது? ஆனபடியாலே, ஆத்தா ரதம் புறப்பட்டடியும், தலைப்பிலே இருக்கிற என் புது வூட்டு முதல் தீபத்தைத்தானே ஆத்தாள் ஏத்துக்கிடவேணும்?, இதுக்கு மாறு ஏதானும் நடந்தா, அப்பவே வெட்டுப் பழி குத்துப் பழிதான்! வன்மம் பட்டிடுச்சுதின்னு, அப்பறமா யாருமே எனக்கு ஆனைக் கொம்பு இல்லே! ஊம், அப்பறம் ஊர்ப் பஞ்சாயம், ஆறு கரைப் பேச்சு, எட்டு ஊர் கார்வாரு—ஏதுதான் வரட்டுமே! பார்த்துக்கிறேன், ஒரு கை!... ஆதியப்ப அம்பலத்துக்கு ஒரு புத்தி கற்பிக்காம ஓயமாட்டேன். அவருக்கு ஒரு அவப்பேரை நானே உண்டாக்கிக் காட்டுறேன்!... ஆவணி பொறந்ததும், சுருக்கிலேயே அந்த வூட்டை எனக்கு நீங்க கிரயம் பண்ணிக் குடுத்துப்புடுங்க! அதுக்கு ரூபாய் ஏழாயிரத்து ஐநூறை உங்க இஷ்டப்படியே சுளையாய்க் கொடுத்துப்புடுறேன்! அப்புறம் பாருங்க கதை திரும்புறதை...அதுக்கப்பாலே நீங்க கேட்டுக்கிட்ட சம்பந்தம் சாடிக்கையை முடிச்சுக்கிடலாம்! அப்பாலே அம்பலகாரருக்குப் புரிஞ்சுடும் இந்த வீரமணியோட சுயரூபம்... உப்புப் போட்டுச் சோறு உண்ணவராயிருந்தாக்க, அந்தடியும் நாக்கைப் புடுங்கிக்கிட வேணும்... இல்லே, கழுத்திலே சுருக்குப் போட்டுக்கிட்டு நாண்டுக்கிடணும்... பொறக்கட்டும் ஆவணி! என்ன ஆகிறார்ன்னு பார்க்கிறேன் அந்த ஆம்பிளையை."

வீரமணி இள மீசைமீது கைபோட்டு வீராப்புடன் முழக்கினான்.

சின்னச்சாமி விண்ணில் மிதந்தார்.

அடுத்த கைநொடிப் பொழுதிலே, பலமாகக் கனைத்துக் கொண்டே, கம்பீரத்தோடு தோன்றினார், ஆதியப்ப அம்பலம். ஒருமுறை வீரமணியையும் சின்னச்சாமி அம்பலத்தையும் பொறுமையுடன், பதறுமல் அளந்து பார்த்தார். பிறகு, நரை முடி திகழ்ந்த குடுமியை முடிந்துகொண்டார். வெளுத்த மீசையை மேலும் முறுக்கி விட்டுக் கொண்டார், அவர், வில்லாதி வில்லன் சேர்வையை ஒப்ப, ராஜ கம்பீரத்துடன் இருவரையும் மீண்டும் பார்த்தார்.

## 11 நல்ல விளக்கு ஏற்றினுள்

வீரமணி மாப்பிள்ளை முறுக்குடன் 'முறைப் பாட்டுக்காரன்' போன்று அகம்பாவத்தோடு திண்ணைச் சாய்மானத்தில் சாய்ந்திருந்தான்.

சின்னச்சாமியைப் பேய் அடித்துவிட்டதோ? குனிந்த தலையை நிமிர்த்தவில்லை, அவர்.

"மாப்...... வீரமணி, உங்க வீராப்புப் பேச்சு முடிஞ்சிருச்சா? இன்னம் அஞ்சாறு பேசப்புடாதா?—இந்தச் சகுனிக்குக் கும்மாளமாயிருக்குமே?..." என்று தொடங்கினுர், ஆதியப்ப அம்பலம். தன்னை முறைத்துப் பார்த்த சின்னச்சாமியை பதிலுக்கு முறைத்துப் பார்த்துவிட்டு, "சின்னச்சாமி, நீ முண்டினியோ, நாந்தான் ஒனக்கு எமன்! ... ம்..." என்று ஓங்காரமாகச் செப்பினுர். பிறகு மீண்டும் வீரமணியின் பக்கம் திரும்பினுர்.

"வீரமணி, இப்ப ஒங்களுக்குச் சொல்லுறேன். அறிஞ்சு கெட்டானும் ராவணன்; அறியாமக் கெட்டானும், துரியோதனன். அந்தக் கதையிலே இருக்கு இப்ப ஒங்க நடப்பு! ... எத்தனையோவாட்டி ஒங்களுக்குப் படிச்சுப் படிச்சுக் குடுத்தேன்,

ஆளுங்களை இனம் கண்டுக்கிட்டுப் பழகுங்கன்னு. மாமனுக்கும் மாப்புள்ளேக்கும் சண்டை மூட்டி விட்டுப்புட்டு வேடிக்கை பார்க்கிற நாசமாப்போற ஊரு இதுன்னு எச்சரிக்கை குடுத் தேன்... எதையும் நீங்க கேட்டுக்கிடலே. இப்ப விசயம் முத்திப் போச்சு. நீங்களே வேணும்னு முத்த விட்டுப்புட்டீங்க. இனிமே வெள்ளம் தலைக்கு மேலே சாண் போனா என்ன, முழம் போனா என்ன?... இப்ப நீங்க என்னா சொல்லுறீங்க?... புதுசா வீடு வாங்கிக்கிடுங்க; ஒங்க ஆசைப்படியே உங்க முதல் தீபாராத னையை ஆத்தாகிட்டே சொல்லி ஏத்துக்கிடச் சொல்லுங்க. அது எனக்கும் பெருமைதானே... ஆனா ஒண்ணு; இந்தக் கிழ வன் உசிர் உடம்பிலே ஒட்டியிருக்கிற அறிதிக்கு உங்களை அச லான் எவனும் மாப்பிள்ளையாக்கிக்கிட ஏலவே ஏலாது. அதுக்கு விடவும் மாட்டேன். ஆமாங்கிறேன், ஆமா! ... ஒங்களுக்கு புது ரத்தம்... அதாலேதான் வாய்கொண்ட மட்டுக்கும் மட்டி லாமப் பேசிப்புட்டீங்க. நீங்க எம் மாப்புள்ளை... அது கெடக் கட்டும். நீங்க என்னோட தமக்கையார் மகன்... நான் தோளிலே போட்டு வளர்த்த கண்ணு நீங்க... உங்களுக்கு என்னைத் திட்டு றதுக்கு உரிமை இருக்கு. ஆனா, ஒரு மூணாம் மனுசன்கிட்டே சொந்த அம்மானை ஏசுறேமேங்கிற நல்ல புத்தி ஒங்களுக்கு இருந்திருக்க வேணும்.. பரவாயில்லே, என் பொண்ணான பொண்ணு அன்னத்தோட நல்வாழ்வை நெனைச்சு, அல்லாத்தை யும் சுத்தற மறந்துப்பிட்டேன். இம்புட்டு நேரமாய் கொதிச்சுக் கிட்டிருந்த கோபம் சாடாவையும் ஆத்திக்கிட்டேன். கோபம் அடங்கி, வெறி தணிச்சப்பாலேதான் இப்ப இங்கிட்டு வந்தேன். வாங்க நம்ம வூட்டுக்கு... நாத்து நடவுக்குச் சாமி கும்பிடு றோம். வந்து அதிலே கலந்துக்கிடுங்க... மாப்புள்ளைன்னா கோப தாபம் வரத்தான் வேணும். வாங்கங்கறேன் மாப்புள்ளே! ..."

அன்பின் செறிவுடன், பாசத்தின் பரிவுடன், கடமையின் கண்ணியத்துடன், தர்ம நியாயத்தின் கட்டுப்பாட்டுடன் வேண்டி னார், ஆதியப்ப அம்பலகாரர்.

வீரமணி எழுந்தான். எச்சிலைக் காறித் துப்பிவிட்டு சிக ரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

இந்த அவமரியாதையை ஆதியப்ப அம்பலகாரரால் ஏற் றுக்கொள்ள இயலவில்லை; பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டார். ரத்தப் பசையற்று இருந்த கண்களில் ரத்தம் கூட் டிக் கொண்டது.

“மாப்புள்ளைங்கிற சொந்தம் இன்னிக்குத்தான் தோணு தாங்காட்டி? ... அன்னைக்கு எனக்கு வண்டி இல்லேன்னு சொல் லுறப்ப தோணலையே! செல்லாக் காசுக்கு வழியத்த அந்த மாணிக்கம் பயல்தானே அன்னிக்கெடுவுக்கு ஓங்களுக்கு ஒசந் திருந்தான். அந்தத் தரிசுக்கே ஓங்க பொண்ணை பொண்ணைக் கட்டிக் குடுத்துப்போடுங்க. போங்க; வீணு எங்கிட்டே வாங் இக் கட்டிக்கிடாதீங்க! ... ஆமா, அப்பறமும் என் வீட்டு வாச லிலே வெட்கமில்லாம நின்னிங்களோ, மரியாதை கெட்டுப் போயிடும்!”

வீறுகொண்டு, ஆணவச் செருக்குக் கொண்டு கத்தினன் வீரமணி. தாராடி சாமிபோல கண்கள் ரத்த வெறி கொண்டிருந் தன.

“டேய்,... என்ன சொன்னேடா? ...” என்று உக்கிரம் பூண்டு கர்ச்சித்தவண்ணம், வீரமணிக்கு எதிரில் போய் நின்றார், ஆதியப்ப அம்பலகாரர். பற்களைக் கடித்தவாறு, கோபத்தைக் கட்டுப்படுத்த எத்தனம் செய்து கொண்டிருந்தார்; கூடவில்லை. தோள் துவாலை நழுவியது.

அதற்குள் வீரமணி, சிகரெட்டை வீசிவிட்டு, ஆவரஞ் செடிக்கு அருகில் கிடந்த கழியைக் கையில் எடுத்துக் கொண் டான். “இன்னம் புரியலையா? இப்ப புரிஞ்சுடப்பிடும்” என்று உறுமிக்கொண்டே கைக் கழியைச் சுழற்ற முயற்சி செய்த அந் நேரத்தில், தன்னுடைய கைக்கழி அப்பால் வீசியெறியப்பட்டு விட்ட சங்கதியைப் புரிந்துகொண்டு, காட்டுப் புலியாகச் சீறிக் கொண்டு தலையை உயர்த்தினன், அவன்.



"என்னுடை அப்பன்காரவுக ஒடம்பிலே ஒங்க கழி பட்டிருந்தா, ஒங்க கையை ஒடிச்சு இருப்பேன்!," என்றாள் அன்னம்.

அன்னக்கிளி சிலம்பக் கம்பும் கையுமாக அனல் தெறிக்க நின்று கொண்டிருந்தாள். "தன் உசிரைக் கொடுத்து என் உசிரை வளர்த்த எம்புட்டு அப்பன்காரக மேனியிலே ஒங்க கழி பட்டிருந்தாக்க, ஒங்க கையை அப்பவே ஒடிச்சுப் போட்டிருப்பா, இந்த அன்னம்! ஆமா! ... ஒங்க நல்லகாலம் ஒங்க மானம் கப்பலேறுமத் தப்பிடுச்சு! ... இப்பவுந்தான் சொல்லுறேன். எங்க குடும்ப மானத்தை யாரும் எப்பவும் குலைச்சுப்புட முடியவே முடியாது... குடியின்னும் கூத்தியின்னும் சுத்தி அலைஞ்சு, குடிகெடுக்கிற சகுனியோடவும், அடுத்துக் குலைக்கிற கூனியோடவும் சேர்ந்து நீங்க ஏமாளியாகிக்கிட்டுக் கிடங்க. ஒங்க வண்டவாளத்தை எனக்குத் தெரியாம எங்க அப்பன்காரவுகளும், எங்க அப்பன்காரவுகளுக்குத் தெரியாம நானும் காப்பாத்திக்கிட்டு வந்த புண்ணியத்துக்கு நெசமாவே நல்ல பாடம் சொல்லிக் கொடுத்துப்புட்டீங்கதான். மேள தாளத்தோட யார் வூட்டு மாப்புள்ளேயாய் வேணும்னாலும் போங்க. சிங்கப்பூர்ச் சிங்காரியையும் வேணும்னாலும் அழைச்சிக்கிட்டு வந்து கும்மாளம் போடுங்க... போங்க! ..."

அன்னக்கிளி மறக்குல வீரம் கொழிக்கப் பேசினாள். கச்சை கட்டிப் பேசினாள்; உள்ளம் துடிக்கப் பேசினாள்; உதடுகள் துடிக்கப் பேசினாள்; உடல் துவளப் பேசினாள். முன்றானையை இடுப்பில் செருகிக்கொண்டாள்.

வெம்புலியாகப் பாய்ந்த வீரமணி, வெஞ்சினம் வெடிக்க அன்னக்கிளியை நோக்கிக் கைக்கழியை ஓங்கி வீசினான், "சீ, நாயே!" என்று உறுமலே வீசியவண்ணம்.

கழி அன்னத்தின் மண்டையைச் சாடியது.

ரத்தம் பொங்கிப் பொங்கி வழிந்தது!,

அன்னக்கிளிக்குக் கிறுகிறுத்தது.

"ஆத்தா! ..."

கதறி ஓடி மகளைத் தாங்கிக்கொண்டார், ஆதியப்ப அம்பலம்; கண்ணீர் ஆறாக வழிந்தது. ரத்தத்தோடு ரத்தமாக ரத்தக்

கண்ணீர் கலந்து வழிந்தது.

அருமைத் திருமகளைத் தம் மேனியில் சாத்தி இடது கையால் அணை கொடுத்துக் கொண்டு, கீழே கிடந்த சிலம்பக் கம்பை காலால் தூக்கிப்போட்டுக் கையில் பற்றிக் 'குறி' வைத்து வீரமணியை நோக்கிச் சாடப் போனார்.

அவர் கையில் இருந்த கழியைப் பறித்தாள் அன்னக்கிளி "அப்பா, ஒங்களைக் கையெடுத்துக் கும்பிடுறேன். ஆயிரம் தவ சல் ஆனாலும், அவுக எனக்கு அயித்தை மவன். அவுக மேலே நான் உசிருக்குசிராய் இருந்த பாவத்துக்காக நீங்க அவுகளை ஒண்ணும் செய்யாதீங்க... கையிலே 'லாகு' கொடுத்து சிலம்புக் கம்பை நீங்க எடுத்துச் சுழற்றி வீசினீங்கன்னு, தன் உசிர் மானத்துக்குப் பறிஞ்சிடுமிங்கிற துப்பு அவுங்களுக்குத் தெரியாது போல!... அவுங்களைச் சமிச்சுப்புடுங்க. விரலே கண்ணைக் குத்திப்புட்டா, அதுக்காக விரலை வெட்டிப்புடலாமா?.. எம் மண்டை ரத்தம் வழியட்டும். நீங்க துடைக்க வேணும் எம் மச்சான் மேலே நான் வச்சிருந்த அந்தநேசத்துக்கு—அவுகளே சதம்னு தவசிருந்த அந்தப் பாசத்துக்கு ஒரு ஞாபகார்த்தம் வேணுமில்லே! ... வாங்க, போவோம்!," என்று செறுமினாள், அன்னம். குரலில் கண்டிப்பு இருந்தது.

விழுந்தடித்துக் கொண்டு வேர்க்க விறுவிறுக்க ஓடோடி வந்தான், மாணிக்கம். "ஐயோ, அம்மான் மகளே!" என்று கதறி, தன்னுடைய வேட்டியின் தலைப்பைக் கிழித்து அன்னக்கிளியின் ரத்தத்தை துடைத்தான். நெற்றியில் உறைந்துவிட்டிருந்த உதிரத் துளிகள் அவன் கண்ணீர் பட்டுக் கரைந்தன. அவனுடைய மண்டைக் கட்டுத் துணி நழுவத் தொடங்கியது.

மாணிக்கத்தின் அன்புப் பணிக்குத் தாழிட முடியாமல் கண்டுண்டிருந்தாள் அன்னம். அன்பின் முதிர்வில் விழிகள் நிறைய மூச்சைப் பிடித்துக்கொண்டு மெல்ல எழுந்தாள் அவள். அருகில் செருமலுடன் நின்ற மாடு மேய்க்கும் சேரிச் சிறுமி வைத்திருந்த ஒரு மூட்டையை ஏந்தினாள். பிரித்தாள். வீரம

அனுப்பியிருந்த பட்டுக் கண்டாங்கி முதலிய துணிமணிகளும், அவள் கையால் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நல்ல நாளுக்காகக் காத்திருந்த வீரமணியின் வேட்டி சட்டையும், பல வகை நாடாக்களும், அந்தக் கண்டசரமும் வாசனைப் பொருள் வகைகளும், மிச்சமிருந்த சுருக் கருவாடும், வீரமணியின் கடிதமும், இனிப்புச் சாமான்களும் காட்சி கொடுத்தன. அவற்றை எடுத்து வீரமணியின் முன்னே வைத்தாள். "சரி பார்த்துக் கிடுங்க! ... ஒங்களுக்கு இனிமே நாங்க ஒண்ணுமே குடுக்க வேண்டியதில்லே! ... அல்லாரும் சாட்சி!" என்று அதே வீரத் தோடு சொன்னாள். சொல்லிவிட்டு நடந்தாள். "வாங்க அப்பா, போவலாம்! ... வாங்க அயித்தை மகனே!" என்று வேண்டி அழைத்தவண்ணம் நடையைத் தொடர்ந்தாள், அன்னக்கிளி. கை வளைகள் குலுங்கின; கால் சிலம்புகளும் குலுங்கின. கழுத் துச் சங்கிலி ஒளிர்ந்தது.

ஆதியப்ப அம்பலமும் மாணிக்கமும் நகரலாயினர்.

வீரமணி சிலையானான்.

"இன்னியத் தேதி வரை இப்பிடிப்பட்ட ஒரு அதிசயம் இந் தப் பதினாறு சுற்றுவட்டாரக் கிராமத்திலே நடந்து நான் கேட் டதுகூட இல்லே! ... ஆத்தாடி, நம்ம அன்னக்கிளியோட கோபத்தையும் அன்பையும் கையெடுத்துக் கும்பிட வேணுமின்னு நல்ல மனசிலே ஓடுது! இல்லையா, காந்திமதி ஆத்தா?" என் றள், அகிலாண்டத்தின் தாய்.

"ஆமா, ஆமா!" என்றாள் காந்திமதியின் அன்னை.

வீரமணி பொறுப்பானா?

"சரிதான், அல்லாரும் போங்க நல்ல மாயத்தோடே!" என்று இறைச்சல் போட்டான்.

"இந்த ஆளு ஒங்களுக்கு ஒரு மண்டகப்படி நடத்திக் காட் டற வரைக்கும் இந்த எடத்தை விட்டு நகள மாட்டேங்க பாவே! ... சரிதான், வாங்க அப்பா! ... இதுமாதிரி அசம்பாவிதம் எனக்குப் புடிக்காதுங்க, அப்பா!" என்று அலட்டினான்.

பொன்னுத்தா. அவள் பார்வை நிட்டூரமாக வீரமணியைச் சாடி விட்டிருந்தது.

அசடு வழிய எழுந்தார், சின்னச்சாமி. "வீரமணி, நீங்க திடமாயிருக்கோணும். பொண்ணு ஒருவகைப்பட்டது. கோவிச்சுக்கும். நாம நாளை ராவுக்குச் சந்திச்சுக்கலாம்" என்று சன்னக் குரலெடுத்துச் சொல்லிவிட்டு நடந்தார். 'குடைக் கம்பை' மறந்துவிடமாட்டார் அவர். அர்த்த ராத்திரியில் குடைப் பிடிக்க வேண்டாமா?

இப்போது வீரமணியைச் சுடுகாட்டு அமைதி விழுங்கிக் கொண்டேயிருந்தது.

தாய் வீட்டில் நல்ல விளக்கு ஏற்றி வைத்தாள், அன்னக்கிளி.

குனிந்து விளக்கை வைத்துவிட்டு நிமிர்ந்தாள். புண் வலி நெற்றிப் பொட்டில் அண்டல் கட்டியிருந்தது. 'ஆத்தா!' என்று பல்லைக் கடித்துக்கொண்டாள். மாராப்புச் சேலை பிசகிக் கிடந்ததை அறிந்து செம்மைப்படுத்திக் கொண்டு நின்றாள். தளிர்க் கரங்கள் குவிந்தன. குவிந்த கரங்களில் பக்திப் பண்பு இருந்தது. விரிந்த மனத்தில் 'ஆத்தா' விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் விளையாடக் கேட்கவா வேண்டும்?

'ஆத்தா, ஏதுக்கு இப்பிடி விளையாடிட்டே?... அந்த மச்சான்காரர்—ஊகூம், அந்த அயித்தை மகனாலே எங்க அப்பாருக்கு எம்புட்டு அவகேடு வந்திருச்சு!... எப்பிடி இந்தக் கஷ்டத்தைத் தாங்கிக்கிடப் போறாரோ இந்தத் தள்ளாத காலத்திலே!... நான் நடந்துக்கிட்டது குத்தமா ஆத்தா!... பேசு மூத்தவளே... பேசு!... அயித்தை மகன் எம்புட்டோ பேசிப்புட்டாராம். ஒனக்கு மட்டும் பேசத் தெரியலையே?... அப்பாரு கொடுத்த உசிர் இது. அவுகளுக்கு ஒரு மானக் குறைச்சலின்னு நான் பொறுக்க ஏலுமா? சொல்லு தாயே!... சொல்லு!... ஊராருங்க என்னைத் தூக்கி வச்சுப் பேசிக்கிடுறாங்களாம்

அதுக்காகவா நான் அப்பிடி நடந்துக்கிட்டேன்... என்னோட அப்பன்காரவுகளை மதிக்காதவங்க—மதிக்கத் தெரியாதவங்க—மதிக்க ஒப்பாதவங்க எனக்கு கால் தூசிக்கு சமதை!... இல் லியா ஆங்காளம்மை!... அல்லும் பகலும் அறுபது நாழிகை புமா 'மச்சான், மச்சான்' னு பாட்டுப் பாடிக்கிட்டிருந்த எனக்கு, அந்த மச்சான் கொடுத்த கம்பு வீச்சு வலிக்கல்லே. ஆனா அவுக கேட்பார் பேச்சைக் கேட்டுக்கிட்டு கெட்டலைஞ்சு, எங்க அப்பன்காரரை ஏசிப் பேசி, மனந்துணிஞ்சு கைநீட்ட நினைஞ்சாங்களே, அந்த வலிதான் எம் மண்டையைப் போட்டு உடைச்சுக்கிட்டு இருக்குது. எப்ப எங்க வூட்டுக்கு அந்த மயித்தை மகன் சாப்பிட வரலியோ, அப்பவே நான் முடிவு செஞ்சுக்கிட்டேன், கதை மாறிப்போயிடும்னு. அப்ப வெறுத் துச்சு, எனக்கு சோறு தண்ணியும். நான் இனி கடைத்தேற ஏய்க்காது... ஆனா, என்னோட அப்பாரை நெனைச்சாத்தான் மனசு தேறலை? அவுங்க... மெய்யான ரோசக்காரவுங்க. மானத்துக்குப் பயந்தவுங்க. போலிக் கவுரவத்துக்கும் வீண் பெருமைக்கும் ஆசைப்படாதவுங்க. அவங்களை நல்லபடியாக் காப்பாத்திடு, ஆத்தா. இந்த ஒரு நல்ல காரியத்தையாச்சும் செய்யத் தெரியுமா, ஒனக்கு?...'

வெள்ளக்காடாய் விழி வெள்ளம் பெருக்கெடுத்தது. நெஞ் படபடப்பு ஒழுங்குபடவில்லை.

"ஆத்தா!" என்று அலறித் துடித்துக்கொண்டு வந்தார், ஆதியப்ப அம்பலம்.

சமைந்த கன்னி சிலையாய் சமைந்து நின்றாள்.

"ஆத்தா..."

அவள் ஏறிட்டுத் திரும்பினாள்.

ஆதியப்ப அம்பலம் பச்சைப் பாலகனைப் போல செருமிக் கொண்டிருந்தார்.

தந்தையின் கண்ணீரைத் துடைத்தாள், மகள்.

"என்னாலே உங் கண்ணீரைத் துடைக்க ஏலலையே,

ஆத்தா? ஆத்தா அன்னம், நான் தப்புப் பண்ணிப்புட்டேனு? சொல்லு எங் கண்ணே. ஒன் அப்பன் எம்புட்டோ பொறுமை யாத்தான் இருந்தான்; அந்தப் புள்ளேயைப் பயமுறுத்துறதுக் காக அதுக்கு முன்னே போய் நின்னு 'என்ன சொன்னேடா?' என்று கத்தினேன். அதுக்காக இவ்வளவு வயசான பழுத்த கிழ வனே கம்பை ஓங்கி வந்திட்டுதே வீரமணி?... அது புத்தியிலே இப்பிடிச் சனி புகுந்திடும்னு கனுக்கூடக் காணலியே ஆத்தா... எனக்குண்டான மனசுக் கஷ்டத்தை நான் மறந்துப்புட ஏலும். அது எங்க அக்கா பெத்த தங்கம். ஆனு, அந்தத் தங்கம் இந்தத் தங்கத்தை அடிச்சுப் போட்டுப்பிட்டதைத்தான் ஆத்தா, என் னுலே ஆத்திக்கிடவே ஏலலே. ஆத்தா அங்காளம்மையே கோபக் காரியா வந்தாப்பிலே நீ உரு மாறினதை என் ஆயுசுக்கு மறக்க ஏலாது தாயே!... 'இந்த மாதிரி மகளுக்கு நீங்க அப்பனு யிருக்க வாய்க்கிறதுக்கு நீங்க தவகோடி பண்ணியிருக்கோ னும், அம்பலகாரரே!' அப்படின்னுதான் புகழுறுங்க... ஆனு, இப்ப உன்னுேட கண்ணீரைக் காணுறதுக்கு எனக்கு சத்துக் கூடிவரலேயே அன்னம்?... ஆவணி எப்ப பொறக்குமின்னு தவசு பண்ணிக்கிட்டு இருந்தேனே!... தாயில்லாப் பொண்ணு உன் னுேட கண்ணுலத்தை உம் மனசுக்குப் பிடிச்ச மச்சானுேட நடத்தி வச்சுப்பிட வேணும்னு பூரிச்சு, அந்தப் பூரிப்பிலே என் னுேட உடம்பு நலிவைக்கூட மறந்திருந்தேனே... உன் மூஞ் சியை ஏறெடுத்துப் பார்க்கவே எனக்குக் கையுங்காலும் உதறல் எடுக்குதே ஆத்தா!..."

அம்பலகாரர் விழி நீர் புரள, தம் மகளின் கைகளேப் பற் றித் தம் கன்னங்களிலே அடித்துக்கொண்டே விக்கி விக்கி அழு தார்.

"அப்பா, அப்பா!" என்று பதறித் துடிதுடித்துத் தன் கைகளே விடுவித்துக் கொண்டாள், அன்னம். மறுமுறையும் தன் தந்தையின் கண்ணீரைத் துடைத்தாள், மகள். "அப்பா, மறு

கடுத்தும் நீங்க அழுதீங்கன்னு, நான் நெஞ்சு வெடிச்சுச் செத்துப் போயிடுவேனுங்க அப்பா!," என்று ஓலம் பரப்பினுள், அன்னக்கிளி.

"ஐயையோ, தெய்வமே!"

அலறின அம்பலகாரர் அடுத்த கணத்தில் தன் கண்களைத் துடைத்துக்கொண்டே, "ஆத்தா அன்னம், அப்பிடிப்பட்ட திக்கின அவச்சொல்லை மட்டும் இனியும் ஒருவாட்டி சொல்லாதே, ஆத்தா! ஒனக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்கும். இந்தக் கிழவனை பெரிய மனசு பண்ணிக் காப்பாத்து தாயே!" என்று புதல்வியை நோக்கிக் கரம் குவித்தார், பெரியவர்.

"அப்பா! ..." என்று கூக்குரலிட்டாள் அன்னம்.

"ஆத்தா!" என்று விளித்து அவளுடைய கண்ணீரைத் தம் கைகளால் துடைத்துக்கொண்டே, "ஆத்தா நீ நில்லு. நான் ஓடிப்போய் உம் மச்சானைக் கெஞ்சிக் கூத்தாடி அழைச்சுக்கிட்டு ஓடியாரேன்! ... நீ இங்கிட்டே இரு, ஆத்தா!" என்று சொல்லிக்கொண்டே கிளம்பப் போனுர், அம்பலம்.

அன்னக்கிளி தடுத்தாள். "நீங்க போகப்புடாதுங்க அப்பா!] என்னோட மச்சானை நான் மறந்துபுட்டு எம்புட்டோ நாழிகை ஆயிடுச்சு. நீங்க நில்லுங்க இங்கணேயே! ... ஏனத்துச் சோறு, மெழுகின தரையிலே கொட்டினு அசிங்கிதம் தட்டாம அள்ளிச் சாப்பிடலாம். புழுதியிலே சிந்தினு, அப்பிடிச் சாப்பிட ஒப்புமா? ... நீங்க போகவேபுடாது. இந்நேரம் நான் கண்ணு கலங்கினதெல்லாம் எனக்கோசரம்னு நெனைக்கிறீங்களா? சாமி சத்தியமா இல்லே! நான் பட்ட கவலையும் வடிச்ச கண்ணீரும் ஓங்களுக்காகத்தான்; ஓங்களை அந்த அயித்தை மவன் இப்பிடி திட்டூரம் செஞ்சுப்புட்டாங்களேன்னுதான் அழுது துடிச்சேன்!] ஆத்தா ஆணையான தாக்கல் இது! ..." என்று வேதனை வெடிக்கச் சொல்லி நிறுத்தினுள், அவள்.

அப்படியே மலைத்துப்போய் நின்றுவிட்டார் அம்பலம்,

குதிரைமீது சிலையாய் நிற்கும் கறுப்பர் கோயில் ஐயனுர் மாதிரி.

அன்னம் முகத்தை அலம்பிக்கொண்டு வந்தாள். விபூதி மடலில் இருந்து நகக் கண்ணுல் திருநீறு எடுத்து நெற்றியில் பூசிக்கொண்டாள். நெற்றியை மறைத்த காரத் துணியை ஒதுக்கினுள் குங்குமம் ஒளிர்ந்தது. காதடியில் அப்பியிருந்த மஞ்சள் கோலம் இன்னமும் அச்சுக் குலையாமல் இருந்தது. பொங்கல் பானையில் இருந்த போன வருஷத்திய சம்பா நெற் கதிர்களை அலுங்காமல் குலுங்காமல் எடுத்து வைத்தாள். விதைநெல் நிரம்பிய தாழியை நகர்த்தி மையம் பார்த்துச் சமன் செய்தாள். ஆனி முதல் நாளில் 'படைத்து' நாற்றங்காலில் விதை பாவிய நெல் போக மிகுதி இருந்தது அவ்வளவுதான்! விளக்கைத் தூண்டிவிட்டாள். 'புது நாற்றுப்பிடி' அடங்கிய முட்டி கம்பீரமாய் விளங்கிற்று.

சுடர் தெறித்து எரிந்த நல் விளக்கின் ஒளியில் சம்பா நெற் கதிர்கள் தங்க ரேக்குப் பெற்று விளங்கின. தங்கச் சம்பா நெல் மணிகள் அவள் பார்வைக்கு விருந்து வைத்தனவோ? 'போன வருஷம் தைப் பொங்கல் வைக்க அறுத்தாந்த நெல்லுக் கதிருங்க எப்படி அச்சுக் குலையாம இருக்குதுங்க? அதானே இந்த நெல்லுமணிகளோட பெருமை! அதானே இந்தத் தங்கச் சம்பாவோட அருமை!... மண்ணிலே தங்கம் விளைகிற இந்த மகிமைதானே ஆத்தாளோட கருணை!... ஆத்தா!'

"சாமி கும்பிடுங்க அப்பா" என்று மகிழ்வுடன் கூறிய அன்னம், "குளமங்கலத்து அயித்தை மகனையும் காணலேயே... எங்கிட்டுப் பறிஞ்சாங்க?" என்றுள்.

அவள் கேட்டு வாய் மூடவில்லை.

அங்கு வந்து நின்றுன் மாணிக்கம். முகம் சாம்பிப் போயிருந்தது.

"எங்கே போனீங்க?" என்று கேட்ட அம்பலம், மாணிக்கத்தின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார். அவன் கன்னங்

களில் கை விரல்கள் அழுந்திப் பதிந்திருந்தன. "என்னுங்க இதெல்லாம்?" என்று பதறினர்.

"ஒண்ணுமில்லேங்க. வீரமணியை எப்பாடுபட்டும் அழைச் சுக்கிட்டு வந்திடணும்னு போனேன். கிடைச்சது இந்த அறை களும் அவதூறுப் பேச்சும் ஏச்சும்தானுங்க!... அன்னத்தோட மனசுக்கு நிம்மதி உண்டாக்கிப்புடணும்னு ஓடினேன். நான் நினைச்சது நடக்கலே. வீரமணி நினைச்சது நடந்திருச்சு. அன்னத் துக்கு அஞ்சி, மறு பேச்சாடாம திரும்பி வந்திருக்கேன்!..."

மாணிக்கம் பொறுமையுடன் நின்றான்.

"என்ன தீவினைக்கு அந்த ஆம்பிளேக்கு இப்பிடியெல்லாம் படுத்தடி செய்யத் தோணுதோ, மட்டுப்படலேயே?... என் னுலே இவங்களுக்கு வேறே மனக் கஷ்டம்!... வாங்க சாமி கும்பிடலாம். அப்பா, பத்து நாழிகை வந்திருக்குமே. மணி அடிங்க. பார்த்திங்களா, தேங்காயை உடைக்கலே!... உடை யுங்க..." என்றாள் அவள், தாழ் குரலில்.

சூட தீபாராதனை நடந்தது.

கூப்பின கைகள்.

நாற்று நட்டு, நெல் விளைந்து, கதிர் அறுத்து, போர் அடித்து, நெல் தூற்றும் கண்கொள்ளாக் காட்சி அவர்களின் மனக் கண்களிலே அழகாக ஓடியதோ?

படி அளக்கும் தெய்வத்தை நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கி எழுந்தார், ஆதியப்ப அம்பலகாரர். விபூதி மடலை எடுத்து மாணிக்கத்துக்குத் திருநீறு கொடுத்துவிட்டு, மகளை நெருங்கி, "இப்பிடி வா, ஆத்தா!" என்று கூப்பிட்டு, "மகராசியாய் இரு, ஆத்தா! ஆத்தா ஒனக்கு ஒரு குறையும் வைக்கமாட்டா. ஆத்தா!..." என்று வாழ்த்தி, அவள் நெற்றி யில் நீறு பூசினர். அவருடைய கைகள் ஏன் அப்படி நடுநடுங் கின?

அன்னம் விரக்திப் புன்னகையுடன் நின்றாள். கண்ணின் கரு

மணிகளில் ஈரம் தேங்கியது. அவள் பார்வை மாணிக்கத்தின் திசைக்குச் சென்று நிலைத்தது.

மாணிக்கம் உணர்ச்சிவசப்பட்டு நின்றான்.

"அயித்தை மவன்காரருக்கில்ல! ... எனக்காக நீங்க அடியும் ஏச்சும் வாங்கிக்கிட்டீங்களே! ... நாங்க படுற மனக்கிலேசம் போதாதின்னு ஒங்களுக்கு வேறே சங்கட்டமா? ... எனக்காக நீங்க அல்லாத்தையும் சமிச்சுப்பிடுங்க! ... இதுக்கு மிஞ்சி ஒங்களுக்கு வேறே சமாதானம் சொல்லத் தெரியலே எனக்கு. நான் சின்னவதானுங்களே!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னாள், அன்னம்.

"அன்னம், ஒன்னை நெனைச்சுத்தான் எனக்கு ஆறலே... ஒனக்காக நான் எந்த அவமானத்தையும் சகிச்சுக்கிடுவேன். என்னைப் பத்தி நீ விசனப்படாதே, அன்னம்! ..." என்றான் மாணிக்கம்.

அன்னம் மனம் கலங்கி நின்றாள்.

மாணிக்கம், அம்பலத்தை நோக்கினான். "நாம புறப்படலாமுங்களா? பதினைஞ்சு நாழி வரைக்குத்தான் நல்ல பொழுது இருக்குதாம். அதுக்குள்ளாற நாத்துப் பறிக்க ஆரம்பிச்சுப்புடணுமுங்க அம்மான்! வேலை ஆளுக நம்மளுக்காகக் காத்துக் கெடப்பாங்க, வயலோரத்திலே!" என்று கூறினான் அவன்.

அப்போது, சர்வோதயக் கூட்டுப் பண்ணைத் தொண்டரான சாந்தலிங்கம் சாந்தம் கெட வந்து மாணிக்கத்திடம் ஏதோ காதில் ஓதினார்.

"அப்படிங்களா?" என்று மாணிக்கம் அடங்காப் பதட்டத்துடன் கேட்டுவிட்டு, அன்னமும் அவள் தந்தையும் ஒதுங்கி நின்றதை அறிந்துகொண்டு, "அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரன் போன தடவை வந்து ஊரைப் பேதலிக்கச் செஞ்சது போதாதின்னு, இப்பவும் வந்திருக்கானா? ... என்ன அனர்த்தத்துக்கு இப்ப வந்திருக்கானோ, தெரியலையே! ... அவனாலே யோகம் அடைஞ்ச புள்ளி சின்னச்சாமி அம்பலம். ஆனா, மத்தப்

பேருங்க பட்ட தொல்லேக்கும் அவன்தானே காரணம்? ஆசைக்கு ஓர் அளவில்லேன்னு சும்மாவா பாடிஞங்க? சரிங்க...வந்து..." என்று தொடங்கி மிகுதிப் பேச்சை அவர் காதுகளில் மெல்லக் கூறினன், மாணிக்கம். "நடவு வேலேயை ஆரம்பிச்சு வச்சுப்பிட்டு அந்திக்கு வந்திடுறேன். எதுக்கும் நீங்க ஆளுங்களே வச்சு அந்த மூணு பேரையும் நோட்டமிட்டுக் கிட்டே இருங்க... நாளேக்கு பூராவும் நாம் ரொம்ப முழிப்பாய் இருக்கோணுமுங்க, ஐயா..." என்று 'அடைத்து' விட்டு, அந் தச் சமூகத் தொண்டரை வழியனுப்பி வைத்தான், மாணிக்கம்.

"புறப்படலாமுங்களா, அம்மான்?"

"ஊம்" என்ருர், அம்பலம்.

படையல் நாற்றுக் கட்டை வேர் கசங்காமல் வாழைத் தழையால் இறுகக் கட்டி முடிந்தான், மாணிக்கம்.

"ஆத்தா, மனசை அலேமோத விடாம, இங்கிட்டேயே குந் திக்கினு இரு. நாங்க போயிட்டு வரட்டுமா?" என்ருர் பெரிய வர்.

"போயிட்டு வாங்க அப்பா!"

காகம் வலது கைப்பக்கம் ஓடி நற்சகுனம் காட்டியது.

சாமி கும்பிட்டுப் படைத்த நாற்றுக் கட்டு அடங்கிய பானே யைக் கெட்டியாகப் பற்றியிருந்த அம்பலகாரரையும், வண்டி யைச் செலுத்திய மாணிக்கத்தையும் சுமந்துகொண்டு மாடுகள் இரண்டும் துடுக்குத்தனமாகத் துள்ளி ஓடின.

இருப்பிடக் கட்டையில் தோது பார்த்துக் குந்தியிருந் தான், மாணிக்கம். அவன் கையில் தார்க்குச்சி இருந்தது. ஆனல், அவன் அதை உபயோகிப்பது துர்லபம். மூக்கணுங்கயிறு விரிந்து இறுகியது.

காட்டாமணக்குப் பத்தைகளேக் கடந்து வழி விலக்கிச் சென்ற அந்தக் கறுப்புக் கண்ணுடிக்காரன், அப்போது மாணிக் கத்தின் நோக்கில் 'விழுந்து' எழுந்து மறைந்தான்.

# 12 மடிப் பிச்சை

உழவு மழை பெய்தது.

நிலவு இனிமேல்தான் வரவேண்டும்.

அன்னக்கிளி பாயும் படுக்கையுமானாள். சுயப் பிரக்ஞை இழந்திருந்த நிலையில் காணப்பட்டாள். விழிகள் மூடிய கோலத்துடன் இருந்தன. இமைகள் மாத்திரம் அவ்வப்போது துடித்தன. விழிக் கடைகளில் நீர்க் கசிவு இருந்தது. தண்ணீர் ஓடும் வடிகால் தகரத்தில் பட்டுத் தெறித்த நீர்த் துளிகளின் அரவம் நெளிந்தது.

ஆதியப்ப அம்பலகாரரின் திறந்த கண்கள் திறந்தவாறே இருந்தன. வழிந்த கண்ணீர் வழிந்தபடி இருந்தது. வெடித்த வெய்துயிர்ப்பு வெடித்தவண்ணமாக இருந்தது.

நடையின் மேல் விட்டத்தில் 'ஒழுகல்' ஏற்பட்டது. நீர்த் துளியின் சிதறல்கள் அன்னக்கிளியின் கால்மாட்டில் இறைந்தன. அதை உணர அன்னத்துக்கு நினைவு கிடையாது. அதை அறிய அம்பலத்துக்கு உணர்வு இல்லை.

மழை நின்றது.

இருந்தாற்போன்று முனகல் ஒலி கேட்டது.

பொல்லாக் கனவைக் கண்ட நமைச்சலில் விழித்துப் பார்த்தார் அம்பலம்.

அன்னக்கிளியின் உதடுகள்—வெளுத்த உதடுகள்—முனகிக் கொண்டேயிருந்தன: "மச்சான்! ... நீங்க என்னை ஏச்சுப்புட மாட்டீங்களே, மச்சான்! ... அயித்தை மவனே! ... சொல்லுங்களேன்! ... எனக்கு மானம்தான் சொத்து சொகம், உசிர் அல்லாம்! ... அதுதான் எனக்கு பொறந்த வூட்டுச் சீதனமாக்கும்! ... புட்டுவச்சுச் சொல்லுங்க! ..."

"ஆத்தா!"—உயிர்க் கழுவில் துடித்தார் அம்பலம். வாடித் துவண்ட நிலையில் இருந்த அவருக்கு நெஞ்சை அடைத்தது.

நேற்றைக்கு அன்னக்கிளி மண்டையில் அடிபட்டதில் இருந்து உள்ளுக்குள்ளாக அடித்த காய்ச்சல் அந்திக்குத்தான் சுய உருவை காட்டியது. ஆசாரியை அழைத்து வந்தார், அம்பலம். 'தேசாவரச் சூரண' த்தை தேனில் குழைத்துக் கொடுத்தார். நொய்க்கஞ்சி வைத்துக் கொடுத்தாள், கோடிவீட்டுப் பொன்னம்மா. நடவு முடிந்து மாணிக்கம் வரும்போது இருட்டு செறிந்திருந்தது. செய்தியறிந்து பதறினன் அவன். இரவு முச் சூடும் அம்பலமும் மாணிக்கமும் கண்ணேடு கண் பொருத வில்லை. பொன்னம்மா பாசத்துடன் அவர்களைக் கெஞ்சிப் பார்த் தாள், தான் சோறுக்கிப் போடுவதாக. அவர்கள் இருவருமே ஒப்பவில்லை. அவர்கள் இருவருக்குமே அன்னம்தான் இலட்சியக் குறிப்பாளுள்.

பொழுது விடிந்தது. ஆம்; பொழுது மட்டுமே விடிந்தது. ஆனல், அன்னத்திற்குக் காய்ச்சல் விடவில்லை.

பொன்னுத்தா கவலையுடன் வந்து பார்த்துக் கண்கலங்கிச் சென்ருள்.

கருக்கலோடு புறப்பட்ட மாணிக்கம் இட்டிலிப் பொட்ட லத்தோடு வீடு திரும்பினன். ஓர் இட்டிலியை எடுத்து மங்குத் தட்டில் வைத்துக்கொண்டு அன்னத்தை எழுப்பக் குரல் கொடுத் தான். அவள் மூச்சுப் பறியவில்லை. தொண்டையில் 'கபம்' வேறு பேசியது.

"அன்னம் தூங்கட்டும். இந்த நேரத்திலேயாவது தன் னேட பாளத்த கயிட்டத்தை மறந்திடட்டும். ஆமாப்பா, மாணிக்கம்" என்று சொல்லிவிட்டார் அம்பலம்; மகளின் உடம் பைப் போர்வையால் போர்த்தினர்; கால்மாட்டில் இருந்த குந்தாணியை எட்டி வைத்தார்.

"நீங்க பல்லேத் தீட்டி வாய் கொப்பளிங்க. இந்தாங்க

"வேப்பங் குச்சி" என்றான் மாணிக்கம்.

அவனைக் கண்ணீருடன் நிமிர்ந்து நோக்கி விளித்த அம்பலம், "மாணிக்கம், நீ எனக்கு இட்டிலி கொண்டாந்திருக்கே. இல்லையா? ..." என்று கேட்டார் வேதனையின் நெட்டுயிர்ப்புடன்.

"ஆமாங்க அம்மான்; நேத்து முச்சூடும் பல்லிலே பருக்கை தட்டுப்படாம இருந்திட்டீங்களே? வயசு காலத்திலே பட்டினி கெடக்கப்புடாதுங்க!" என்றான் மாணிக்கம்.

"நேத்தைக்கு முச்சூடும் என் மகளுக்கு தன் யாபகமே இல்லையே, மாணிக்கம்? ... எனக்குச் சோறு தண்ணி செல்லுமா? ... நீ இப்பவாச்சும் பலகாரம் சாப்பிட்டியா? ..."

"ஊம்" கொட்டினான் அவன்.

"நீ பொய் பேசிப் பழகாத புள்ளே. ஆனா. இப்பைக்கு எனக்காகவும் அன்னத்துக்காகவும் பொய் சொல்லுறே. நீ இன்னம் எதுவும் சாப்பிட்டிருக்கமாட்டே. நீ போய் முதலிலே சாப்புடு. ஒனக்குத்தான் எங்களாலே ஏகப்பட்ட கஷ்டம்! ......ஒரு வகையிலேயும் எங்களாலே ஒனக்கு உபகாரமில்லே. அதுக்காகத்தான் ஒனக்கு இத்தனை தொல்லைங்க. இதை நான் சொல்லிக் காட்டுறதுகூட ஒனக்குப் பிடிக்காது. சரி, விட்டுப்புட்டேன். நீ போய்ச் சாப்பிடு" என்றார், அம்பலம்.

"நான் சொல்லி நீங்க சாப்பிட்டா, நானும் போய்ச் சாப்பிடுறேன். வயலுக்கு வேறே போய்த் திரும்பியாகணும். நீங்க இங்கிட்டே இருங்க. வெக்களிச்சதும் ஆசாரி ஐயா வந்து கை பார்ப்பாங்க!"

அம்பலம் பல் துலக்கினார். விபூதி இட்டுக்கொண்டார். "எந் தங்கமான தங்கம் இப்பிடிப்பட்ட தீவினைக்கு ஆளாகி, கிழிச்சுப் போட்ட கத்தாழை நார்போல கெடக்குது. அதுக்கு என்ன வகை பண்ணுறது, எப்பிடி வகை பண்ணுறது அப்பிடின்னு எம் புத்திக்கு வெளிச்சம் காட்டலே மாட்டேங்குதே ...

என்னோட சொக்கப் பச்சை மகளுக்கு மேனியிலே காச்சல் இல்லே, அது மனசுக்குத்தான் காச்சல். அதான் போட்டு அன்னத்தை அலக்கொடுத்து ஆட்டிப் படைக்குது!" என்றார் அம்பலம்; விம்மலுடன் குந்தினார். கால்களைத் தடவிக்கொண்டார்.

இட்டிலிகளைத் தட்டில் வைத்து நகர்த்தினன், மாணிக்கம். "அம்மான், நீங்கதான் எதையும் வெளிக்காட்டிக்கிடாம இருக்கணும். நீங்க படுற வேதனையை அன்னம் கூடியமட்டுக்கும் அறியுறதுக்கு விட்டுப்புடாதீங்க. வீரமணி காலிலே விழுந்து, அதை அன்னத்துக்கிட்டே கொண்டாந்து ஒப்படைச்சுப்புடுறேனுங்க. அப்பாலே பாருங்க, ஏந்திருச்சுக் குந்திப்புடுமுங்க... ஆத்தா சத்தியமாச் சொல்லுறேனுங்க, அன்னம் மாதிரி ஒரு ஒசந்த பொண்ணு வீரனிக்குக் கெடைக்கிறதுக்கு அது கோடித் தவம் செஞ்சிருக்க வேணுமுங்க... அன்னத்துக்கு கண்ணாலம் கட்டினதும் அது வீரமணியை நல்ல வழிக்குத் திருப்பிப்பிடும்; நல்ல வழியாத் திருத்திப்புடும். அந்த மாயம் அதுக்குத் தெரியும். அன்னம் நல்லவிதமா எழுந்து நடமாடிப்புட்டா, அப்பத்தானுங்க எனக்கு நல்ல மூச்சு வரும். ஆத்தாளுக்கும் நேந்துக்கிட்டிருக்கேனுங்க, அம்மான்."

ஆதியப்ப அம்பலம் நெடுமூச்செறிந்தார். "மாணிக்கம்! நேருக்குச் சொல்லப்புடாது. ஒன்னைப்போல மாணிக்கத்தைக் கண்ணுப்புறத்திலே காணுறது ரொம்ப ரொம்ப அபூர்வந்தான்... அன்னம் சமைஞ்ச கிட்டணியிலே நீ உலுப்பைச் சேலே வாங்கி வைக்கிறதுக்கு சேதி கேட்டே. அப்பவே நான் சொல்லிப்புட்டேன், அன்னம் என்னோட தமக்கை மகன் வீரமணிக்கின்னு. அந்த உண்மையை உள்ளது உள்ளபடி புரிஞ்சுக்கிட்டு, அந்த ஆத்திரத்தையும் நீக்கிவிட்டு, வழக்கம்போலவே நீ எங்கிட்டே பாசமா இருந்து வருறே. இப்பிடிப்பட்ட அதிசயத்தை உன் ஒருத்தனலேதான் செஞ்சுக்காட்ட ஏலும்!" என்றார் பெரியவர். "அன்னம் நல்ல சிரிப்புச் சிரிச்சாத்தான் என்னோட

உசிரு எம் மேனியிலே தங்கும்! ஆமா!..." என்று தொடர்ந்தார். பிறகு, "சரி. நீ போயிட்டு வா. இந்தாப் பாரு. நான் சாப்பிட ஆரம்பிச்சிட்டேன்" என்று மெய்ப்பித்துக் காட்டிய வகையில் இட்டிலியைக் கிள்ளி வாயில் போட்டுக்கொண்டார். "நீ பசியாறிப்புட்டு அங்கிட்டாலே போ!," என்று நினைவூட்டினார்.

மாணிக்கம் "ஆகட்டும்" என்றான். "நீங்க கவலைப்படாதீங்க. அன்னத்துக்கு நல்ல வழி காட்டுவா ஆத்தா!" என்று சமாதானம் சொல்லிப் புறப்பட்டான். காலை இளம்பரிதியின் கதிர்கள் அவனுடன் சென்றன.

தவளைகளின் ஈனக் குரல் விட்டு விட்டுக் கேட்டது.

அப்போதுதான் சுய உணர்வு எய்தினார், அம்பலம். "மச்சான்! என்னை நீங்க ஏச்சுப்புட மாட்டீங்களே, மச்சான்!... எனக்கு மானம்தான் சொத்து, சொகம், உசிர் அல்லாம்!..." என்று அன்னம் சற்று முன் 'பிறுத்தி' க்கொண்டிருந்ததை முன்னும் பின்னும் விட்டு நெஞ்சில் வாங்கிக்கொண்டு தவித்தார். "ஆத்தா" என்று மகளைத் தொட்டு எழுப்பினார், தந்தை.

தன்னுணர்வு பெற்றுக் கண்களை மூடி மூடித் திறந்த அன்னக்கிளி புரண்டு படுத்தாள். நினைவாக, மேல் சேலையை நன்கு போர்த்திக் கொண்டாள். வலது கையால் தலையை அணை கொடுத்தவளாகப் படுத்திருந்தவள், இப்போது தன் தகப்பனாரை உன்னிப்பாகப் பார்த்தாள். புறப்பட்ட நிலவின் சீதளக் கதிர்கள் அவள் முகத்தில் நிறைந்தன. கைவிளக்கு மங்கல் பூத்து எரிந்தது. அந்தச் சன்னமான ஒளியில் அம்பலத்தின் சோர்ந்த முகம் தெரிந்தது.

"அப்பா, தெகைச்சுப்போய் இருக்கீகளே?... பாவி நான் படுத்துக் கிடந்துப்புட்டேனே?... ஒரு கை பிடிச்சு, என்னைத் தூக்கி விடுங்க. சோறு ஆக்கணுமில்ல?... வாவாண்டை வந்திருச்சே?..." என்று கேட்டுத் தானே எழும்ப முயன்றாள் அன்னம்.

"ஆத்தா! எனக்குப் பசியில்லே!..." என்று நேற்றில் இருந்து அன்று இரவுவரை 'தக்கா முக்கியா,' அவள் படுத்த படுக்கையாகக் கிடப்பதை அறிவித்தார்.

"ஐயையோ! ரெண்டு நாளா ஒங்களுக்குச் சோறு இல்லியா?... குளமங்கலத்து அயித்தை மவன் எங்கே?"

அவர் விவரம் சொன்னார்: "மாணிக்கம் வந்திடும். வளமையா வார நேரம் தாண்டிப் போச்சு. இப்ப பத்து நாழிக்கு மேலே ஆகியிருக்குமே?... ஆத்தா, நீ எந்திரிக்கப்படாது. பொன்னம்மா சோறு வடிச்சுப் போட்டுச்சு... நீ படுத்துக்க."

அன்னம் மறுபடியும் எழுந்து உட்கார முயன்று, அவ்வாறே எழுந்து குந்தினாள். கன்னி முடுக்கில் கிடந்த தலையணையை எடுத்துச் சாய்மானம் வைத்துக்கொண்டாள். பிறகு எழுந்து, 'வரக் காப்பி' வைத்துக் கொடுத்தாள். "இந்தாப் பாருங்க, காய்ச்சல் விட்டிருச்சு; வேர்த்துக் கொட்டுது!" என்று சொல்லித் தன் வேர்வையை நிரூபணமாக்கிக் காட்டினாள், அவள். அவள் சிந்தனைவசப்பட்டுக் காணப்பட்டாள். அப்புறம் கண்களைத் துடைத்துக் கொண்டாள். முகத்தில் பச்சை நரம்புகள் ஓடியிருந்தன. தந்தையின் களைத்த முகம் கண்டு, 'அப்பா சாப்பிடலை; அவுக சாப்பிட்டிருக்கவும் மாட்டாக. எந்நேரமானாலும் சோறு ஆக்கிப் போடவேணும்!' என்று நினைத்துக் கொண்டாள்.

"அப்பா! அப்பறமா என்ன ரோசிச்சீங்க?" என்று முகத்தைத் துடைத்துக்கொண்டே நடைக்கு வந்தாள், அன்னம். 'மண்டை உடை' நின்று போயிருந்ததாக அவளுக்குப் பட்டது.

"எதைப் பத்தி ஆத்தா?"

"என்னைப் பத்தித்தான்!..." அழுத்தம் திருத்தமாகப் பேசினாள், அன்னம். ஏதோ ஒரு முடிவின் அமைதியைக் காட்டின அக் கண்கள்! அப்படித்தானே?...

அம்பலம் ஒருகணம் தம் மகளை ஊடுருவி விழித்தார். பதில் என்ன கொடுப்பது என்று புரியாமல் புதிர் சூழ இருந்தது, அவரது பார்வை. பிறகு தோல் உரிந்திருந்த உதடுகளைத் தடவிக்கொண்டார். அவிழ்ந்திருந்த குடுமியைத் தட்டி முடிந்து கொண்டார். பின்னர் பேசத் தொடங்கினார்.

"ஆத்தா, நீதான் ஒன்னைப்பத்திச் சொல்லவேணும். ஒன்னைப்பத்திப் பேச ஒனக்குத்தான் தெரியும். அல்லாத்துக்கும் சட்டுப்புட்டுன்னு ஒரு வழி செய்ய வேணுமே!.... வாயைத் தொறந்து சொல்லிப்புடு. மனசைத் தொறந்து பேசிப்பிடு, ஆத்தா! ..." என்று புகன்றார், ஆதியப்ப அம்பலகாரர். அவருடைய உள்மனம் அடித்துக்கொண்டது. மூச்சு முட்டி அடக்கமாக வெளிப்பட்டது. அடித் தொண்டையிலிருந்து புகைச்சல் இருமல் புறப்பட்டது. சோகம் மண்டிய லேசான புன்னகை தூவி, "ஊம், பேசு, ஆத்தா" என்று தூண்டினார்.

அன்னக்கிளியின் கண்கள் வாசற்புறம் சென்று மீண்டன. அவள் கண்கள் பிரகாசமடைந்தன. சீதளக் காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட முடிக் கற்றைகளை காதோரங்களில் ஒழுங்குபடுத்திக் கொண்டாள்; சேலையைச் சீர்செய்துகொண்டு, உதடுகளில் புன்னகையைச் சீராக வெளியிட்டாள். அழகாகச் சம்மணம் கோலி உட்கார்ந்து கொண்டாள்.

அப்பொழுது அங்கு மாணிக்கம் வந்து நின்றான்.

"அந்தாலே அயித்தை மவன் வந்தாச்சு! ... குளமங்கலத்து அயித்தை மகனைத்தான் சொல்லுறேனுங்க. வாங்க, இப்பிடிக் குந்துங்க! ..." என்றாள் அன்னம்.

அம்பலகாரர் பின்வசம் திரும்பி மாணிக்கத்தைப் பார்த்தார்.

மாணிக்கம் அப் பார்வையில் எதை அனுமானம் செய்து கொண்டானோ? "அன்னம்! ஒடம்பு சீராயிடுச்சா?," என்று மிகுந்த கவலையுடன் விசாரித்தான்.

"ஆமாங்க" என்று நாணத்தின் பூவையெனச் செப்பினுள், அவள்.

"அம்மான் நான் கொஞ்ச நேரம் திண்ணையிலே குந்திக் கிறேன். நீங்களும் அன்னமும் முக்கியமாப் பேசிக்கிட்டிருக்கீங் களே! ..." என்று சொல்லி அங்கிருந்து நகரத் துடித்தான், மாணிக்கம்.

அன்னம் அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு அற்புதமாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு எல்லோருக்கும் வாய்த்துவிட முடி யாததுதான். "நீங்க இருங்க. நீங்க இருந்தாக வேணு மூங்க! ..." என்று அவனைப் பார்த்துக் கூறினுள்.

பிறகு தன் தந்தையின் பக்கமாகத் திரும்பினுள். "அப்பா! ... என்னைப்பத்தின எம் முடிவைச் சொல்லிப்புட வேணும் நான்! ஆமா! ... இப்பவே சொல்லிப்புடுறேனுங்க! ... அதுக்குமுன்னே, அப்பா, ஒரு தாக்கலை நீங்க மறந்திருப்பீங்க. இப்ப நான் நெனைப்புக் கூட்டுறேனுங்க... ஒரு கடுத்தம்... அப்ப நான் சின்னப் பொண்ணு. சோளத் தட்டைகளை நம்ப ஒசரமான பட்டறையிலே மேயச் சொல்லி நம்ம ஊரு அயித்தை மவன்கிட்டேச் சொன்னீங்க. நான் பட்டறை மேலே நின்னுக் கிட்டு தட்டைங்களை வாங்கிப் போடுறேன்னு அவுக கிட்டே சொல்லி, அவுகளைக் கீழே நிக்கச் சொன்னேன். நான் படிமரத் திலே ஏறிக்கிட்டிருக்கையிலே கால் தவறிடுச்சு; பாவாடைக் கரைக்கட்டு தண்டைத் திருகிலே சிக்கிடுச்சு போல. நான் வசகெட்டுத் தரையிலே சாஞ்சு கால் ஒடிய இருந்தேன். அப்ப, நம்ப அயித்தை மவன்... அதான் நம்ப ஊர் அயித்தை மவன் ஓடியாந்து என்னைக் காப்பாத்துறதுக்குள்ளாற, இந்த குளமங் கலத்து அயித்தை மவன் தெய்வமாட்டம் முந்திக்கிட்டு ஓடி யாந்து என்னை ஏந்தி அணைச்சுக் காப்பாத்திட்டாங்க. இவுங்க மட்டும் அந்தச் சமயத்திலே வராம இருந்திருந்தாக்க, அப் பவே என் காலு முடமாகியிருக்கும்! ... அப்ப இந்த அயித்தை மகன் செஞ்ச உதவியை நான் எப்பவும் நன்னியோட நினைச்சுக் கினுதான் இருக்குறேனுங்க... அந்த ஆபத்து ஒடம்பைப்பத்தி னது—ஆனு, இப்ப வந்திருக்குற ஆபத்து மொத்தி. இது நம்ம குடும்பத்தோட மானத்துக்கு வந்திருக்கிற ஆபத்து! ... இந்த ஆபத்துக்கும் இந்த அயித்தை மவன்... ஆமாங்க அப்பா, இந் தக் குளமங்கலத்து அயித்தை மவன்தான் நமக்குக் கை கொடுக்க வேணும்... வெள்ளையாச் சொல்லிப்புடுறேன். இவுக தான் எனக்கு மடிப் பிச்சை போடணும்! ... என்னை இந்த அயித்தை மவன்கிட்டே ஒப்படைச்சிருங்க, அப்பா! ... இந்த என்னோட ஆசைக்கு இந்த அன்பான மச்சான் சம்மதம் தாராங்

களான்னு கேளுங்க அப்பா! நானே அவுககிட்டே வலியக் கேட்டுப்புடணும்னுதான் இருந்தேன். எனக்குக் கூச்சமா இருக்குங்க, அப்பா!... கேளுங்க அப்பா!..." என்று உணர்ச்சிகளின் சுழிப்புடன் உருக்கமாகப் பேசி நிறுத்தினுன், அன்னக்கிளி. விழி முனைகளில் இருதுளித் திவலைகள் ஆனந்தக் கண்ணீரின் முத்திரையாகச் சிந்தின.

குந்தியிருந்த மாணிக்கம் அப்படியே திகைத்துவிட்டான். அவன் கண்கள் மாலை மாலையாகக் கண்ணீர் சிந்தின.

"அன்னம், ஒம் பேச்சு எனக்கு சொப்பனத்திலே கேட்கிற கணக்கிலே இருக்குது!...ஒரு காலத்திலே நான் ஒனக்காகத் தவசு பண்ணிக்கிட்டு இருந்தேன். அப்பாலே, எப்படி எப்படியோ காரியம் மாறிப்போச்சு. கடைசீலே, என்னோட நெஞ்சிலே இருக்கிற ஒன் நினைப்போடவே என் காலத்தை அந்தரங்க சுத்தியோட கழிச்சிப்போடணும்னு இருக்கையிலே, வீரமணியோட அழுச்சாட்டியக் கூத்து எம் மனசு நிம்மதியைக் கெடுத்திருச்சு. அது—வீரமணி செஞ்ச அத்தனி ஒடுங்கினதும், எப்பாடு பட்டும் 'அதை' ஒங் கையிலே ஒப்படைச்சு, அதோட கெட்ட புத்தியைத் திருத்தச் செஞ்சு உம் மனசுக்கு ஒத்த வீரமணியும் நீயும் மணக்கோலத்திலே இருக்கிற காட்சியைப் பார்த்துப் பரவசம் அடைஞ்சிற வேணும்னு வேண்டாத தெய்வம் பாக்கியில்லாம வேண்டிக்கிட்டேன். ஆனு, இப்ப...? அம்மான் மகனே!... நீ சொல்லி நான் எதையும் தட்டினதில்லே. குருவிக்குத் தகுந்த ராமசரம் மாதிரி என்னாலான எங் கடமையை எந்த விதப் பிரதி பிரயோசனத்தையும் நினைக்காமச் செஞ்சுப் பழகிப்பிட்ட ஏழை நான். இம்புட்டுப் பெரிய பாக்கியத்தை நீ எனக்குக் குடுப்பேன்னு நான் நெனைக்கவே இல்லே. அன்னம்!... எந் தெய்வமாயிருந்த சீதேவியாச்சே நீ?... தேடிவந்த தெய்வமாச்சே நீ?..."

மேற்கொண்டு அவனுல் பேச இயலவில்லை. விழி விளிம்புகள் நீர் கட்டின.

ஆதியப்ப அம்பலம் மாணிக்கத்தின் நடுங்கும் கைகளைத் தம்முடைய நடுங்கிக்கொண்டிருந்த கைகளால் அன்புடன் இறுகப் பற்றித் தம் கண்களில் ஒற்றிக்கொண்டார். "மாப்புள்ளே, எங்களைக் காப்பாத்திட்டீங்க நீங்க... எங்க மானத்தைக் காப்பாத்திப்புட்டீங்க!... எம் மனசுப்பிரகாரமே எம் பொண்ணும் முடிவு செஞ்சிருக்குதே, அதான் ஆத்தா காட்டியிருக்கிற நல்ல விடிவு!... இனிமே நான் பொழைச்சுக் கெடப்பேனுங்க, மாப்புள்ளே!... மனசுக்கு மனசுதான் சாட்சி, மற்றதுக்கு தெவீ

வமே சாட்சியிங்கிறது மெய்யாயிருச்சு!... ஒங்களை நான் ஏழேழு சென்மத்துக்கு மறக்கவே ஏலாதுங்க!..." என்று உணர்ச்சி கொப்பளிக்கப் பேசினர் பெரியவர். கண்ணீர் கைகளை நனைத்தது.

"அம்மான், நமக்குள்ளே இப்பிடிப் பேசிக்கிறப்புடாதுங்க. நீங்க இடுற ஆணைப்படி நடக்கிறதுக்குக் கட்டுப்பட்டவன் நான். ஒங்க பாசமும் அன்பும்தான் என்னை வளர்த்துச்சு; காந்தி பக்தி என்னை நல்ல பாதையிலே பழக்கிச்சு... ஒங்களுக்கு எப்பவுமே கட்டுப்பட்டவன் நான்தானுங்க! அந்த நன்னியை மறக்காதவனுங்க இந்த ஏழை!..." என்றான் மாணிக்கம்; உணர்வுகளின் சங்கமத்தில் அவன் திக்குமுக்காடி நின்றான்.

"இப்ப என்னோட மானத்தை—மரியாதையை—மதிப்பைக் கட்டிக் காப்பாத்திப்புட்டீங்க, நீங்க! இனி இந்தக் கிழவன் ஆயுசு கெட்டிங்க, இனிமே இந்தக் குடுகுடு கிழவன் தாத்தா ஆகிப்புட்டுத்தாங்க கட்டையைப் போடுவேன்!... இனிமே நான் தலை நிமிர்ந்து நடப்பேனுங்க!... அல்லாம் ஆத்தாளோட விளையாட்டுத்தான்... அல்லாமே அவளோட கருணைதான்... ஊம், நான் எதை நினைக்கிறது? எதை மறைக்கிறது?... அந்தப் பாவி சின்னச்சாமி என்னென்ன சூதும் கெடும்பும் பண்ணிப்புட்டான்... வயிறு எரிஞ்சு சொல்லுறேனுங்க... புதுப் பணம் சம்பாரிச்சவுங்களும், பரம்பரையாயுள்ள பணக்காரங்களும் ஊர் நாட்டிலே எத்தனையோ பேர் இல்லையா? அவங்க ளல்லாம் இந்த பித்தலாட்டக்காரன் மாதிரியாவா தரையிலே கால் பாவாமல் ஆடுறாங்க... அற்பனுக்குப் பவிசு வந்திடுச்சு... ஆடுறான்!... ஆனா, ஆத்தா இவனைவிட ஓசத்தியாய் ஆடுறவன்னு தெரியாதுபோலே!... அவன் விதைச்ச வினையை அவனே அறுத்துக்கிடாம தப்ப விட்டுப்புட மாட்டாங்க, ஆத்தா மூத்தவ!... என் வூட்டு வாசலிலே ஆத்தா முதல் தீப மரியாதையை ஏத்துக்கிறது அவனுக்குப் பொச்சரிப்பு. அதான் இம்புட்டுக் கூத்துக்கும் மூலம். இந்தக் கிழவன்கிட்டே எப்பவுமே அவன் சம்பமுங் கையிருப்பும் சவடாலும் சாயாதுங்கிறதை அவன் புரிஞ்சுக்கலே!... இனிமே புரிஞ்சுக்க வச்சுப்புடுறேன்!...... ஆமா!"

பெரியவர் பேசி நிறுத்தினர்.

மாணிக்கம் குறுக்கிட்டான்.

"அம்மான், ஒரு சேதி உங்களுக்குத் தெரியாது போலே... அந்தச் சின்னச்சாமி அம்பலம் அரசாங்கத்துக்குக் காட்டின புள்ளிக்கு மேலே—ரொம்ப உபரியா நெல்லைக் கிட்டங்கியிலே

கள்ளத்தனமாப் பதுக்கி வச்சு. அந்தத் துப்பை ரகசியப் போலீசு மூலம் அறிஞ்ச அரசாங்கம், அந்த நூறு நெல் மூட்டைகளையும் பறிமுதல் செஞ்சு அரசாங்கத்திலே நடவடிக்கை எடுத்தாங்க. நெல் பறிமுதலோட அபராதம் வேறே ஐநூறு ரூவா அரசாங்கத்திலே போட்டாங்களாம், மதியத்துக்கு. அந்தப் பணத்தைச் சின்னச்சாமி கட்டியிருக்காரு. ஆனு, என்ன அதிசயம் நடந்துச்சுன்னு தெரியுங்களா? அவர் அபராதம் கட்டின நோட்டு ஒருமிக்கவே கள்ள நோட்டாம்! ... விதி அவரு கண்ணை மறைச்சிருக்குது. அவசரத்திலே ரூபாய்க் கட்டுகளை மாத்தி எடுத்துக்கிட்டுப் போய்க் கட்டியிருக்காரு... ஆளை உள்ளாறப் புடிச்சுப் போட்டாச்சுங்க. இனிமே பழங் கதையெல்லாம் அம்பலத்துக்கு வந்துடும்... இனிமே அவரு மீளவே முடியாது... இனிமே அவருக்கு சிறைதான் ஒலகம்... வினை அறுப்பு முடிஞ்சிருச்சுங்க அம்மான். அவர் செஞ்ச வினையை அவரே அறுவடை செஞ்சுக்கிட்டாருங்க! ..."

அம்பலகாரர் மூக்கின் மேல் விரலை வைத்தார், "அடபாவி! ..."

மாணிக்கம் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். "இன்னொரு நடப்பையும் சொல்லிப்புடணும். சின்னச்சாமி அம்பலத்தோட ஆள் ஒருத்தன் கறுப்புக் கண்ணாடி போட்டுக்கிட்டு இங்கிட்டு அலைஞ்சான். கோயமுத்தூர்க்காரன். கள்ள நோட்டுகளைக் கொண்டாந்து, ஒரு நல்ல நோட்டுக்கு அஞ்சு கள்ள நோட்டு வீதம் குடுத்து ஊர்ச் சனங்களை ஏமாத்துறதுக்கு வந்தவன், அவன்! அந்த ஆளை வச்சு, நம்ம வீரமணியோட அம்புட்டுப் பணத்தையும் இந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரன்கிட்டே அள்ளிக் குடுத்து கமிஷன் தட்டிக்கிட பார்த்திருக்கார், சின்னச்சாமி அம்பலம். பண ஆசை எந்தக் கோடீசுவரனைத்தான் விட்டுச்சு? நம்ம வீரமணியும் இதுக்கு ஆசைப்பட்டுச் சம்மதிச்சிருந்தாரு... இந்தத் துப்பு எனக்குக் கச்சிதமாத் தெரிஞ்சு... கொஞ்சம் முந்தி அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரன் தோல் பையோடே வீரமணி வூட்டு வாசலிலே மிதிக்கையிலே, அந்த ஆளைக் கையும் களவுமாப் புடிச்சிக் குடுத்திட்டேன், தாணாக்காரங்கிட்டே... வீரமணியைத் திருத்தி நல்ல ஆளா ஆக்கி, அன்னத்துக்கிட்டே ஒப்படைச்சு, நீங்க ஒங்க தமக்கையாருக்குக் கையடிச்சுக் கொடுத்திருந்த அந்த வாக்கைக் காப்பாத்தி வைக்க வேணுமேயிங்கிற ஒரு நல்ல எண்ணத்திலேதான் வீரமணி அகப்பட்டுக்கிடாமச் செஞ்சேன். இல்லாங்காட்டி, அந்த ஆளும் இந்நேரம் கம்பி எண்ணியிருக்க வேண்டியவர்தானுங்க, அம்மான்! ..."

அம்பலகாரர் வாயடைத்து நின்றார்.

மாணிக்கத்தை அண்டினுள், அன்னம்.

"மச்சான், நான் கொடுத்துவச்சவதான்; அதான் ஒங்க ளேயே எடுத்துக்கிட்டேன் வலுக்கட்டாயமாய்! ..." பாசத்தின் கண்ணீர் மடை திறந்தது. "எனக்கு மானம்தான் சொத்து சொகம் அல்லாம். அதாங்க எனக்குப் பொறந்த வூட்டுச் சீத னம், மச்சான்..." என நிறைத்தாள்.

"அன்னம், நானும் கொடுத்துவச்சவன்தான். அதான் ஒன்னே நான் எப்பவோ எடுத்துக்கிட்டேனே தன்னடைச்ச சூப் பாய்! ... உன்னுடை நல்ல சிரிப்புத்தானே எனக்கு பரிசச் சீர்..." என்று முறுவல் பூத்து, ஆனந்தத்தின் மிதப்புடன் அன்னக்கிளி யின் நெற்றிக்கட்டைத் தடவிக் கொடுத்தான் மாணிக்கம். கண் ணீர் வழிந்தது.

அம்பலகாரர், அவர்கள் இருவரையும் பாசச் செறிவுடன் நோக்கி விநயபூர்வமான புன்னகையைக் கொட்டினார்.

அவர்களின் அருகே அந்தப் பெட்டைக் கோழி குதூகலத் துடன் சுற்றிக் கொண்டிருந்தது. வீரமணிக்கு விருந்து வைக்க வேண்டி, மாணிக்கம் கொணர்ந்த கோழி அல்லவா அது?

அப்போது, திண்ணைப் பக்கம் ஏதோ 'தடதட' வென்று சத்தம் கேட்கவே, கைவிளக்குடன் வெளியே விரைந்து வந் தாள், அன்னக்கிளி.

மேலத் திண்ணை ஓரத்தில் இருந்து கறுப்புத் துணி போர்த் திய ஓர் உருவம் விரைந்தோடியதைக் கண்டுகொண்டாள், கீழ்த் திண்ணையில் விளக்கை வைத்துவிட்டு, வாசலில் கிடந்த குத்துக் கழி ஒன்றைச் சுழற்றி, ஒழுங்கையில் ஓடிக்கொண்டி ருந்த அந்த ஆள்மீது வசம் பார்த்து வீசினுள். நிலவு கைகொடுத் தது.

மறுகணம் "ஐயோ!" என்ற அலறல் ஒலி கேட்டது.

அவள் தொடர்ந்தாள்.

மூடப்பட்டிருந்த கறுப்புத் துணி நழுவியது.

இப்போது அன்னக்கிளி திடுக்கிட்டாள். "ஐயோ!" என்று பதிலுக்கு அலறினுள்.

அந்த உருவம் மாயமாய் மறைந்தது.

திரும்பியவள் திணறிய மனத்துடன் மேலத் திண்ணையை அடைந்தாள். ஒரு முடிச்சு இருந்ததும், அருகில், கசங்கிய கடி தம் ஒன்றும் இருந்ததும், மேற்படி விளக்கு மேல் திண்ணைக்கு இடம் மாறியவுடன் தெரியலாயின.